1993 அக்டோபர் 29]

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

78—

மேதரா இனத்தவரை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்தல்

* 11221—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதிகளில் வாழும் பிற்படுத்தப்பட்ட மேதரா இனத்தவரை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ''மேதரா'' இனத்தவர் தமிழ் நாட்டில் உள்ள மலைப் பகுதிகளில் வசிக்கவில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

பத்தொன்பதாம் பட்டியல்

கைரேகையிடும் கடைநிலை ஊழியர்களுக்கு கையெழுத்திட பயிற்சி அளித்தல்

1—

வினா எண் 11028—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைரேகை போடும் கடைநிலை ஊழியர்களுக்கு, கையெழுத்து போடக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பை (Pay drawing) அதிகாரிகளிடம் ஒப்படைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) கையெழுத்து போட்டால்தான் சம்பளம் என்று அறிவுறுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 51-ன்படி, உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு, அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன.

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) இப்பொருள் குறித்து அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இது போன்ற அரசாணை பிறப்பிக்க வேண்டியது இல்லை என அரசு கருதுகிறது.

2—

வாக்காளர் பட்டியல் தயாரிப்பை கணிப்பொறி மூலம் பதிவு செய்தல்.

வினா எண் 19678 ஏ—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாக்காளர் பட்டியல் தயாரிப்பை கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்.

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3—

பரிசுச் சீட்டில் பரிசு விழுந்தும் அதைக் கேட்டுப் பெறாத தொகையை பிற இனங்களுக்குச் செலவு செய்தல்.

வினா எண் 20301—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக லாட்டரியில் பரிசு விழுந்தும் அதைக் கேட்டுப் பெறாத தொகைகளை ஆதி திராவிடர் மாணவர் விடுதி பராமரிப்புச் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

தமிழ்நாடு பரிசுச் சீட்டு மூலம் கிடைக்கப் பெறும் நிகர வருவாயில் பரிசுத் தொகை கேட்டுப் பெறாத தொகை தனியாக பிரிக்கப்படுவதில்லை. எனவே, அத்தொகையினை ஆதி திராவிடர் மாணவர் விடுதி பராமரிப்பு செலவுக்கு ஒதுக்கீடு செய்வது என்ற கேள்வி எழவில்லை.

4—

பரமக்குடி நகராட்சியின் சில பகுதிகளுக்கெனத் தனி வாக்குச் சாவடி அமைத்தல்.

வினா எண் 20384—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் மஞ்சல்பட்டினம், தர்மராஜபுரம் ஆகிய பகுதிகளுக்கான வாக்குச்சாவடியைத் தனியாக மஞ்சல்பட்டினம் நடுநிலைப் பள்ளியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், 200. பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சல்பட்டினம் மற்றும் தர்மராஜபுரம் பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்காக மஞ்சல் பட்டினத்தில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய வாக்குச்சாவடி அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசுக்கு வந்துள்ளன.

(ஆ) இச்செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5—

பரமக்குடி ஒன்றியத்தின் சில பகுதிகளுக்குப் புதிய வாக்குச்சாவடி அமைத்தல்.

வினா எண் 20385—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியத்தைச் சார்ந்த சுந்தர்நகர், தண்டர்தேவிப்பட்டினம், ஐ.டி.ஐ. பகுதிகளில் மக்களுக்கு தனியாக புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், 200. பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுந்தர்நகர் மற்றும் தண்டர் தேவிப்பட்டினம் பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்ப தற்கு வசதியாக அவர்களை அருகில் உள்ள பரமக்குடி நகராட்சி யில் உள்ள செளராஷ்டிர மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள 30 (ஆண்கள்) மற்றும் 30 (பெண்கள்) என்ற எண்ணுள்ள வாக்குச் சாவடிகளில் சேர்ப்பதற்கு அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளன.

(ஆ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளது.

6—

குமரக்குடிக்கெனத் புதிய வாக்குச் சாவடி அமைத்தல்.

வினா எண் 20386—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி குமரக்குடிக்குத் தனியாக புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

பிய்யனந்தல் கிராமத்தில் புதிய வாக்குச்சாவடி அமைத்தல்.

வினா எண் 20398—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி கமுதக்குடி வாக்காளர்களைப் பிரித்து பிய்யனந்தல் கிராமத்தில் புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், 200. பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிளாக் எண். 5. பிய்யனந்தல் பிளாக் எண். 4. நண்டுபட்டி மற்றும் பிளாக் எண். 8 ஆத்தியேந்தல் ஆகிய பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்காக பிய்யனந்தல் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் புதிய வாக்குச்சாவடி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

8—

சோமநாதநகர் நெசவாளர் குடியிருப்புப் பகுதிக்குப் புதிய வாக்குச்சாவடி அமைத்தல்,

வினா எண் 20399—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, தெளிச்சாதநல்லூர் தேர்தல் வாக்குச்சாவடியைப் பிரித்து சோமநாதநகரில் புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், 200. பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோமநாதநகர் நெசவாளர் குடியிருப்புப் பகுதியில் உள்ள வாக்காளர்களுக்காக சோமநாத நகரில் உள்ள சௌராஷ்டிரா ஆரம்பப் பள்ளியில் புதிய வாக்குச் சாவடி அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசுக்கு வந்துள்ளன.

(ஆ) இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

9—

சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கும் திட்டம்.

வினா எண் 20931—திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அதிக வாக்காளர்கள் உள்ள சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

இல்லை.

10—

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை திருச்சியில் அமைக்கும் திட்டம்.

வினா எண் 19816—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையைத் திருச்சியில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. சட்ட அமைச்சர் :

அரசிடம் இத்தகைய செயற்குறிப்பு இல்லை,

11—

தமிழகத்தில் சட்ட ஆணையம் அமைத்தல்.

வினா எண் 20370—திருமதி கே, மரியம் உல் ஆசியா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சட்டக்குழு (Law Commission) அமைக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு, கே, ஏ, கிருஷ்ணசாமி. சட்டத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் சட்ட ஆணையம் (Law Commission) அமைக்கலாம் என்று அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது,

(ஆ) சட்ட ஆணையம் அமைப்பு (Composition) பற்றிய செயற்குறிப்பு குறித்து இவ்வரசு தீவிர பரிசீலனை செய்துவருகிறது, இது குறித்து முடிவெடுக்கப்பட்டவுடன் விரைவில் அச்சட்ட ஆணையம் அமைத்துருவாக்கப்படும்,

12—

சங்ககிரி குன்று புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்குதல்,

வினா எண் 9632—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) சங்ககிரியில் குன்று புறம்போக்கில் வாழும் சுமார் 1,500-க்கு மேற்பட்டவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில். விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு எஸ், டி, சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சங்ககிரியில் குன்று மற்றும் தோப்பு புறம்போக்கில் வசிப்பவர்களுக்கு நிலவகை மாறுதல் செய்த பின்னர் பட்டா வழங்கப்படும்,

13—

திண்டுக்கல் நகராட்சியின் சுற்றுப் பகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 9729—திரு, எம், ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகராட்சியின் 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க அரசு தடையாணை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். பொதுமக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இத்தடையாணை விலக்கிக் கொள்ள அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், டி, சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் அண்ணா மாவட்டம் திண்டுக்கல் நகரைச் சுற்றி 16 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வீட்டுமனைகள் ஒப்படை செய்யக் கூடாது என அரசாணை நிலை எண் 376, வருவாய்த் துறை, நாள் 8—3—1998-இல் அரசு தடை விதித்துள்ளது, அரசின் பிற்கால நிலத்தேவைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இதனை முழுமையாக தளர்த்த இயலாது, எனினும் ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

வாலாஜாபாத் ஒன்றியத்தை வாலாஜாபாத் தாலுக்காவாக ஆக்குதல்.

வினா எண் 10042—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டம் காஞ்சிபுரம் தொகுதி வாலாஜாபாத் யூனியனை வாலாஜாபாத் தாலுகாவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் தனித் தாலூகாவாக பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15—

நில அளவைக் கட்டணத்தை ஒரே அளவில் விதிப்பதற்கானத் திட்டம்.

வினா எண். 10657—திரு. என். ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில அளவைக்கான கட்டணம், நஞ்சை. புஞ்சை என்ற நில அடிப்படையில் வித்தியாசம் உள்ளதோடு, மாவட்டத்துக்கு மாவட்டம் தாலுக்காவுக்கு தாலுக்கா வித்தியாசப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு எஸ், டி, சோமசுந்தரம். வருவாய்த் துறை அமைச்சர்;

ஒவ்வொரு வட்டத்திலும் நடைமுறையில் உள்ள தினக்கூலி விகிதம், நிலங்களின் தன்மை, நில அளவைக் கற்களின் கிரயம். பூமியில் நடப்படும் கல் கிரயம், மற்றும் கூலி ஆகியவை பட்டா தாரர்களின் நிலப் பரப்பிற்கு ஏற்ப வசூல் செய்யப்படுவதால் நில அளவைக் கட்டணம் வட்டத்திற்கு வட்டம் மாறுபடும். எனவே, இதைத் தவிர்க்க இயலாது.

16—

கொல்லி மலையை தனிவட்டமாக மாற்றும் திட்டம்,

வினா எண் 10731—திரு, கா, சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், கொல்லி மலையை வட்டமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு, எஸ், டி, சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

17—

பள்ளிப்பட்டு கிராமத்தில் புதிய துணை சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்,

வினா எண் 11691—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி மேல் பள்ளிப்பட்டு கிராமத்தில் துணை சார்பதிவாளர் அலுவலகம் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்பெறும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

18—

கோவை மாவட்டத்தில் சில தனிவட்டங்கள் அமைத்தல்.

வினா எண் 11792—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு, நெகமம், கோவில்பாளையம் பகுதிகளைத் தனி தாலுக்காக்களாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மாநிலத்தில் உள்ள பெரிய வட்டங்களைப் பிரித்து புதிய வட்டங்கள் அரசின் நிதி நிலைக்கேற்ப உருவாக்கப்பட பரிசீலிக்கப்படுகின்றன.

19—

ஜமுனா மருதூரில் தாலுக்கா அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 11876—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜமுனா மருதூரில் தாலுக்கா அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இக்கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

20—

நாட்டரசன் கோட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 14467—திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதியில் நாட்டரசன் கோட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

21—

1992-ஆம் ஆண்டு பரமக்குடி தொகுதியில் ஏற்பட்ட வெள்ளச் சேதம்.

வினா எண் 16713—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1992 நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பரமக்குடி தொகுதியில் உயிர் இழந்தவர் எத்தனை பேர்?

(ஆ) அரசு வழங்கிய உதவித் தொகை எவ்வளவு?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) 1992 நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பரமக்குடி தொகுதியில் உயிர் இழந்தவர்கள் யாருமில்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

22—

உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்களை பிரித்து வழங்குதல்.

வினா எண் 17005—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்களைப் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு வழங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பெண்கள் அவ்வாறு பயன் அடைந்துள்ளனர்?

(இ) அவ்வாறு பெண்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): எழவில்லை.

23—

வருவாய்த்துறையில் தொலைத் தொடர்பு கருவியை பயன்படுத்துதல்.

வினா எண் 17030—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

(அ) காவல் துறையில் பயன்படுத்தப்படும் தொலைத் தொடர்பு கருவியை (Transmitters) வருவாய்த் துறையிலும் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட இச் செயற் குறிப்பு நிருவாகத்தரம் மேம்படுத்தும் முறையின்கீழ் பத்தாம் நிதிக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட உள்ளது.

24—

மலைப் பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்துதல்.

வினா எண் 11414—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப் பகுதிகளில் கிராம மக்களின் வசதிக்கென நடமாடும் நியாய விலைக் கடைகள் (Mobile Ration Shop) ஏற்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

மலைப்பகுதி கிராம மக்களின் வசதிக்கென இதுவரை பதினொரு நடமாடும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

25—

ஆணையாம்பட்டி புதூர் பகுதி மக்களுக்கு நியாய விலைக் கடை திறத்தல்.

வினா எண் 20309—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம் ஆணையாம்பட்டி புதூர் பகுதி மக்களுக்கான பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம் ஆணையாம்பட்டி புதூர் கிராமப் பகுதியில் மொத்தம் 170 குடும்ப அட்டைகள் தான் உள்ளன. ஆணையாம்பட்டி புதூரில் தனியே பகுதி நேர கடை அமைத்தால் பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெற்றதாக செயல்பட இயலாது. எனவே, ஆணையாம்பட்டி புதூரில் பகுதிநேர கடை திறக்க வாய்ப்பில்லை.

26—

பகுதி நேர கிராம அமுதம் அங்காடி அமைத்தல்.

வினா எண் 20379—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாறு வார்த்தலை கிராமத்தில் பகுதிநேர கிராம அமுதம் அங்காடி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

குத்தாலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 662 குடும்ப அட்டைகளுடன் வில்லியநல்லூரில் நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. அஞ்சாகு வார்த்தலை

கிராமத்தில் உள்ள 155 குடும்ப அட்டைதாரர்களும் வில்லிய நல்லூர் கிராம நியாய விலைக் கடையில் பொருள் பெற்று வருகின்றனர். அஞ்சாகு வார்த்தலை கிராமத்திற்கும் வில்லிய நல்லூர் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. தான். மேற்படி கடையினை பிரித்து 155 குடும்ப அட்டை களுடன் அஞ்சாகு வார்த்தலை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறந்தால் இரண்டு கடைகளும் நட்டத்தில் தான் செயல்படும். எனவே, தற்போதுள்ள அரசு விதிமுறைகளின் அடிப்படையில் நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் திருமணஞ்சேரி ஊராட்சி அஞ்சாகு வார்த்தலை கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை.

27—

புதிய அரிசி ஆலைகள் துவங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்.

வினா எண் 21730—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய அரிசி ஆலைகள் துவங்குவதற்கு உரிமங்கள் வழங்குவதற்கான நடைமுறைகள் எளிதாக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

தமிழ்நாட்டில் புதிய அரிசி ஆலைகள் துவங்குவதற்கு அனுமதிச் சீட்டுகள் (Permits) வழங்குவதற்கான நடைமுறைகள் எளிதாக்க முடிவெடுக்கப்பட்டு ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு 8—6—1993-ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

28—

பெரியகுளம் தொகுதியில் காலராவினால் இறந்த மக்களுக்கு நிதி உதவி அளித்தல்.

வினா எண் 9053—திரு. எம் பெரியவீரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியில் காலராவால் இறந்த மக்களுக்கு நிதி உதவி செய்ய அரசு முன்வருமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

குடல் அழற்சி / காலரா நோயினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி அளிப்பதற்கு அரசு விதிகளில் எவ்வித வழிவகையுமில்லை.

மக்களுக்கு அரசு செய்யும் சேவைகளை முறையாக பயன்படுத்தி நோய் பரவாமல் இருக்க விதிமுறைகளை கடைபிடிக்க தவறுவதால்தான் அதிகமான நோய் பாதிப்பும் இறப்பும் ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் தன் நலம் காத்து பொது நலத்தையும் சுற்றுப்புற சூழலையும் சுத்தமாக வைத்து காய்ச்சிய நீரைப் பருகி நோய் கண்டவுடன் உடனடியாக தக்க மருத்துவ சிகிச்சைப் பெற்றால் காலராவால் இறப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

29—

சென்னை அரசு பொது மருத்துவ மனை பிணவறையில் தேங்கியுள்ள சடலங்களை அப்புறப்படுத்துதல்

வினா எண் 9135— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் அரசு பொது மருத்துவமனையில் உள்ள பிணவறைக் கூடத்தில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளாமல் இருக்கும் சடலங்களை அப்புறப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் உள்ள பிணவறைக் கூடத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளாமல் அப்புறப்படுத்தப்பட வேண்டிய சடலங்கள் எதுவும் இல்லை.

[1993 அக்டோபர் 29

30.—

சிவகாசியில் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண். 9899—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் அரசு அல்லது தனியார் மருத்துவக் கல்லூரி அரசின் அனுமதி பெற்று தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

சங்ககிரி மருத்துவமனைக்கு கூடுதல் வசதி ஏற்படுத்தல்.

வினா எண். 10106—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தாலுகா மருத்துவமனைக்கு கூடுதல் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 அக்டோபர் 29]

(ஆ) 1993-94 ஆம் நிதி ஆண்டு கூடுதல் வசதியாக நுண் கதிர் பிரிவு அமைத்துக் கொடுக்க அரசு ரூ. 2.60 இலட்சம் அளித்துள்ளது.

32—

சேலத்தில் மருந்து தயாரிப்பு மையம் நிறுவுதல்.

வினா எண் 11272—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மருத்துவமனைக்காக மருந்து தயாரிப்பு மையம் அமைத்து சேலம் மாவட்டம் முழுவதும் தேவைப்படும் மருந்துகளை தயாரித்து வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சேலத்தில் மருத்துவமனைக்காக மருந்துகள் தயாரிப்பு மையம் அமைக்க கருத்துரு அரசின் ஆய்விலில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

33—

குடும்ப நலத்திட்டத்திற்கு ஓராண்டு செலவு.

வினா எண் 11383—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நலத்திட்டத்திற்காக ஓராண்டுக்கு (1991–92) ஆன செலவு தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் மத்திய அரசின் பங்கு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) :

குடும்ப நலத்திட்டத்திற்கு மைய அரசினால் 1991–92ஆம் ஆண்டில் துறை வாரியாக செலவிடப்பட்ட தொகை விவரம் கீழ்வருமாறு :—

குடும்பநலத்துறை.

1. குடும்ப நலத்திட்டத்தின்கீழ் 1991–92 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை : ரூ. 3,602.32 இலட்சம்.

2. 1991–92 ஆம் ஆண்டிற்கு குடும்ப நலத்திற்கு மட்டும் பெருந்தலைப்பு (Major Head) "2211-ன்கீழ் செலவிடப்பட்ட மொத்த தொகை : ரூ. 3,512.66 இலட்சம்.

(அ) மத்திய அரசின் பங்கு : ரூ. 3,347.72 இலட்சம்.

(ஆ) குடும்ப நலத்திட்டத்தை ஏற்றுக் கொள்வோர்க்கு மைய அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகைக்கு மேல் கூடுதலான தொகை : ரூ. 164.94 இலட்சம்.

(2) இந்திய மக்கள் தொகை திட்டம் :

1. இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5-ன்கீழ் 1991–92 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் : ரூ. 5,91,27,137.45.

2. இதில் மத்திய அரசின் பங்கு (90 விழுக்காடு) : ரூ. 5,32,14,423.71.

(3) பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை :

		ரூபாய்.
1. மத்திய அரசு திட்டங்கள்	..	2,399.66 இலட்சம்.
2. மாநில அரசு திட்டங்கள்	..	37.22 இலட்சம்.
3. திட்டம் சாராதவை	..	197.64 இலட்சம்
மொத்தம்	..	2,634.52 இலட்சம்.

1993 அக்டோபர் 29]

34—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி நிறுவுதல்.

வினா எண் 11713—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி நிறுவ அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

செங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களை நியமித்தல்.

வினா எண் 11753—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களை நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமனம் செய்யப்படுவர் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

36—

கிராமப் பகுதிகளில் படித்த மாணவர்களுக்கு மருத்துவப்படிப்பு படிக்க கூடுதல் மதிப்பெண் வழங்குதல்.

வினா எண் 12556—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பகுதிகளில் படித்த மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு படிக்க கூடுதல் மதிப்பெண் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

37—

பாளை சாலைப்பாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குதல்.

வினா எண் 12817—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி புதுப்பாளையம் ஒன்றியம் பாளை சாலைப்பாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் துவங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

1993 அக்டோபர் 29]

38—

கோவை அரசு மருத்துவமனைக்கு நவீன கருவிகள் வழங்குதல்

வினா எண் 12842—திரு. வி.கே. லட்சுமணன் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை அரசு மருத்துவமனைக்கு இருதய அறுவை சிகிச்சை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்று நோய் சிகிச்சை ஆகியவைகளுக்கான நவீன கருவிகளை வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வு த்துறை அமைச்சர் :

தற்சமயம் கோவை அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்யத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லை. அடிப்படை வசதிகள் (Infrastructural Facilities) ஏற்படுத்தப்பட்ட பிறகு இருதய சிகிச்சைக்கான இயந்திரங்கள் தேவை ஏற்படும். தற்போது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் தேவையான சிகிச்சைகள் இம்மருத்துவமனையில் செய்யப்படுகின்றன. புற்று நோய் சிகிச்சைக்கான கட்டிடம் முடிவடைந்த நிலையில் உள்ளது. கோபால்ட் தெரபி கருவி வாங்க, நிதிநிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

39—

மகிழங்கோட்டையில் சுகாதார துணை நிலையம் தொடங்குதல்

வினா எண் 13489—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மகிழங்கோட்டையில் பிரதம சுகாதார துணை நிலையம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

40—

வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார மையக் கட்டிடத்தைப் பழுது பார்த்தல்.

வினா எண் 13803—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார மையத்திற்கான கட்டிடத்தைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இராத்புரம் தொகுதியிலுள்ள வடக்கன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை பழுது பார்க்க திட்ட மதிப்பீடுகள் அனுப்பும்படி துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி, கோரப்பட்டுள்ளார். திட்ட மதிப்பீடுகள் அரசிற்கு கிடைக்கப் பெற்றதும் வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

41—

உத்தனப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்ட தாமதமாவதைத் தவிர்த்தல்.

வினா எண் 14476—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்தனப்பள்ளியில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இடம் ஒப்படைப்பு செய்யப்படும் கட்டிடம் கட்ட காலதாமதமாவது அரசு அறியுமா ?

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், உத்தனப் பள்ளியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென துப்பு கானப்பள்ளி ஊராட்சி, ஐந்து ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஒதுக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அந்நிலம் மருத்துவத் துறைக்கு மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றத்திற்குப் பின்னர் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப செயற் குறிப்புக்கள் பரிசீலிக்கப்படும்.

42—

கெம்ப்ளாஸ்ட் ஸ்பிரிட் தொழிற்சாலையின் கழிவு நீரைக்கட்டுப் படுத்தல்.

வினா என் 14498—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் மேற்குப் பகுதியில் கெம்ப்ளாஸ்ட் ஸ்பிரிட் தொழிற்சாலையின் கழிவு நீரைக் கட்டுப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள திரு வாளர்கள் கெமிக்கல்ஸ் மற்றும் பிளாஸ்டிக் (இ) லிமிடெட், கழிவு நீரை சுத்தப்படுத்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளனர். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் ஆவியாவதற் காக சூரிய ஒளியினால் ஆவியாக்கும் அமைப்பில் விடப்படு கிறது. தொழிற்சாலைக்கு வெளியே கழிவு நீர் வெளியேற்றப் படுவதில்லை. தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப் பாடு வாரியத்தால் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

43—

சிவகாசி அரசு மருத்துவமனையின் வசதிகளை மேம்படுத்தல்.

வினா எண் 14675—திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனையில் போதிய மருந்துகள், மின்வசதி, தண்ணீர் வசதி இன்றி நோயாளிகள் அல்லல்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காமராசர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனைக்கு போதுமான அளவுக்கு மருந்துகளும் தேவையான மின் வசதி மற்றும் தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

44—

மதுரையில் மருத்துவம் தொடர்பான ஒலி—ஒளி நூலகம் தொடங்குதல்.

வினா எண் 14959—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மருத்துவம் தொடர்பான ஒலி-ஒளி நூலகம் ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) இது இருதயம் தொடர்பாக பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு பயன்படுமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஒலி—ஒளி சம்பந்தப்பட்ட மின்னணு கருவிகள், தொலைக்காட்சி பெட்டி (T. V.), ஓவர்ஹெட் புரொஜெக்டர் (Over head Projector) மற்றும் சிலைடு புரொஜெக்டர் (Slide) முதலியன தற்போது மதுரை மருத்துவக் கல்லூரியின் மத்திய நூலகத்தில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் கல்வி உபயோகத்திற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டு உள்ளன.

(ஆ) ஆம்.

45—

செங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்புத் துறைகள் துவங்குதல்

வினா எண் 14974—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்புத் துறைகள் துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) செங்கம் அரசு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை பிரிவுகள் துவங்க செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

46—

தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய் பரவுதலைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 15051—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எய்ட்ஸ் நோய் தமிழ்நாட்டில் அதிகமாகப் பரவுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது?

(ஆ) தற்சமயம் சென்னை நகரில் எத்தனை பேருக்கு எய்ட்ஸ் நோய் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் இரத்த தானம் செய்வோரின் இரத்தத்தை முக்கியமான பரிசோதனைகளான மலேரியா, வி.டி.ஆர்.எல்., ஹெபடைடிஸ் மற்றும் எச்.ஐ.வி. ஆகியவைகளுக்கான சோதனைகள் செய்த பின்னர்தான் இரத்த தானமாகப் பெறப்பட்ட இரத்தத்தை தேவையான பிணியாளர்களுக்கு செலுத்த வேண்டும் என்றும் அரசும் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் மூலமும் கண்டிப்பான உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை எல்லா அரசு மருத்துவமனைகளும் கண்டிப்புடன் கடைபிடிக்கின்றன.

இரத்த வங்கிகள் மற்றும் இரத்த பரிசோதனை நிலையங்களில் இரத்தத்தை சோதனை செய்ய எலிஸா ரீடர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எலிஸாரீடர் இல்லாத மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் தாலுக்கா மருத்துவமனைகளில் உள்ள சிறிய இரத்த வங்கிகளில் இரத்தத்தை எச்.ஐ.வி. தொற்றுதல் உள்ளதா என்பதை கண்டறிய, மைய அரசு சென்னை மருத்துவ பண்டகசாலையின் மூலம் வழங்கிய செரோடியா கிட்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் உள்ள எல்லா இரத்த வங்கிகளிலும் பணிபுரியும் மருத்துவர்கள், ஆய்வுக்கூட நுட்பனர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பாதுகாப்பான இரத்தம் வழங்குவதற்கான எல்லா வகையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன. எலிஸா ரீடர் மற்றும் செரோடியா கிட்ஸ் ஆகியவைகளை கையாள்வதற்கான பயிற்சி அவைகளை வழங்கிய கம்பெனி அலுவலர்கள் மூலம் செய்முறை பயிற்சிபடி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

தற்போது எல்லா அரசு மருத்துவமனைகளிலும் தானாக முன் வந்து இரத்த தானம் செய்பவர்களிடமிருந்து மட்டுமே, நல்ல பாதுகாப்பான இரத்தம் பெறப்படுகின்றது. இரத்தத்தில்

1993 அக்டோபர் 29]

கிருமிகள் உள்ளனவா என்று எல்லா வகை சோதனைகள் மூலம் கண்டறிந்த பின்னரே நல்ல இரத்தத்தை தேவையான பிணியாளர்களுக்குச் செலுத்தப்படுகின்றன.

சென்னை மருந்து கட்டுப்பாட்டு அலுவலர் இரத்த வங்கிகளுக்கு உரிமம் அளிக்கிறார். எல்லா குருதி வங்கிகளும் உரிமம் முடிந்தவுடன் புதுப்பிக்கப்பட வேண்டும்.

அரசும் பல தன்னார்வு தொண்டு நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து பொது மக்களுக்கும், கம்பெனிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் எய்ட்ஸ் நோய் பற்றிய விவரங்கள், அதை வராமல் தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்ச்சி கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறே ஒவ்வொரு மாவட்ட அளவிலும் விழிப்புணர்ச்சி மாநாடுகள் நடத்தப்படுகின்றன. அனைவருக்கும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 ஆம் நாள் "உலக எய்ட்ஸ் தினம்" கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஜனவரி 1992 முதல் அக்டோபர் 1992 முடிய 62,864 இரத்த மாதிரிகள் எலிஸா முறையில் சோதனை செய்யப்பட்டது. இதில் 669 மாதிரிகள் எலிஸா பாசிடிவ் என்று கண்டறியப்பட்டது. இதில் 328 வெஸ்ட்டர்ன் பிளாட் முறையின் மூலம் எலிஸா பாசிடிவ் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

1989 முதல் 1992 வரை எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 47 என டாக்டர் ஜெயகர்பால், எயிட்ஸ் மேனேஜ்மெண்ட் பொறுப்பு மருத்துவர் கூறியுள்ளார். இவர்கள் பரிசோதனை மூலம் அறியப்பட்டவர்களென தெரிவித்துள்ளார்.

47—

ஏற்காடு மருத்துவமனையில் சில கருவிகள் பயன்படுத்தப் படாமல் இருத்தல்.

வினா எண் 15227—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு மருத்துவமனையில் Suction apparatus, Shadowless lamp ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை தேவைப்படும் மருத்துவமனைகளுக்கு அவற்றை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் உள்ள சக்ஷன் அப்பாரட்டஸ் மற்றும் ஷேடோலெஸ் லேம்ப் ஆகிய கருவிகள் நல்ல நிலையில் இயங்கி அம்மருத்துவமனையின் உபயோகத்திலுள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

48—

திருச்சி அரசு மருத்துவமனைக்கு மோட்ஸ் கான் கருவி வாங்குதல்.

வினா எண் 15381—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் உள்ள பெரிய மருத்துவமனைக்கு ''ஏ'' மற்றும் ''பி'' மோட்ஸ்கான் சாதனம் வாங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

திருச்சி அரசினர் மருத்துவமனையில் ஏற்கெனவே ''பி' மோட்ஸ்கான் கருவி உள்ளது. ''ஏ' மோட்ஸ்கான் கருவி வாங்கும் செயற் குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

49—

பொன்னேரியிலுள்ள மருத்துவமனையை விரிவு படுத்துதல்.

வினா எண் 15994—திரு. எ. ரவிக்குமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரியில் அமைந்துள்ள தாலுகா மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும்?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) பொன்னேரி அரசு தாலுகா மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

50—

புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மனநோய்ப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 16001—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலுள்ள அரசு தலைமை மருத்துவ மனையில் தனியாக மனநோய்ப் பிரிவு தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டையிலுள்ள அரசு தலைமை மருத்துவ மனையில் தனியாக மனநோய்ப் பிரிவு தொடங்க அரசிடம் செயற் குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

51—

அரசு மருத்துவமனைகளில் ஸ்கேன் கருவிகள் நிறுவுதல்.

வினா எண் 16184—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

(அ) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் ஸ்கேன் கருவி வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம், கடலூர், திருச்சி, திண்டுக்கல், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தலைமையக மருத்துவமனைகளில் தற்போது அல்ட்ரா ஸவுண்ட் ஸ்கேன் கருவி உள்ளது. அவை நன் முறையில் இயங்கி வருகின்றன. புதுக்கோட்டை, இராமநாதபுரம், நாகப்பட்டினம், ஈரோடு, தர்மபுரி, நாகர்கோயில் மற்றும் பெரியகுளம் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தலைமையக மருத்துவமனைகளுக்கு அல்ட்ரா ஸவுண்ட் ஸ்கேன் கருவி வாங்க அரசின் அனுமதி அளிக்கப்பட்டு கருவிகள் வாங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஏழு மாவட்ட தலைமையக மருத்துவமனைகளிலும் அல்ட்ரா ஸவுண்ட் ஸ்கேன் கருவி வாங்கி நிறுவிட அரசின் நிதி நிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

காவேரிப்பட்டினம் ஆரம்ப சுகாதார மையத்தில் அறுவை சிகிச்சை அரங்கு கட்டுதல்.

வினா எண் 16987—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் ஆரம்ப சுகாதார மையத்தில் குடும்ப நலத்திட்ட அறுவை சிகிச்சை அரங்கும், படுக்கை வசதி கொண்ட அறையும் 1992–93 ஆம் ஆண்டில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 7.50 இலட்சம் செலவில் ஆறு படுக்கைகள் கொண்ட குடும்ப நலத்திட்ட அறுவை சிகிச்சை

1993 அக்டோபர் 29]

அரங்கு கட்டஅரசு ஆணை (நிலை) எண் 8813, நாள் 31—6—1993-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

53—

டி. குன்னத்தூர் ஆதிதிராவிடர் பழைய குடியிருப்புகள் சுகாதாரக் கேடுவறாமல் தடுத்தல்.

வினா எண் 17171—திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி. குன்னத்தூர் ஆதிதிராவிடர் பழைய குடியிருப்புகளுக்கு அருகில் அரவை மில் இயங்குவதால் குடியிருப்பு மக்களுக்கு சுகாதார்ரக் கேடுகள் விளைவிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி. குன்னத்தூர் ஆதிதிராவிடர் பழைய குடியிருப்புகளுக்கு அருகில் திருவாளர்கள் முருகன் அரிசி மற்றும் மாவு மில், மற்றும் திருவாளர்கள் பராசக்தி அரிசி மற்றும் மாவு மில் ஆகிய இரு அரவை ஆலைகள் உள்ளன. இவ்விரு அரவை ஆலையினால் பொதுமக்களுக்குசுகாதாரக் கேடு விளைவிப்பது குறித்த புகார் ஏதும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பெறப்படவில்லை. இத்தொழிற்சாலைகளால், ஆதி திராவிடர் குடியிருப்பு காலனிகளுக்கு காற்று மாசோ அல்லது சுகாதாரக் கேடுகளோ ஏதும் இல்லை.

54—

அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கழகம் அமைத்தல்.

வினா எண் 17397—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் மற்றும் மருத்துவமனை சாதனங்கள் அளிப்பதற்கான மருத்துவக் கழகம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் மருந்துகள், அறுவை சிகிச்சை சாதனங்கள் மற்றும் தளவாடங்கள் போன்றவற்றை வாங்கி விநியோகிக்க சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தை இந்திய கம்பெனி சட்டம் 1956-ன் கீழ் நிறுவ அரசு ஏப்ரல் திங்கள் 1993 ஆம் ஆண்டு உத்திரவு வழங்கியுள்ளது. இக்கழகத்தினை உருவாக்க தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் இக்கழகத்தை நிறுவுவதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

55—

நாகைப்பட்டினம் காயிதே-மில்லத் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 17562—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகைப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

56—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லாமை.

வினா எண் 19165—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மருந்துகள் எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளின் தேவைக்காக பெறப்பட்ட மருத்துவப் பொருட்களின் மதிப்பு ரூ. 2,60,85,928 ஆகும். மருந்துப் பொருட்கள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவைக்கேற்ப அவ்வப்போது பகிர்ந்தளிக்கப்படுகிறது. இடனால் அனைத்து மருத்துவமனைகளிலும் தேவையான மருந்துகள், போதுமான அளவுக்கு கையிருப்பில் உள்ளன. அவசரமாக தேவைப்படும் மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்து கொள்வதற்கேதுவாக எல்லா மருத்துவ அலுவலர்களுக்கும், மாவட்ட இணை இயக்குநருக்கும் தேவையான நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

57—

பரமக்குடியில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தல்.

வினா எண் 19184—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடியில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

பாகநத்தத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 19415—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

59—

தர்மபுரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தல்.

வினா எண் 19523—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு ஏற்படுத்தப்படும்?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டத்தில் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

குடவாசல் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

வினா எண் 19832—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு பொது மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் மற்றும் படுக்கை வசதிகள், அதற்குரிய கட்டிட வசதிகளும் அவசர சிகிச்சைக்கான நவீன கருவிகளும் மருந்து களும் கிடைத்திடச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

அனைத்து தாலுகா மருத்துவமனைகளிலும், 32 படுக்கை கள் அமைக்கப்பட வேண்டும் என அரசு மேற்கொண்ட முடிவுப் படி தற்பொழுதுள்ள 16 படுக்கைகள் கொண்ட குடவாசல் அரசு தாலுகா மருத்துவமனைக்கு 32 படுக்கைகளாக உயர்த்தப் பட்டு அரசாணை எண் 1550, சுகாதாரம், நாள் 11–12–1991ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி முடிந்த பிறகு மருத்துவர் பணியாளர் போன்ற வசதிகள் செய்து தரப் படும்.

61—

குப்பாச்சிப்பாறை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 19970—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி தொகுதி, வேப்பனப்பல்லி ஒன்றியம், சூப்பாச்சிப்பாறை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் 1993–94 ஆம் ஆண்டு தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

62—

அரசு மருத்துவமனைகளில் கருத்தடை சாதனம் விநியோகித்தல்.

வினா எண் 20081—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் IUCD என்ற கருத்தடை சாதனம் போதிய அளவில் அரசு மருத்துவமனைகளில் விநியோகம் செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தமிழகத்தில் IUCD என்ற கருத்தடை சாதனம் போதிய அளவில் அரசு மருத்துவமனைகளில் விநியோகம் செய்யப்படுகின்றன.

(ஆ) 1991–93 ஆம் ஆண்டில் 3,97,990 கருத்தடை சாதனம் தாய்மார்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. அதில், 3,54,106 கருத்தடை சாதனங்கள் அரசு மருத்துவமனையிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

63—

காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு இ.சி.ஜி. வழங்குதல்.

வினா எண் 20104—திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி அரசு மருத்துவமனையில் மின் இருதய வரைபடக் கருவி (இ.சி.ஜி.) இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கருவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): காரைக்குடி அரசு மருத்துவமனையில் மின் இருதய வரைபடக்கருவி (இ.சி.ஜி.) ஒன்று 24—4—1993 முதல் நன்முறையில் இயங்கி வருகின்றது.

64—

தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் அடிப்படை வசதி.

வினா எண் 20206—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இயங்கி வரும் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளனவா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உள்ளன.

[1993 அக்டோபர் 29

65—

அருமனை மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு தொடங்குதல்.

வினா எண் 20250—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, அருமனை மருத்துவமனையில் 'எக்ஸ்ரே' பிரிவு செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) திருவட்டார் தொகுதி, அருமனை அரசு மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

66—

மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

வினா எண் 21182—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டயம் மற்றும் பட்ட மேற்படிப்பில் மயக்கம் அளிக்கும் மருத்துவர்களுக்கு இட ஒதுக்கீட்டை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

67—

மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் நடவடிக்கையை விளம்பரப் படுத்தல்.

வினா எண் 21268—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நடவடிக்கைகளை மக்களுக்கு விளம்பரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்காக நடவடிக்கைகளை மக்களுக்கு விளம்பரப்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

68—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனை ஆய்வுக் கூடத்தை விரிவுபடுத்தல்

வினா எண் 21291—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் ஆய்வுக் கூடத்தை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனையில் தற்பொழுது உள்ள ஆய்வுக் கூடத்தை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

மருத்துவத் துறையில் பணியாற்றுவோர் வாரிசுகளுக்கான மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தல்.

வினா எண் 21366—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறையில் பணியாற்றுவோர் வாரிசுகளுக்கென ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

70—

குடவாசல் மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் 21422—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்–காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவியும் அவசர சிகிச்சை பெற ''ஆம்புலன்ஸ் வேன்'' வசதியும் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

குடவாசல் அரசினர் மருத்துவமனை, வட்ட தலைமையக மருத்துவமனையாகும். தற்போது 16 படுக்கைகள் உள்ளது. அனைத்து வட்ட தலைமையக மருத்துவமனையும் 32 படுக்கைகள் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் குடவாசல் அரசினர் மருத்துவமனையில் உள்ள படுக்கைகள் எண்ணிக்கையை 32 ஆக உயர்த்த, ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. படுக்கை எண்ணிக்கையை 32 ஆக உயர்த்திய பிறகு, நிதி வசதியைப் பொறுத்து, படிப்படியாக எக்ஸ்ரே கருவி மற்றும் அத்தியாவசியத் தேவையாக இருப்பின் ஆம்புலன்ஸ் வசதி இனி வருங்காலங்களில் அமைக்கப்படும்.

71—

சென்னை பொது மருத்துவமனையின் சுற்றுச் சூழலைப் பராமரித்தல்.

வினா எண் 9136—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பொது மருத்துவமனைப் பகுதியில் பேருந்து மற்றும் இரயில் போக்குவரத்து இரைச்சலினால் பாதிக்கப்படுவதால் சுற்றுச் சூழல் சரிவர பராமரிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) சென்னை பொது மருத்துவமனைப் பகுதியில், வாகன போக்குவரத்தால் ஏற்படும் இரைச்சலைத் தவிர்ப்பதற்கு காவல் துறை தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) சென்னை அரசு பொது மருத்துவமனைப் பகுதியில் இரைச்சலைக் குறைக்க, அப்பகுதியில் ஒலி எழுப்பக்கூடாது என்பதற்கான அறிவிப்பு பலகை நிறுவி ''ஒலி அற்ற பகுதி'' என்று அறிவிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், காற்று ஒலிப்பான்கள் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. வாகனங்களிலிருந்து வரும் மாசு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

72—

திரு.வி.க. நகர் பகுதியில் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 10398—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திரு.வி.க. நகர் பகுதியில் பேருந்து நிலையம் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) இப்பகுதியில் பேருந்து நிலையம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம்.

73—

ஆண்டிமடத்திலிருந்து காட்டுமன்னார் கோவிலுக்கு பேருந்து வசதி செய்தல்.

வினா எண் 13035—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்திலிருந்து காட்டு மன்னார்கோவிலுக்கு விளந்தை, பெரியதத்தூர், கீழநெடுவாய் வழியாக புதிய தடத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

ஆண்டிமடத்திலிருந்து விளந்தை, பெரியதத்தூர் கீழநெடுவாய் வழியாக காட்டுமன்னார்கோவில் வரை உள்ள வழித்தடத்தின் நீளம் 27.8 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பேருந்து வசதி பெறாத பகுதிகள் இருப்பதால் சாலைத் தகுதி சான்றிதழ், கோட்டப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டம் கடலூரிலிருந்து கிடைக்கப் பெற்றபின் பேருந்து வசதி செய்து தரப்படும்.

1993 அக்டோபர் 29]

74—

சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு கப்பல் போக்குவரத்து தொடங்குதல்.

வினா எண் 13507— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு கப்பல் போக்கு வரத்து தொடங்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இப்பொருள்பற்றிய செயற்குறிப்பு ஏதும் மத்திய அரசின் ஆய்வில் இல்லை.

75—

நாகப்பட்டிணம், கன்னியாகுமரி தொகுதிகளை அபிவிருத்தி செய்தல்.

வினா எண் 13508— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள நாகப்பட்டிணம், கன்னியாகுமரி துறை முகங்களை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

தமிழகத்திலுள்ள நாகப்பட்டிணம் துறைமுகத்தை மேம் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி துறைமுகத்தை பொறுத்தவரை கப்பல் போக்கு வரத்து ஏதும் இல்லாத காரணத்தால் அது ஒரு சிறு துறைமுக மாகவே இயங்கி வருகிறது.

[1993 அக்டோபர் 29

76—

சென்னையிலிருந்து அந்தமானுக்குப் புதிய கப்பல் விடுதல்.

வினா எண் 13509—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து அந்தமானுக்கு புதிய கப்பல் விட மத்திய அரசினை மாநில அரசு கேட்டுக்கொள்ள உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து அந்தமானுக்கு புதிய கப்பல் விட மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய அவசியமென்று கருதவில்லை.

77—

மண்டலப் போக்குவரத்து அலுவலகங்களில் கணிப்பொறி நிறுவுதல்.

வினா எண் 13834—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மண்டல போக்குவரத்து அலுவலகங்களில் (Regional Transport Offices) மோட்டார் வாகனங்கள் உரிமம், உரிமம் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு கம்ப்யூட்டர் முறை கொண்டு வருவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

78—

அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் வரிசைக்கு நான்கு இருக்கைகள் பொருத்துவது.

வினா எண் 14549—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதர போக்குவரத்துக் கழகங்களால் சென்னைக்கு விடப்பெறும் பேருந்துகளிலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் போலவே வரிசைக்கு 4 இருக்கைகள் என்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை.

79—

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பேருந்துகளை பழுது பார்த்தல்.

வினா எண் 15098—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள எல்லா பேருந்துகளும் மிகவும் பழையனவாகவும், அடிக்கடி பழுதடைந்தும் விடுவதால் பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் சராசரி வயது 28—2—1993-ல் 4.9 வருடங்கள் ஆகும்.

(ஆ) பழைய பேருந்துகளை புதுப்பிக்கும் பணி மத்திய தொழிற்கூடத்திலும், பணிமனைகளிலும் துரிதமாக இப்பொழுது நடைபெற்று வருகிறது.

80—

கம்பன் எக்ஸ்பிரஸ்ற்கு டீசல் என்ஜின் பொருத்துதல்.

வினா எண் 15332— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து காரைக்குடி செல்லும் கம்பன் எக்ஸ்பிரஸின் கரி என்ஜினை டீசல் என்ஜினாக மாற்றி, நேரத்தைக் குறைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இரயில் போக்குவரத்து தேவைக்கு தகுந்தாற்போல இரயில்களை இயக்குவதற்கான டீசல் என்ஜின்கள் குறைவாக உள்ளது. எனவே பயணிகள் இரயிலில் டீசல்என்ஜினை பொருத்தி இயக்குவது பற்றி இரயில்வே வாரியம்தான் தீர்மானிக்க வேண்டும் என்று தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது. எனவே, இப்பொருள் பற்றி மத்திய அரசை வலியுறுத்த ஏதுமில்லையெனக் கருதப்படுகிறது.

81—

எம்.ஜி.ஆர். திட்டில் கலங்கரை விளக்கம் அமைத்தல்.

வினா எண் 16375— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) புவனகிரி தொகுதியில், மீனவர்கள் வாழும் எம்.ஜி.ஆர். திட்டில் கலங்கரை விளக்கு அமைக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இல்லை.

82—

எட்டு மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்யும் அரசு பேருந்துகளில் புஷ்பேக் சீட்டுகள் பொருத்துதல்.

வினா எண் 16569—திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக 8 மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்யும் பேருந்துகளில் புஷ்பேக் சீட்டுகள் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு, 8 மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்யும் வழித்தடத்தில் புஷ்பேக் சீட்டுகள் பொருத்தப்பட்ட பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க குறைந்த கட்டண பேருந்துகளும் (புஷ்பேக் வசதியில்லாத பேருந்துகளும்) 8 மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்யும் வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

83—

மாணவர்களுக்கு சாலை விதிகள் குறித்து பயிற்சி தருதல்.

வினா எண் 17034— திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாணவர்களுக்கு சாலை விதிகள் பற்றிய பயிற்சி தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகர பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சாலை போக்குவரத்து அடிப்படை விதிகளையும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் சிறுவர் போக்குவரத்து மாதிரி பூங்காவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

84—

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களை இணைக்க சொகுசு ரயில் விடும் திட்டம்.

வினா எண் 17138— திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமேஸ்வரம் ஆகிய சுற்றுலாத் தலங்களை இணைக்க மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ''சொகுசு ரயில்'' விடும் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமேஸ்வரம் ஆகிய சுற்றுலாத் தலங்களை இணைக்க மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ''சொகுசு ரயில்'' விடும் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மைய அரசை ஆகஸ்டு 1992-ல் வலியுறுத்தினார்.

1993 அக்டோபர் 29]

85—

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பெண்களை ஓட்டுனராக வும் நடத்துனராகவும் நியமித்தல்.

வினா எண் 17509—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பெண்களை நடத்துனராகவும் ஓட்டுனராகவும் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கென தனி பேருந்துகள் முழுமையாக இயக்கப்படாததால், பெண்களை நடத்துனராக நியமிக்கும் திட்டம் தற்பொழுது இல்லை.

(ஆ) இருந்தபோதிலும், ஆரம்ப முயற்சியாக ஒரு பெண் ஓட்டுனரை நியமனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

86—

சின்னசேலம் நகரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனை துவங்குதல்.

வினா எண் 19401—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் நகரில் தந்தை பெரியார் போக்குவரத் துக் கழக 'பணிமனை' துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

87—

கல்வராயன்மலை அடிவாரத்தில் இருக்கும் தகரைக்கு பேருந்து விடுதல்.

வினா எண் 19403—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஆத்தூர் (சேலம்) நகரிலிருந்து கல்வராயன் மலையின் அடி வாரத்தில் இருக்கும் (தென்னாற்காடு மாவட்டம்) தகரைக்கு வி. கூட்டு ரோடு மேல்நாரியம் பண்ணை வழியாக இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இல்லை.

88—

தமிழ்நாட்டில் இரண்டாவது இரயில் பெட்டி தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 19653—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இரண்டாவது இரயில் பெட்டி தொழிற் சாலை தொடங்க மத்திய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

1993 அக்டோபர் 29]

விடை—]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் இரண்டாவது இரயில் பெட்டி தொழிற் சாலை தொடங்க மத்திய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்ய அவசியமென்று கருதவில்லை.

89—

தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு தேசியத் தலைவர்கள் பெயரிடுதல்.

வினா எண் 19656—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களை ஜவ ஹர்லால் நேரு, ராஜீவ் காந்தி, லால்பகதூர் சாஸ்திரி, காம ராஜர், இந்திரா காந்தி ஆகியோர் பெயரில் இயக்க அரசு நட வடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

'சின்னம் மற்றும் பெயர் (தவறாக பயன்படுத்துவதை தடை செய்தல்) சட்டம் 1950-ன்படி வணிக நிறுவனங்களுக்கு முன்னாள் பிரதமர்களின் பெயர் சூட்டுதல் தடை செய்யப்பட் டுள்ளது. எனவே ஜவஹர்லால் நேரு, ராஜீவ் காந்தி, லால் பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி பெயர்களில் போக்குவரத்துக் கழகங்கள் இயக்க இயலாது. காமராஜர் பெயரில் போக்கு வரத்துக் கழகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனை யில் இல்லை.'

90—

சென்னையிலிருந்து பெரம்பலூருக்கு சொகுசுப் பேருந்து விடுதல்

வினா எண் 19801—திரு. தா. செழியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக சொகுசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

91—

சேலத்திலிருந்து எளம்பிள்ளைக்கு கூடுதல் நடைகள் பேருந்து விடுதல்.

வினா எண் 20418—திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து எளம்பிள்ளைக்கு கல்பாரபட்டி வழியாக தற்போது இயங்கி வரும் பேருந்துகளின் நடைகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

92—

சேரன் பொறியியல் கழகத்தை சேரன் போக்குவரத்துக் கழகத்தோடு இணைத்தல்

வினா எண் 20117—திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

"பொள்ளாச்சியிலுள்ள சேரன் பொறியியல் கழகத்தை மீண்டும் சேரன் போக்குவரத்துக் கழகத்தோடு இணைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

'அரசு ஆணை (நிலை) எண் 795, போக்குவரத்து துறை, நாள் 7—5—93—ன்படி சேரன் பொறியியல் கழகத்தை சேரன் போக்குவரத்துக் கழகத்துடன் இணைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

1993 அக்டோபர் 29]

93—

பள்ளப்பட்டியிலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்து விடுதல்.

வினா எண் 20147—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளப்பட்டியிலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை

94—

நகரப் பேருந்துகள் 40 கி.மீ. வரை செல்ல அனுமதித்தல்.

வினா எண் 20329—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரப் பேருந்துகள் விட, 30 கி.மீ. தூரம் என்று இருப்பதை 40 கி.மீ. வரை செல்ல அனுமதி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

95—

மேட்டூர் ஆர். எஸ்.-ஸிலிருந்து தொப்பூர் வரை நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 20416—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர் பேருந்து வசதி இல்லாத பகுதியான வெள்ளார் தொப்பூர் பகுதியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் மேட்டூர் ஆர். எஸ்.ஸிலிருந்து தொப்பூர் வரை ஒரு நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இத்தகைய செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

96—

ஆட்டையாம்பட்டியிலிருந்து தாரமங்கலத்திற்குப் பேருந்து விடுதல்.

வினா எண் 20419—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதி, ஆட்டையாம்பட்டியிலிருந்து எட்டி மாணிக்கம்பட்டி எளம்பிள்ளைபாப்பாம்பாடி வழியாக தாரமங்கலத்திற்கு ஒரு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

97—

மதுரையில் போக்குவரத்தில் தவறிழைப்போருக்கு உடனுக்குடன் அபராதம் விதித்தல்.

வினா எண் 20537—டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைப் போன்று மதுரையிலும் போக்குவரத்தில் தவறிழைப்போரிடம் உடனுக்குடன் அபராதம் விதிக்க காவல் துறைக்கு அனுமதி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இல்லை.

1993 அக்டோபர் 29]

98—

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் குறைந்தபட்ச வைப்புத்தொகை ரூ. 1,000 ஆக குறைத்தல்

வினா எண் 20619—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் சிறு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முதலீடு செய்வதற்கான குறைந்த பட்ச வைப்புத் தொகை ரூ. 1,000 ஆக குறைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் குறைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் நடைமுறையில் உள்ளபடி பொதுமக்களிடம் இருந்து குறைந்தபட்ச வைப்புத் தொகையாக இரு திட்டங்களின் மூலம் முறையே ரூ. 5,000 மற்றும் ரூ. 3,000 பெறப்படுகின்றது. தற்சமயம் குறைந்தபட்ச வைப்புத் தொகையாக ரூ. 1,000 அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பரிட்சார்த்த முறையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றி பெறின் பொதுமக்களுக்கும் விரிவாக்கத்தக்க சமயத்தில் அனுமதி அளிக்கப்படும்.

99—

பூம்புகார் கப்பல் நிறுவனம் மேற்கொண்டுள்ள பணிகள்.

வினா எண் 21492—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் நிறுவனம் தமிழக அரசுக்கு நிலக்கரி கொண்டு வருவதற்கு மட்டுமே பயன்படுகின்றதா ?

(ஆ) அல்லது தனியாருக்கும் பயன்படுகின்றதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

100—

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 21566—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை, அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரைத் தலைநகராகக் கொண்டு தனி போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

101—

சிவகாசியில் உற்பத்தியாகும் பட்டாசுகளை கப்பல் மூலம் ஏற்றுமதி செய்தல்.

வினா எண் 21581—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் உற்பத்தியாகும் பட்டாசுகளை ஏற்றுமதி செய்ய எந்த கப்பலும் முன்வரவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கப்பல் கிடைக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
ALONE TRIUMPH

1993 அக்டோபர் 29]

102—

விருதுநகர் முதல் கொல்லம் வரையுள்ள இருப்புப் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றுதல்.

வினா எண் 21633—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகரிலிருந்து கொல்லம் வரையுள்ள மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்ற மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விருதுநகரிலிருந்து கொல்லம் வரையுள்ள மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்ற மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

103—

புதிதாகத் துவக்கப்படும் போக்குவரத்துக் கழகத்திற்கு உமறுப் புலவர் பெயரிடுதல்.

வினா எண் 21717—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிதாகத் துவக்கப்படும் போக்குவரத்துக் கழகத்திற்கு உமறுப் புலவரின் பெயர் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்சமயம் புதிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1993 அக்டோபர் 29

104—

நெசவுத் தொழிலில் சில கைத்தறி ரகங்கள் குறைந்து வருதல்.

வினா எண் 10391—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவுத் தொழிலில் சில பாரம்பரியம் மிக்க கைத் தறி இரகங்கள் குறைந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இத்தகைய இரகங்களை நெசவு செய் வோரை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இத்தகைய ரகங்களை நெசவு செய்வோரை ஊக்கு விக்க பாரம்பரியம் மிக்க, கைத்தறி ரகங்களை சென்னையில் உள்ள கலாஷேத்திரா என்ற தொண்டு நிறுவனத்திடமிருந்து சேகரித்து, இதில் சில மாற்றங்களைச் செய்து, புதிய வடி வமைப்புகளை உருவாக்கி, அவைகளை நெசவாளர்கள் பயன் படுத்துவதற்கு, தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுத்து வரு கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

105—

நெசவுத் தொழிலில் துணைத் தொழில் செய்வோருக்கும் நலத் திட்டங்களை விரிவுபடுத்தல்.

வினா எண் 10392—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெசவுத் தொழிலில் பாவு பதப்படுத்தல் அச்சுப் பிணைத்தல், நூல் சுற்றுதல், தார் சுற்றுதல் ஆகிய துணைத் தொழில்களை செய்வோருக்கும் நெசவாளர் நலத் திட்டங் களை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இதன் விவரம் என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) இந்த துணைத் தொழில்கள் புரிவோருக்குத் தற்போது அமலிலுள்ள நெசவாளர் நலத் திட்டங்கள் ஏதும் அளிக்க வழிவகை இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

106—

நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊதியக் குழு அறிக்கையை அமல் படுத்துதல்.

வினா எண் 12248—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊதியக்குழு அறிக்கையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு என நியமிக்கப்பட்ட ஊதியக்குழு தெரிவித்துள்ள அறிக்கை மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு புதிய ஊதிய விகிதங்கள் ஏற்கனவே அமல்படுத்தப்பட்டு விட்டன.

107—

நெசவுத் தொழிலாளர்களுக்கு நவீன எந்திரங்களைக் குறைந்த விலையில் வழங்குதல்.

வினா எண் 13492—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவு தொழிலாளர்களை ஊக்குவிக்க நவீன இயந்திரம் குறைந்த விலையில் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

ஆம். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை ஊக்குவிக்க தறிகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், நவீன இயந்திரங்கள் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

108—

பஞ்சாலைகளுக்கு அரசு வட்டியில்லா கடன் வழங்குதல்.

வினா எண் 15034—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) பஞ்சாலைகள் நவீனப்படுத்தவும், நலிவடையாமல் இருக்கவும் அரசு வட்டியில்லாத கடனில் புதிய நவீன இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தனியார் பஞ்சாலைகளுக்கு அரசு நேரிடையாக வட்டியில்லாக் கடன் வழங்க வழிவகையில்லை. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு பங்கு மூலதனமும் இதர சலுகைகளும் அளிக்கின்றது.

109—

எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் அறக்கட்டளை சார்பில் உயர் கல்விக்குத் தகுதி பெற்றவர் விவரம்.

வினா எண் 16417—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எமனேஸ்வரம், பரமக்குடி பகுதிகளில் கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் டாக்டர் எம்.ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் அறக்கட்டளை சார்பில் எத்தனை பேர் உயர் கல்விக்குத் தகுதி பெற்றவர் ?

1993 அக்டோபர் 29]

(ஆ) இத்திட்டம் மாவட்டம் வாரியாக அமல்படுத்தப் படுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) ஒருவர்.

(ஆ) ஆம்.

110—

நலிவடைந்த நெசவாளர்களுக்கு வீடுகள் மேல் வழங்கப்பட்ட கடனை ரத்து செய்தல்.

வினா எண் 20026—திருமதி எஸ். கனகவல்லி : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவடைந்த நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகள் மீதான கடன்களை ரத்து செய்ய அரசிடம் செயத் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

111—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு நிதியினை உருவாக்குதல்.

வினா எண் 21062—திருமதி கே. பழனியம்மாள் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பெறப்படும் துணிகளின் விலை மற்றும் அதற்கான தள்ளுபடி தொகை ஆகியவற்றை உடனுக்குடன் வழங்குவதற்காக ஒரு நிதியினை உருவாக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அனுமதிக்கும் தள்ளுபடி அளித்து விற்பனை செய்து, கோரும் தள்ளுபடி மானிய கோரிக்கைகளை உடனுக்குடன் பைசல் செய்யும் பொருட்டு ஒரு நிதி உருவாக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

112—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் பஞ்சாலை அமைத்தல்.

வினா எண் 21591—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில், பஞ்சாலை (Spinning Mills) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) தற்போது அரசிடம் நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

1993 அக்டோபர் 29]

113—

வேளாங்கன்னி—வேதாரண்யத்தில் மாற்று வழிப் பாதை அமைத்தல்.

வினா எண் 14000— திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒருவழிப் பாதையாக இருப்பதால் வேளாங்கன்னி, வேதாரண்யம் மாற்று வழிப்பாதை திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

114—

காட்டுச்சூடனூர் அருகே பாலம் கட்டுதல்.

வினா எண் 14535— திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, மாரண்டஅள்ளி, ராயக்கோட்டைப் பாதையில் காட்டுச்சூடனூர் அருகே காட்டாற்று வெள்ளம் சாலை பாதிப்பை ஏற்படுத்துவதால் அங்கு பாலம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

115—

செங்கம் நகரில் புறவழிச் சாலை அமைத்தல்.

வினா எண் 14720—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க போளூர் ரோட்டில் இருந்து வக்காப்பேட்டை வரை புறவழிச் சாலை (Bye-Pass Road) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

116—

தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகைக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 14572—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

117—

பரமக்குடியில் அரசு ஊழியர்கள் குடியிருப்புக் கட்டும் திட்டம்.

வினா எண் 14584—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு ஊழியர் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 120 அடுக்கு வீடுகளை ரூ. 140.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் திட்டத்திற்கு அரசு அதன் ஆணை எண். 50, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 8—1—1987-ல் 1989-90 ஆண்டுக்கான முதன்மைப் பட்டியலில் அங்கீ காரம் அளித்தது. அரசுக்குச் சொந்தமான நிலம் கிடைக்கப் பெறாமையால் திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை. சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதி திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் கட்ட பரமக்குடியில் கமுதகுடி கிராமத்தில் 14.56 ஏக்கர் நிலப் பரப்பினை கிரயத்திற்கு வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அந்த இடத்தில் ஒரு பகுதியில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத் தினை வீட்டு வசதி வாரியத்தால், செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

118—

தலைமைச் செயலக அரசு அலுவலர்களுக்கு ஒரே இடத்தில் வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 15170—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு ஒரே இடத்தில் அரசு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எந்த இடத்தில் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

119—

பட்டினப்பாக்கம் அரசு அலுவலர்கள் குடியிருப்பிற்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம்.

வினா எண் 15189—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, பட்டினப்பாக்கம் அரசு வாடகைக் குடியிருப்பு பகுதிகளுக்குச் சுற்றுச் சுவர் இல்லாததால் பன்றிகள், மாடுகள் உள்ளே நுழைந்து மூளைக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

ஆம். சென்னை, பட்டினப்பாக்கம் அரசு வாடகைக் குடியிருப்பு பகுதிகளுக்கு ரூ. 4.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் கருத்துரு வீட்டுவசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

[1993 அக்டோபர் 29]

120—

பட்டினப்பாக்கம் அரசு அலுவலர்கள் குடியிருப்பில் துப்புரவுப்பணி நடைபெறுதல்.

வினா எண் 15191—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினப்பாக்கம் அரசு வாடகை குடியிருப்புப் பகுதிகளில் தினசரி துப்புரவுப் பணிகள் சரிவர நடைபெறாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, பட்டினப்பாக்கம் காலனியில் துப்புரவுப் பணிகள் சரிவர நடைபெறுகின்றன

121—

காட்டுமன்னார் கோயில் தாலூக்காவில் அரசு அலுவலர்கள் குடியிருப்புக் கட்டுதல்.

வினா எண் 15868—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தாலுக்காவில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் அரசு அலுவலர் குடியிருப்பு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

இல்லை.

122—

சங்ககிரியில் அரசு அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புக் கட்டுதல்.

வினா எண் 15898—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் வீட்டுவசதி வாரியம் மூலம் அரசுக் குடியிருப்புக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

123—

பரமக்குடி நகராட்சி மலையான் குடியிருப்புப் பகுதியில் கழிப்பறைகள் கட்டும் பணி.

வினா எண் 15907—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி மலையான் குடியிருப்பு பகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள கழிப்பறைகள் பாதியில் நின்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 அக்டோபர் 29]

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் உள்ள மலையமான் குடியிருப்பு குடிசைப் பகுதியில் 8 இருக்கைகள் கொண்ட 2 கழிப்பறைகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டன. இக்கழிப்பறைகள் பராமரிப்பு பணிக்காக நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதற்கு முன்னர் சமூக விரோதிகளால் பீங்கான் மற்றும் கதவுகள் சேதப்படுத்தப்பட்டு விட்டன. இதன் காரணமாக இக்கழிப்பறைகள் நகராட்சியிடம் ஒப்படைப்புச் செய்யப்படவில்லை. இக்கழிப்பறைகள விரைவில் பழுது பார்க்கப்பட்டு, நகராட்சி வசம் ஒப்படைக்கப்படும்.

124—

புது வீடுகள் கட்ட அனுமதி அளிக்கும்போது மரங்களை வளர்க்க வலியுறுத்தல்.

வினா எண் 16015—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புது வீடுகள் கட்ட அனுமதியளிக்கும் போது கட்டாயமாக மரங்களை வளர்க்க வேண்டும் என்கிற நிபந்தனை விதித்து அனுமதி வழங்க 1992–93-ல் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

புதிதாக வீடுகள் கட்ட அனுமதியளிக்கும் போது விண்ணப்பதாரர்களிடம் மனைகளில் உள்ள திறவிடங்களில் ஏற்கனவே உள்ள மரங்களைப் பாதுகாக்கவும், புதிதாக மரங்களை நட்டு பராமரிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தற்போது மனைகளின் குறைந்தபட்ச பரப்பு 150 ச.மீ. என உள்ளதால், திறவிடங்களில் மரங்கள் வளர்ப்பது கடினம். ஆயினும் கூடுமான வரை மரங்களை நட்டு பராமரிக்க வேண்டும் என்றும், ஏற்கனவே உள்ள மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், நிபந்தனை விதிக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நிபந்தனை தொடர்ந்து விதிக்கப்படும்.

125—

தருமபுரி மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்.

வினா எண் 16103—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக தருமபுரி மாவட்டத்தில் வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுத்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்தெந்த இடங்களில் எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

126—

வீட்டுவசதி வாரியத்தால் அரசு ஊழியருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 16434—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டுவசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்கு எத்தனை வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

வீட்டுவசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்கென வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ரூ. 9,263 இலட்சம் செலவில் 22,509 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

127—

சீர்காழியில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம்.

வினா எண் 16465—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சீர்காழியில் அரசு ஊழியர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தற்போது எதுவும் இல்லை.

128—

பட்டினப்பாக்கம் அரசு அலுவலர்கள் குடியிருப்பில் பராமரிப்புப் பணி பார்த்தல்.

வினா எண். 16487—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினப்பாக்கம் அரசு குடியிருப்புகள் கட்டி பல வருடங்கள் ஆகிவிட்டதால், வீடுகள் மிகவும் பழுதடைந்து கைப்பிடிச் சுவர்கள் இடிந்து விழுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் ஒவ்வொரு பிளாக்காக இடித்துவிட்டு புது வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கத்தில் உள்ள 1,112 குடியிருப்புகளையும் இடித்துவிட்டுக் கட்டுவதனால் தற்பொழுது சந்தை விலை நிலவரப்படி கட்டுமானப் பணிக்கு மட்டும் சுமார் ரூ. 1,109 இலட்சங்கள் செலவாகும். எனவே, அனைத்துக் குடியிருப்புகளில் செய்ய வேண்டிய பழுதுபார்க்கும் பணிக்காக ரூ. 110 இலட்சம் திட்ட மதிப்பீடு கொண்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

129—

சீர்காழியில் அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 16743—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியில் அரசு அலுவலர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தற்போது எதுவும் இல்லை.

130—

RESERVATION FOR ANGLO-INDIANS IN HOUSING ALLOTMENT.

Question No. 19219—Dr. BEATRIX D'SOUZA : Will the Hon. Minister for Housing and Urban Development be pleased to state—

Whether the Government will consider a 5 per cent reservation for Anglo-Indians in Housing Board/Slum Clearance tenements?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

ஆங்கிலோ–இந்தியர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய வீடுகளில் 5 சதவீத தனி ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை நிறை வேற்ற இயலாததாக உள்ளது.

131—

அரசு தொழிற்சாலைகள் நிறுவும்பொழுது அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்.

வினா எண் 10614— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரகத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்பொழுது அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு களில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்ற நிபந்தனை யுடன் அரசு அத்தொழிற்சாலைகளுக்கு மானிய உதவி அளிக்க வகை செய்யுமா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) தொழில் முனைவோருக்கு மாநில அரசு அளிக்கும் மானியத்தைப் பொறுத்தவரை, தொழிற்சாலை அமைந்துள்ள பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டத்தை வைத்தும் அல்லது அரசு அறிவித்துள்ள சிறப்புத் தொழில் பகுதியினைச் சார்ந்தும் மானியம் வழங்கப்படுகிறது. அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வேலைவாய்ப்பினைப் பொறுத்து அல்ல.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

132—

கர்நாடக கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சிறு தொழில் தொடங்க உதவியளித்தல்.

வினா எண் 14687—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்ட கர்நாடக வாழ் தமிழர்கள் தருமபுரி மாவட்டத்தில் சிறு தொழிற்சாலைகளைத் துவங்க அரசிடம் விண்ணப்பங்களை அளித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின்மீது அரசு எடுத்த நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) பாதிக்கப்பட்ட கர்நாடக வாழ் தமிழர்களில் 17 நபர்கள் தர்மபுரி மாவட்டத் தொழில் மையத்திடம் சிறு தொழில் துவங்க விண்ணப்பித்துள்ளார்கள்.

(ஆ) இதில் 16 நபர்களுக்குச் சிறுதொழில் தொடங்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள ஒரு நபர் தொழில் தொடங்க நிதி உதவி கோரினார். அவரிடம் தொழில் தொடங்கத் தேவையான நிலத்தை பெற்றபின், கடனுதவிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

133—

சின்னக் கவுண்டனூரில் தொழிற்பேட்டை துவங்குதல்.

வினா எண் 15361—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, சின்னக்கவுண்டனூரில் தொழிற்பேட்டை துவங்கும் பணிகள் தற்போது எந்த நிலையில் உள்ளன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

சின்னக்கவுண்டனூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

134—

தொளசம்பட்டி ஏரிப்பகுதியில் சிட்கோ மூலம் ஒரு தொழிற்பேட்டை அமைத்தல்.

வினா எண் 15467—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொளசம்பட்டி ஏரிப்பகுதியில் நிரந்தரமாக தண்ணீர் இல்லாததால் அங்கு சிட்கோ மூலம் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

தொளசம்பட்டியில் உள்ள ஏரி பாசன ஏரியாகும். இங்கு மழைக்காலங்களில் நீர் நிரம்பி இருக்கும். மேலும் ஏரிக்குள் ஒரு மயான பூமியும் உள்ள காரணத்தால், இங்கு தொழிற்பேட்டை அமைக்க இயலாது.

135—

கள்ளக்குறிச்சியில் ஆட்டோநகர் உருவாக்குதல்

வினா எண் 19087—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் சிட்கோ மூலம் ஆட்டோமொபைல் உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் ஆட்டோ நகர் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

136—

கடலூரில் சிட்கோ மூலம் பதப்படுத்தப்பட்ட உணவுவகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 19088—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் சிட்கோ மூலம் உயர் தொழில்நுட்ப தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் மற்றும் பானங்கள் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

137—

பரமக்குடியில் சிட்கோ மூலம் ஆட்டோ நகர் ஏற்படுத்தல்,

வினா எண் 19182—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) பரமக்குடியில் சிட்கோ மூலம் உயர் தொழில் நுட்ப செயலாக்கத் திட்டத்தின் கீழ் ஆட்டோ நகர் (ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரித்தல்) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

138—

பரமக்குடியில் பின்னலாடை தயாரிப்பு தொழில் நிறுவுதல்.

வினா எண் 19185—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் சிட்கோ மூலம் உயர் தொழில் நுட்ப செயலாக்கத் திட்டத்தின் கீழ் பின்னலாடை தயாரிப்பு தொழில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் ;

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

139—

கள்ளக்குறிச்சியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை துவங்குதல்

வினா எண் 19214—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

140—

அரவக்குறிச்சி தொகுதியில் தொழிற்பேட்டை நிறுவுதல்.

வினா எண் 19410—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

141—

சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கல்.

வினா எண் 19547—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு சேலம் 'சேகோ சர்வ்' மூலம் பயிர்க்கடன் அளிக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

142—

புதுவகை விதை நெல் கண்டுபிடித்தல்.

வினா எண் 17564—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாவாரியில் நெல் பயிரிடுவதற்கு ஏற்றவாறு புதுவகை விதை நெல் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மூலம் மானாவாரிக்கு ஏற்றவாறு நெல் பயிரிட புதிய இரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சி, திரூர் ஆராய்ச்சி நிலையம் மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி ஆகியவைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

143—

இராசிபுரம் தொகுதியில் சூரியகாந்தி எண்ணெய் தயாரித்தல்.

வினா எண் 19086—திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதியில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

இல்லை.

144—

சோயாபீன்ஸ் பயிர் விளைச்சல் பரப்பை அதிகரித்தல்.

வினா எண் 19390—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோயாபீன்ஸ் பயிர் விளைச்சல் பரப்பை மேலும் கூடுதலாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சோயாபீன்ஸ் பயிர் 1992-93--ஆம் ஆண்டில் 24,910 ஹெக்டேரில் பயிரிடப்பட்டது. நடப்பு ஆண்டில் (1993–94) ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சோயா பீன்ஸ் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உந்துகைத் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

145—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்குதல்.

வினா எண் 19395—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் வழங்க அரசு முன் வருமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப.கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது.

146—

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தல்.

வினா எண் 19396—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைததுறை அமைச்சர் :

மைய அரசு, கரும்புக்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை ஒவ்வோராண்டும் நிர்ணயம் செய்கிறது. தமிழக அரசு, கரும்பு விவசாயிகளின் கோரிக்கையினை கருத்திற் கொண்டும, சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு விலை கொடுக்கும் நிதித்திறன் அடிப்படையிலும், மத்திய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட அதிக மாக நிர்ணயம் செய்து, மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்கிறது.

147—

கன்னியாகுமரி மாவட்டத்தில் எண்ணெய்ப் பனை விவசாயம் செய்தல்.

வினா எண் 19425—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாத்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எண்ணெய் பனை விவசாயம் செய்ய அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

148—

காட்டுப்பன்றிகள் விவசாயப் பயிர்களை அழிப்பதைத் தடுத்தல்.

வினா எண் 19668—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுப்பன்றிகள் விவசாயப் பயிர்களை அழிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

இல்லை.

149—

விதைப்பண்ணை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மானியத்தை அதிகரித்தல்.

வினா எண் 20325—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைப்பண்ணை அமைத்து அரசுக்கு விதை உற்பத்தி செய்து கொடுக்கும் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியத்தை அதிகப்படுத்தி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

150—

கரும்புத் துண்டுகளை மானிய விலையில் வழங்குதல்.

வினா எண் 20485—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு விளைச்சலை ஊக்குவிக்கும் வகையில் 6–8 மாத கரும்பிலிருந்து கரும்புத் துண்டுகள் மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த மாவட்டங்களில் செயல்படுத்தப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

151—

தமிழகத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தல்.

வினா எண் 20593—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் (ICAR) மத்திய அரசின் உதவியுடன் திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள போதாவூர் என்ற கிராமத்தில் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் விரைவில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

152—

உரங்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க ஆய்வுக் கூடங்கள் நிறுவுவது.

வினா எண் 20629—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உரங்களில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதைக் கண்டறிய உதவும் ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) உரங்களில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதைக் கண்டறிய உதவும் ஆய்வுக்கூடங்கள் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஏற்படுத்தத் தேவை இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

153—

வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்த எடுத்துரைத்தல்.

வினா எண் 20630—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மையில் இயற்கை உரங்களை பெருமளவு பயன்படுத்த வேண்டியதன் தேவை குறித்து, விவசாயிகளிடம் எடுத்துரைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்.

(அ) ஆம்.

1993 அக்டோபர் 29]

(ஆ) வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பெருமளவு பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் செயற்கை உரங்களின் விலை ஏற்றத்தால், இயற்கை உரங்கள் இடுவதன் அவசியம் பற்றியும், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

154 —

தமிழ்நாட்டில் பயறு உற்பத்தியைப் பெருக்குதல்.

வினா எண் 21727— டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்கும் சிறப்பு விவசாய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்கும் சிறப்பு விவசாயத் திட்டம் தற்போது அமலில் உள்ளது.

(ஆ) பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு, மத்திய அரசின் உதவியுடன் கூடிய தேசிய பயறு பெருக்கத் திட்டம் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. அதன்படி இத்திட்டத்திற்கு 1993-94ம் ஆண்டிற்கு 146.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆணை வரப்பெற்றுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு 110.00 இலட்சம் ரூபாயும், மாநில அரசின் பங்கு 36.70 இலட்சம் ரூபாயும் ஆகும்.

155—

திம்மப்பேட்டை ஊராட்சியில் விவசாய துணைக் கிடங்கு ஏற்படுத்தல்.

வினா எண் 21917— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் திம்மப்பேட்டை ஊராட்சியில் விவசாய துணைக் கிடங்கு ஏற்படுத்தப்படு...?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

156—

வால்பாறையில் வருடந்தோறும் பூக்கள் கண்காட்சி நடத்துதல்.

வினா எண் 22171—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் வருடந்தோறும் பூக்கள் கண்காட்சி நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

157—

ஒசூர் அரசு கால்நடைப் பண்ணையை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண் 9170—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த ஓசூர் அரசு கால்நடைப்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

ஒசூர் மாவட்ட கால்நடைப்பண்ணையை மேம்படுத்திட கீழ்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

1. அறிவியல் முறைப்படியான இனப்பெருக்கம் மாடு, ஆடு, கோழி மற்றும் பன்றி விலங்கினங்களுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

1993 அக்டோபர் 29]

2. கலப்பின பொலிகாளைகளின் இனப்பெருக்கமும் அவற்றின் உற்பத்தியும் இப்பண்ணையின் தனித்தன்மையாகச் செயல்படுத்தப்பட உள்ளன.

3. இப்பண்ணையில் மேல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொலிகாளையிலிருந்து உறைவிந்து தயாரிக்கும் பணியும் நடைபெறுகிறது.

4. தற்சமயம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் இப்பண்ணைகளின் பணிகள் தீவிரமாக்கப்பட்டு விரிவாக்கப்படுகிறது.

158—

பால் விநியோகத்திற்கு டெப்போக்கள் திறப்பதற்கு மகளிர் அமைப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

வினா எண் 10086—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகத்தைப் பரவலாக்கும் அடிப்படையில் தனிப்பட்ட மகளிரோ அல்லது மகளிர் அமைப்புகளோ தங்கள், தங்கள் பகுதிகளில் டெப்போக்கள் (Depot) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் மொத்தம் 51 பாலகங்கள் உள்ளன. இவற்றில் 21 பாலகங்கள் மகளிர் மேம்பாட்டுக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்ட பெண் நபர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இரு இடங்களில் பாலகங்களை மகளிர்க்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

159—

'டாப்கோ'வின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

வினா எண் 10307—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு திட்டத்திற்கு தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் முட்டை விற்பனை செய்யும் இலக்கை அடைய 'டாப்கோ'வின் உற்பத்தித் திறனை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு த. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்திற்குத் தேவையான முட்டைகள் பெறும் இலக்கினை இந்நிறுவனம் ஏற்கனவே எட்டியுள்ளது.

160—

சங்ககிரியில் பால் குளிர் பதனிடும் நிலையம் அமைத்தல்.

வினா எண் 11332—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் ஒரு பால் குளிர் பதனிடும் நிலையம் (Milk Chilling Unit) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரியில் ஒரு பால் குளிர் பதனிடும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

161—

பேராவூரணி நகரத்தில் ஆவின் பால் வழங்குதல்.

வினா எண் 12559—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி நகரத்தில் ஆவின் பால் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு த. ஜனார்த்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

பேராவூரணி நகரத்தில் ஆவின் பால் மற்றும் உபபொருள்கள் விற்பனை செய்ய முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. சரியான முகவர்களை நியமிக்கும் நேரத்தில் பால் விற்பனை செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

162—

கோட்டாகுடியில் கூட்டுறவு பால்வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண் 14613— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் 1992-93ல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் 1992-93ல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைத்துத்தர . தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

163—

ஜவ்வாது மலையில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவச் சங்கம் ஏற்படுத்தல்.

வினா எண் 14969—டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் உள்ளடங்கிய ஜவ்வாது மலையில் மலைவாழ் மக்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்சங்கம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) இதை கூட்டாத்தூரில் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு த ஜனார்த்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

(அ) செங்கம் தொகுதியில் ஜவ்வாது மலையில் மலைவாழ் மக்களுக்கு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

164—

ஆவின்மூலம் பல்வேறு பால் பொருள் வகைகளை அறிமுகப் படுத்கல்.

வினா எண் 1548—திரு. செ. து. வடிவராஜன் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (ஆவின்) கொழுப்புச்சத்து நிறைந்த உயர்தர பால், கொழுப் பற்ற பால் மற்றும் சுவை ஊட்டப்பட்ட தயிர் வகைகளை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்த்தனன். பால் வளத்துறை அமைச்சர் :

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்) கொழுப்புச்சத்து நிறைந்த உயர் ரக பால், கொழுப் பற்ற பால் வகைகளை ஏற்கனவே நடைமுறைப்படுத்தி விற்பனை செய்தது. ஆனால் அவை எதிர்பார்த்த அளவுக்கு விற்பனையாகாததால் முதலில் கொழுப்பு சத்து நிறைந்த உயர்ரக பால் விற்பனை நிறுத்திவைக்கப்பட்டது, கொழுப்பு நீக்கிய பால் விற்பனை ஆகஸ்ட் 1992-ல் அறிமுகப்படுத்தப் பட்டது. விற்பனை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் அதன் விற்பனையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. சுவையூட்டப்பட்ட தயிர் வகைகளை அறிமுகப்படுத்தும் எண்ணம் ஏதும் தற்போது இல்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

165—

கால் நடை சிகிச்சை முகாம்களுக்கு நிதியுதவி அளித்தல்

வினா எண் 16003—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை சிகிச்சை மற்றும் கண்காணிப்பு முகாம்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. க. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

மாநிலத்திலுள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை ஆரம்ப மருத்துவ மனைகளில் கால்நடை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. நோய்க்கண்காணிப்பு நடவடிக்கைகளாக, மாவட்டங்களில் அமைந்துள்ள வெக்கைநோய் தடுப்புக் குழுக்களினால் கால் நடைகளுக்கு வெக்கைநோய்த் தடுப்பூசிகள் சுழற்சி முறையில் போடப்பட்டு வருகின்றன. பிற நோய்களுக்கான தடுப்பூசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கால்நடை உதவி இயக்குநராலும் மக்கள் தொடர் முகாம் நடத்தப்பட்டு கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சைப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, தனியாக கால்நடை சிகிச்சை மற்றும் கண்காணிப்பு முகாம்கள் நடத்த தனியே நிதி ஒதுக்கீடு செய்வதில்லை.

166—

பால் வளத்துறையில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்திட புதிய திட்டங்கள்

வினா எண் 16006—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால்வளத்துறையில் வெண்மைப்புரட்சி ஏற்படுத்திட 1992-93-ல் அரசிடம் புதிய திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) தமிழ்நாட்டில் பால் வளத்துறையில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்திட பால் பெருக்குத் திட்டம் -3 செயல்படுகிறது.

167—

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 16013—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டிடம் சென்னை மாதவரத்தில் கட்டப்படவுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மாதவரத்தில் 7.99 ஏக்கர் நிலப்பரப்பில் பல் கலைக்கழகத்தின் தலைமை வளாகக் கட்டிடம் கட்ட அரசு முடிவு செய்துள்ளது. 30—6—1993 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாதவரத்தில் கட்டப்படும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

168—

பரமக்குடியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைத்தல்

வினா எண் 16050—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பால் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளனவா?

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் பாலின் தேவை அதிகமாக இருப்பதால், மதுரை, திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களிலிருந்து அவ்வப்போது பாலை வாங்கி இம்மாவட்டத்தின் தேவையினை அனுசரித்து, பதப்படுத்திய பாலை இம்மாவட்டங்களில், ஒன்றியம் விற்பனை செய்து வருகிறது. எனவே, பால் உற்பத்தி, இம்மாவட்டங்களில் உள்ள பால் குளிரூட்டும், பால் பதப்படுத்தும் திறனளவை எட்டாத நிலையில், புதிதாக பரமக்குடியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைப்பது, செயல்முறை ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் தற்போதைய நிலையில் உகந்ததாக அமையாது. எனவே, இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

169—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்குக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கக் கட்டிடம் கட்டல்.

வினா எண் 16704—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கென தனியாக கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்க துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த அலுவலகத்தை, செங்கம் நகரில் ஏற்படுத்த ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் தலைமையிடமாகிய திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கென் தனியாக

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்துவதற்கு 29.3.1993 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

170—

சென்னை நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

வினா எண் 16706—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1992-93-ம் நிதியாண்டில் துவக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு த. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செங்கம் தாலுகாவில் செயலாற்றும் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு அருகாமையிலேயே திருவண்ணாமலை குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதாலும், இப்பால் குளிரூட்டும் திறனை நாளொன்றுக்கு ஒரு இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும், செங்கம் நகரில் தனியாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

171—

பூம்புகார் தொகுதியில் கூட்டுறவு கோழிப்பண்ணை அமைத்தல்

வினா எண் 16876—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கூட்டுறவுக் கோழிப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு சு. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

172—

பால் கொள்முதல் விலையை அதிகரித்தல்

வினா எண் 16997—திரு. எ. பூ. முனுசாமி: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பால் உற்பத்தியாளர்களின் பால் கொள்முதல் விலையை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், ஒரு லிட்டருக்கு எவ்வளவு உயர்த்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) பால் கொள்முதல் விலை ஒரு கிலோ மொத்த சத்துள்ள பசும்பாலுக்கு ரூ. 36.15-லிருந்து ரூ. 42 ஆகவும், ஒரு கிலோ கொழுப்புச் சத்துள்ள எருமைப்பாலுக்கு ரூ. 90-லிருந்து ரூ. 96 ஆகவும், 1—5—1993 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

173—

ஹோசூர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

வினா எண் 17410—திரு. கே. எ. மனோகரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒசூர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

தற்பொழுது ஒசூரிலிருந்து 21 கி.மீ. தொலைவிலுள்ள தேன்கனிக்கோட்டையில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் உள்ளதால், ஒசூரில் தனியாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

174—

கால்நடை மருத்துவமனைகளில் பலநோய் மருத்துவ நிபுணர் பிரிவு அமைத்தல்.

வினா எண் 17495—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட கால்நடை மருத்துவமனைகளில் பலநோய் மருத்துவ நிபுணர் பிரிவு (Poly Clinic) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட கால்நடை மருத்துவமனைகளில் பலநோய் மருத்துவ நிபுணர் பிரிவு (Poly Clinic) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் தற்பொழுது இல்லை.

175—

முட்டை விலையினை நிர்ணயம் செய்தல்.

வினா எண் 19169—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டை விலையினை முறைப்படுத்தி நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) இதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

1993 அக்டோபர் 29]

176—

சேலம் பால்பண்ணையை விரிவாக்குதல்.

வினா எண் 19176—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பால்பண்ணையை விரிவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய பால்வள வாரியத்தின் மூலமாக சேலம் பால் பண்ணையில் பால் கையாளப்படும் திறன், நாள் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டரிலிருந்து மூன்று இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யும் திட்டப்பணிகள் ரூ. 146.15 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் மேற்படி பண்ணையில் உள்ள ''அசெப்டிக் பேக்கேஜிங் ஸ்டேஷன்'' என்ற பிரிவின் கிடங்கு விரிவாக்கப்பணி ரூ. 60.10 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

177—

வெஞ்சமாங்கூடலூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

வினா எண் 19420—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி வெஞ்சமாங்கூடலூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) அரவக்குறிச்சி தொகுதி வெஞ்சமாங்கூடலூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

178—

விளாத்துறை பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை தொடங்குதல்.

வினா எண் 19941—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி விளாத்துறை பேரூராட்சியில் பேரூராட்சியின் பக்கத்தில் இருக்கும் 1½ ஏக்கர் அரசு நிலத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி விளாத்துறை பேரூராட்சியில், பேரூராட்சியின் பக்கத்திலிருக்கும் 1½ ஏக்கர் அரசு நிலத்தில், புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

179—

சங்ககிரி பேரூராட்சியில் ஆவின்பால் விநியோகித்தல்.

வினா எண் 20077—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி பேரூராட்சியில் ஆவின்பால் முறையே கிடைக்கச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி பேரூராட்சியில் தற்போது ஆவின் பால். இரண்டு முகவர்கள் மூலம் முறையே கிடைக்கச் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் பால்வளத்துறை ஆணையரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

180—

நாமக்கல்லில் கால்நடை மருத்துவமனையை நிறுவுதல்.

வினா எண் 20196—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் நவீன மருத்துவமனையை நாமக்கல்லில் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லில் ஒரு கால்நடை மருத்துவமனை அனைத்து உபகரணங்களுடன் நவீன முறையில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

181—

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்தல்.

வினா எண் 20610—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகத்தை சென்னையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

182—

காவேரிப்பட்டினம் கால்நடை மருத்துவமனைகளில் கால்நடைகளுக்குச் சிகிச்சையளித்தல்.

வினா எண் 20917—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் கால்நடை மருத்துவமனைகளில் கால்நடைகளை தங்கவைத்து சிகிச்சை செய்வதற்கான வசதிகள் செய்யப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளைத் தங்கவைத்து சிகிச்சை செய்வதற்கான வசதிகள் தற்போது செய்வதற்கு இல்லை.

1993 அக்டோபர் 29]

183—

கால்நடை வளர்ப்பினை அதிகரித்திட கடன் வசதி அளித்தல்.

வினா எண் 21205—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை வளர்ப்பினை அதிகரித்திட கிராமப் பகுதி மகளிருக்கு கடன் வசதி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) கால்நடை வளர்ப்பினை அதிகரிக்க கிராமப்பகுதி மகளிருக்கு கடன் வசதி அளிக்க தனியாகத் திட்டம் எதுவும் கால்நடை பராமரிப்புத்துறையில் செயல்படுத்தவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

184—

புதுகை தொகுதியில் சுண்ணாம்புக்கல் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 10548—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுகை தொகுதி, ஆதனக் கோட்டையில் சுண்ணாம்புக் கல் அதிகம் கிடைப்பதால் அதை மூலதனமாகக் கொண்டு ஏதேனும் தொழிற்சாலை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்·

(அ) மற்றும் (ஆ) இல்லை.

185—

ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 10553—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

186—

கிணத்துக்கடவு தொகுதியில் தொடங்கப்பட்டுள்ள தொழிற் சாலைகளில் அப்பகுதியினருக்கு முன்னுரிமை அளித்தல்.

வினா எண் 10976—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள கிணத்துக்கடவு தொகுதியில் துவங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் அந்தப் பகுதியினருக்கு முன்னுரிமை கொடுத்து வேலையில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

இல்லை.

187—

தொழில் நிபுணர்கள் குழு அமைத்தல்.

வினா எண் 11147—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) புதிய தொழில் துவங்குபவர்கள் செயல்பாட்டை கண்காணிக்க தொழில் நிபுணர்கள் கொண்ட குழுவை அரசு அமைக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

188—

பேராவூரணி தொகுதியில் காகித தொழிற்சாலை தொடங்குதல்

வினா எண் 12564—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில் வைக்கோலை பயன்படுத்தி காகித தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

இல்லை.

189—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கண்ணாடி தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 13506—திரு. ஆர். சிங்காரம் : மாண்பமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் மணலைக் கொண்டு கண்ணாடி தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

இல்லை.

190 —

பேராவூரணி தொகுதியில் உப்புத் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் 14426—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி மல்லிப் பட்டிணத்திலும் சேதுபாவாசத்திரத்திலும் உப்புத் தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதி மல்லிப் பட்டிணத்திலும், சேதுபாவாசத்திரத்திலும் உப்புத் தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

191—

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வல்லுநர் குழு அமைத்தல்

வினா எண் 14478—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில்களை தொடங்க தொழில் அதிபர்களையும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களையும் ஊக்குவிக்கும் வல்லுநர் குழு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

(அ) பற்றும் (ஆ) வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி மையம் என்ற அமைப்பை அரசு 1992-ல் ஏற்படுத்தியுள்ளது.

1993 அக்டோபர் 29]

192—

ஏற்றுமதி வாரியம் அமைத்தல்.

வினா எண் 15035—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் ஏற்றுமதி பொருட்களை அரசே கொள்முதல் செய்து வாரியம் அமைத்து தொழில் துறை மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான உதவிகளை மட்டுமே அரசு அளிக்கும். ஏற்றுமதிப் பொருட்களை அரசே கொள்முதல் செய்ய வாரியம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

193—

மேட்டுப்பாளையத்தில் சர்க்கரைத் தொழிற்சாலை தொடங்குதல்

வினா எண் 15039—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் அரசு சார்பில் சர்க்கரைத் தொழிற்சாலை தொடங்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் அரசு சார்பில் சர்க்கரைத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

194—

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கணிப்பொறி நிறுவுதல்

வினா எண் 19089—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கணிப்பொறி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கணிப் பொறிகளை தலைமை அலுலவகத்திலும், கிளை அலுலவகங் களிலும் பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) 1992-93-ஆம் ஆண்டில் தலைமை அலுவலகம், சென்னை மற்றும் செங்கற்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்ட கிளை அலுவலகங்களில் கணிப்பொறி நிறுவப்பட்டன. நடப்பு 1993-94-ம் ஆண்டில் மற்ற கிளை அலுலகங்களுக்கும் கணிப்பொறி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

195—

சந்தன மரக் கடத்தலைத் தடுக்க ஹெலிகாப்டர் படையை பயன்படுத்தல்.

வினா எண் 12807—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சந்தனமரக் கடத்தல்காரர்களை கண்டுபிடிக்க ஹெலிகாப்டர் படை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

196—

பாபநாசத்திலிருந்து திருவனந்தபுரம் வரை சாலை அமைத்தல்.

வினா எண் 14611—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசத்திலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்ல வனத்துறை அனுமதி பெற்ற சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசத்திலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்ல வனத்துறை அனுமதி பெற்று சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

197—

சென்னையில் திரைப்பட நகர் உருவாக்கும் திட்டம்,

வினா எண் 10479—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் தரமணியில் உள்ள திரைப்படத் தொழில்நுட்ப பயிற்சி வளாகத்தில் ''திரைப்பட நகர்'' உருவாக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

ரூபாய் 14.93 கோடி செலவில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள திரைப்பட நகரின் அமைப்புப்பணி இதுவரை 50 சதவீதம் அளவு முடிந்துள்ளது. மீதமுள்ள பணியும் தொடர்ந்து திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றது.

198—

தியாகி சுப்பிரமணியசிவாவின் நினைவிடத்தில் நினைவு மண்டபம் கட்டுதல்.

வினா எண் 14544—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைந்துள்ள தியாகி சுப்பிரமணியசிவாவின் நினைவிடம் நினைவு மண்டபமாக அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு, மு, தென்னவன், : செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

199—

தஞ்சாவூரில் காந்தி நினைவாலயம் கட்டுதல்,

வினா எண் 20784—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் காந்திமேடு பகுதியில் காந்தி நினைவாலயம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

200—

திரன் சின்னமலைக்கு நினைவு மண்டபம் அமைத்தல்,

வினா எண் 21508—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலை அடிவாரத்தில் தீரன் சின்னமலைக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1993-94 ஆம் ஆண்டிலேயே செயல் படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இருபதாம் பட்டியல்)

சேலம் கூட்டுறவு ஜவ்வரிசி தொழிற்சாலையின் நிதிப் பற்றாக் குறையைப் போக்குதல்.

1—

வினா எண் 16051—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு ஜவ்வரிசி தொழிற்சாலையின் நிதிப் பற்றாக்குறையை நிரந்தரமாகப் போக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சேலம் கூட்டுறவு ஜவ்வரிசி தொழிற்சாலை தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவதால் நிதிப் பற்றாக் குறை ஏற்படவில்லை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1எ—

சத்துணவுக் கூடத்தைப் பழுது பார்த்தல்.

வினா எண் 19156—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் வடக்கு பிச்சாவரத்தில் பழுதடைந்துள்ள சத்துணவு கூடத்தை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ): உடனடியாக ஆவன செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2—

கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித் தொகை வழங்குதல்.

வினா எண் 15158—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தகுதியுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித்தொகை அளிக்கும் பொழுதுமருத்துவர்களுடைய கருவுற்ற மகளிர் பதிவேடுகளை ஆதாரமாகக்கொண்டு அரசு மருத்துவர் மற்றும் முக்கிய சேவிகா இருவர் மூலம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

யோசனை இல்லை. இப்போதிருக்கும் முறையில் மாற்றம் தேவையில்லை.

1993 அக்டோபர் 29]

3 —

மொடக்குறிச்சித் தொகுதியில் சத்துணவுத் திட்டத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா எண் 19206—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப் பாளையம் கிராமத்தில், கருத்திப்பாளையத்தில் நடப்பு கல்வி யாண்டில் சத்துணவுத் திட்டத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி, இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கையை ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் மூன்று வேலை நாட்களில் பொறுப்பான அலுவலரால் திடீர் ஆய்வு செய்து, எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. 1993-94 ஆம் வருடத்திற்கான எண்ணிக்கை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்பொழுது, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் கிராமத்தில் கருத்திப்பாளையத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகை இருப்பின் அதிகரிக்கப்படும்.

4—

குழந்தைகள் நல மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்தல்.

வினா எண் 19252—திருமதி. கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமம், வேங்கியாம்பாளையத்தில் குழந்தைகள் நல மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

தற்போது உள்ள நிதி நெருக்கடியில் சுற்றுச்சுவர் அமைப்பது இயலாது. இருப்பினும் உள்ளூர் தொழில் அதிபர்கள் முன்வந்தால் தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் குழந்தைகள் மையப்பணிகள்.

வினா எண். 19697 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் குழந்தைகள் மையத்தைப் பற்றி அரசிற்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) ஏதாவது குறைகளிருப்பின் சுட்டிக்காட்டினால் ஆவன செய்யப்படும்.

6—

கருவுற்ற பெண்களுக்காக மையங்கள் தொடங்குதல்.

வினா எண் 19813—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கருவுற்ற பெண்கள் நலனுக்காக மாவட்டந்தோறும் மையங்கள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் இந்தச் சேவை செய்யப்படுகிறது.

7—

செயற்கை வைரம் அறுக்கும் தொழிற்கூடத்தில் பெண்களுக்குப் பயிற்சி அளித்தல்.

வினா எண் 19814—திருமதி கே. மரியம் உல் அசியா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கு, செயற்கை வைரம் அறுக்கும் தொழிற்கூடத்தில் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

பெண்கள் குழுக்கள் இந்த வைரத் தொழிலை செய்ய முன்வந்தால் மகளிர் மேம்பாட்டுக் கழகமும், சமூக நலத்துறை இயக்ககமும் வேண்டிய உதவிகளைச் செய்து தரும்.

8—

முதியோர் உதவித் தொகை வழங்குதல்.

வினா எண் 20134—திரு. அ. சுப்புரத்தினம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகை வழங்குவதில் தற்போதுள்ள நடைமுறையை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ; முதியோர் உதவித்தொகை வழங்குவதில், தற்போதுள்ள நடைமுறை சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே அதனை மாற்றும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

சத்துணவு மையக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 20408— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், அளிக்குமட்டி கிராம சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டித்தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

10—

சத்துணவு மையக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 20407— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியம், ஆதிராகநத்தம் காலனி சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டித்தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

11—

சத்துணவு மையக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 20410—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் கரிகிருப்பம் கிராம சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டித்தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

12—

சங்ககிரி ஒன்றியத்தில் சத்துணவு மையம் அமைத்தல்

வினா எண் 20489—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி ஒன்றியம், ஆனைக்கல் பாளையம், கருக்கம் பாளையம், திருவாண்டிப்பட்டி ஆகிய இடங்களில் சத்துணவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் இந்த இடங்களின் தேவை பற்றி ஆய்வு செய்து ஆவன செய்யப்படும்.

13—

பழனி நகரில் பெண்களுக்காக முதியோர் பாதுகாப்பு இல்லம் துவக்குதல்.

வினா எண் 20626—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் பெண்களுக்கான முதியோர் பாதுகாப்பு இல்லம் துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பழனி நகரில் பெண்களுக்கான முதியோர் பாதுகாப்பு இல்லம் துவக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

14—

குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

வினா எண் 21790—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி, மட்டம்பட்டியில் ஒரு குழந்தைகள் காப்பகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் இந்த இடத்தின் தேவைகளை ஆய்வு செய்து ஆவன செய்யப்படும்.

15—

புவனகிரி தொகுதியில் திருமண உதவித் தொகை வழங்குதல்.

வினா எண் 20833—செல்வி சோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில், திருமண உதவித் திட்டத்தின் மூலம் தொகை கிடைக்காதவர்களுக்கு அத்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) குறிப்பிட்ட வழக்குகளைத் தெரிவித்தால் விசாரித்து விதிகள்படி ஆவன செய்யப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

16—

அரவக்குறிச்சி ஒன்றியத்தில் சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண் 21729—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஒன்றியம், எரமநாய்க்கனூர் கிராம தொடக்கப் பள்ளியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் ;

சாப்பிடக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கையைச் சரி பார்த்து மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

17—

மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்தல்.

வினா எண் 22734—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவர் ஒவ்வொருவருக்கும் தற்போது வழங்கப்படும் செலவுத் தொகையை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

தற்சமயம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18—

ஆசிரியர் பணியில் உள்ளவர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்கும் திட்டம்.

வினா எண் 9325—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பணிபுரிந்து ஓய்வு பெற்றபின் அக்குடும்பத்தில் படித்த ஒருவருக்கு வேலை வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நடைமுறைப் படுத்தப்படும் ?

1993 அக்டோபர் 29)

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

19—

யோகாசனச் சிறப்பை மக்களிடையே பரப்புதல்.

வினா எண் 10119—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யோகாசனத்தின் சிறப்பை மக்களிடையே பரப்புவதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் யோகாசனப் பயிற்சியாளர் ஒருவரை நியமித்து, பொது மக்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கும் மிகுந்த அளவில் யோகாசனப் பயிற்சி அளித்து வருகிறது.

20—

யோகாசனப் பயிற்சியை கட்டாயப் பாடமாக்குதல்.

வினா எண் 10120—திரு. ஆ. சுப்புரத்தினம் மற்றும் திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யோகாசனப் பயிற்சியை அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு யோகாசனம் கற்றுத்தருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. மத்திய அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு யோகாசனப்பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் சில உடற்பயிற்சி ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி பெற்ற யோகாசன ஆசிரியர்களிடமிருந்து பயிற்சி அளிக்கப்படும். பிறகு பயிற்சி பெற்ற இந்த உடற்கல்வி ஆசிரியர்கள் அந்தந்த பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு யோகாசனம் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும். கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் தற்பொழுது இளங்கலைப் பிரிவு (6) உளவியல் பட்டப் படிப்பில் Applied yoga and Para Psyhclogy என்ற பாடத்திட்டம் தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

21—

அஞ்சல்வழிக் கல்வித் துறையிடம் தேர்வு நடத்தும் பொறுப்பை ஒப்படைத்தல்

வினா எண் 10825—திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அஞ்சல் வழிக் கல்வித்துறையிடமே தேர்வுநடத்தும் பொறுப்பையும் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

1993 அக்டோபர் 29]

22—

தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் அரசுப் பணியாளர்களாக அறிவித்தல்.

வினா எண் 10832—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பள்ளி ஆசிரியர், ஊழியர்கள் அனைவரையும் அரசுப் பணியாளர்களாக அறிவித்து அவர்களின் பணிப் பாதுகாப்பு மற்றும் ஊதியம் உத்தரவாதம் பெற அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தனியார் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரையும் அரசு ஊழியராக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசுக்கு இல்லை.

23—

இராசபாளையம் நகரில் பெண்களுக்குத் தனியாக அரசு உயர்நிலைப் பள்ளி அமைத்தல்.

வினா எண் 10858—திரு. டி. சாத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபாளையம் நகரில் பெண்களுக்குத் தனியாக அரசு உயர்நிலைப்பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப் படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

24—

போக்குவரத்து நெரிசலைத்தடுக்க என்.சி.சி., என்.எஸ்.எஸ். மாணவர்களை ஈடுபடுத்தும் திட்டம்.

வினா எண் 11183—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழாக் காலங்களில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதில் காவல்துறையினர்களுக்கு உதவியாக என்.சி.சி., என்.எஸ்.எஸ். மாணவர்களை ஈடுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : விழாக் காலங்களில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதில் காவல்துறையினர்களுக்கு உதவி புரிய என்.எஸ்.எஸ். மற்றும் என்.சி.சி. மாணவர்களை ஈடு படுத்தும் திட்டம் சார்பாக கருத்துரு எதுவும் அரசுக்கு அனுப்பப் பெறவில்லை. இருப்பினும், போக்குவரத்து மிகுந்துள்ள காலை மற்றும் மாலை நேரங்களில் நெரிசலைக் கட்டுப் படுத்தும் பணியினை என்.எஸ்.எஸ். மாணவர்கள் தொடர் பணியின் கீழ் செயல்படுத்துகிறார்கள்.

25—

மயிலாப்பூரிலுள்ள மசூதியின் தொன்மை குறித்த ஆய்வு

Question No. 11230 Thirumathi Mariam Vil Asia: Will the Hon'ble Education Minister be pleased to State—

(a) Whether any inquiry into the Archaeological importance of the Mosque, at Mosque Street in Mylapore Madras has been undertaken by the State Archaeological Department?

(b) If so, the details there of?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(a) இல்லை.

(b) இவ்வினாவிற்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

26—

துவக்கப் பள்ளியில் சிறு தொழில் கல்வி அளித்தல்

வினா எண் 12123—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

துவக்கப் பள்ளிகளில் சிறுதொழில் கல்வி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

துவக்கப் பள்ளிகளில் "சிறுதொழில் கல்வி" அளிக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

27—

கல்வி ஒளிபரப்பிற்காக தொலைக்காட்சி ஸ்டுடியோ கட்டி முடிக்கப்பட்டும் இயங்காமலிருத்தல்,

வினா எண் 11228—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி ஒளிபரப்பிற்கான தொலைக்காட்சி ஸ்டுடியோ (Educational Television Studio) ஒன்று மாநிலக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டாகியும் இன்னமும் இது இயங்காமல் இருப்பது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் புதிதாக கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம் மைய அரசு நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது பள்ளிக் கல்வி இயக்குநரின் ஆளுகையின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலைய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு நவம்பர் 1991-ல் பொதுப் பணித் துறையினரால் கல்வி இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டது, அதன்பிறகு நிலையத்திற்குத் தேவையான தொழில்நுட்ப பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, பிப்ரவரி 1992ல் பணியில் சேர்ந்துள்ளனர். படப்பிடிப்புக்குத் தேவையான ஒளி, ஒலியிழைக்கூடுகள் இதர சாதனங்களில் சில வாங்கப் பெற்று தற்போது படப்பதிவு தொடங்கப்பட்டு நிலையம் இயங்கி வருகிறது,

28—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளித்தல்.

வினா எண் 12849—திரு, ஆர், சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு தகுதிக்கேற்ப பதவி உயர்வுகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் தகுதிற்கு ஏற்ப, பதவி உயர்வுக்கான காலிப் பணியிடங்கள் ஏற்படும்போது அவர்களின் பணி முன்னுரிமையை அடிப்படையாக வைத்து பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

29—

தேவண்ண கவுண்டார் பஞ்சாயத்தில் துவக்கப்பள்ளி தொடங்கும் திட்டம்.

வினா எண் 13791—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேவண்ண கவுண்டார் பஞ்சாயத்து மட்டம்பட்டி ஆதிதிராவிடர் தெரு தெற்கு வளவில் ஒரு துவக்கப்பள்ளி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை,

1993 அக்டோபர் 29]

30—

தமிழ்நாட்டில் கூடுதல் சைனிக் பள்ளிகள் திறத்தல்,

வினா எண் 14071—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் சைனிக் பள்ளிகளைத்திறக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மத்திய அரசுக்கு மேலும் சைனிக் பள்ளிகளை திறக்க மாநில அரசு பரிந்துரை ஏதும் செய்யவில்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

31—

கோவை சிறைச்சாலையில் கோள் அரங்கு ஒன்று நிறுவுதல.

வினா எண் 14112—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிறைச்சாலையில் பயனற்றுக் கிடக்கும் காலி இடத்தில் கோள் அரங்கு (Planetarium) ஒன்று கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

32—

கோவை சிறைச்சாலையில் அறிவியல் பூங்கா மற்றும் நிரந்தரத் தொழில் நுட்பப் பொருட்காட்சி அமைத்தல்.

வினா எண் 14113—திரு. வீ. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிறைச்சாலையைச் சுற்றிலும் பயனற்றுக் கிடக்கும் இடத்தில் ஓர் அறிவியல் பூங்கா (Science Park) மற்றும் நிரந்தர தொழில் நுட்பப் பொருட்காட்சி (Permanent Science and Technological Exhibition) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

33—

கொல்லப்பட்டி உயர்நிலைப் பள்ளியில் போதுமான மாணவர்கள் நியமனம் செய்தல்.

வினா எண் 14483—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, சர்க்கார் கொல்லப்பட்டி உயர்நிலைப்பள்ளியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப ஒவ்வோர் ஆண்டும் பகுதி திட்டத்தில் ஒப்பளிப்பு செய்யப்படும் ஆசிரியர் பணியிடங்கள், அனைத்து பள்ளிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கபபடுகின்றன.

34—

நவோதயா மாதிரிப் பள்ளிகள் தொடங்குதல்.

வினா எண் 14552—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நவோதயா மாதிரிப் பள்ளிகள் தமிழகத்தில் எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் திறப்பதற்கு, சில நிபந்தனைக்குட்பட்டு தனது விருப்பத்தை தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்ப்பார்க்கப் படுகிறது.

35—

பெண்கள் கிரிக்கெட் குழு உருவாக்குதல்.

Question No. 14671—Dr. Beatrix D'Souza : Will the Hon'ble the Minister for Education be pleased to state—

Whether Sports Council of Tamil Nadu will Consider sponsoring Women's State Cricket Team ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

மாநில பெண்கள் கிரிகெட் சங்கம், தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியத்தால் 1993-ம் ஆண்டு ஏற்பு, (Recognition) செய்யப்பட்டது. இச்சங்கத்திற்கு, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கு மட்டுமல்லாமல், மாநில, தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் நடத்துவதற்கும் விதிமுறைகளின்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தொடர்ந்து மான்யம் வழங்கப் பட்டு வருகிறது.

36—

ஓசூர் நகரில் நூலகக் கட்டிடம் தொடங்கல்.

வினா எண் 15049—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் நகரில் நூலகக் கட்டிடம் கட்ட இடம் ஒதுக்கப்பட்டும், பணி துவங்கவில்லை என்பதனை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம் ஓசூர் நகரில், ஓசூர் கிளை நூலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு 9—11—1992-ல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, தற்போது பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கட்டுமானப் பணி 1993 மே-க்குள் முடிக்கப்படும்.

37—

குளத்தூர் கிராமத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15196—டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா நயினார் கோவில் ஒன்றியம், குளத்தூர் கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் நிலத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

38—

செங்கம் தொகுதியில் அரசு நூல்நிலையக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15233—டாக்டர். பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சியில் அரசு நூல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நூல் நிலையத்திற்கான கட்டிடம் எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

39—

பொன்னேரி கலைக்கல்லூரியில் வணிகவியல் படிப்புத் தொடங்குதல்

வினா எண் 15992—திரு. எ. ரவிக்குமார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி எல். என். ஜி. கலைக் கல்லூரியில் வணிகவியல் (இளநிலை) (முதுநிலை) பட்டப் படிப்புகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

தற்போது ஏதுமில்லை.

40—

தமிழ்நாட்டில் நடமாடும் கோளரங்கம் தொடங்குதல்.

வினா எண் 16393—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடமாடும் கோள் அரங்கம் (Mobile Planetarium) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இரண்டு நடமாடும் கோளரங்கங்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

41—

திண்டிவனத்தில் தமிழ் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

வினா எண் 16593— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சிந்து சமவெளி நாகரீகத்திற்கு முந்திய தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் திண்டிவனத்தில் கண்டுபிடிக்கப் பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

இந்திய ஆட்சிப்பணி மற்றும் காவல் பணிகளுக்கான தேர்விற்கு தனிப் பயிற்சிக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 16702— திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி படிக்க முன்வரும் மாணவர்களுக்கு அரசுப் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1993 அக்டோபர் 29

43—

இராமநாதபுரத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

வினா எண் 16812—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் பெருந்திட்ட வளாகத்தில் (சர்வே எண். 323, 324, 334, 335 மற்றும் 336-ல்) 14 ஏக்கர் நிலம் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் விளையாட்டு அரங்கம் கட்டிட முதல் கட்டப் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மைய அரசின் நிதி உதவி பெரும் பொருட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய மற்றும் மாநில அரசுகள் அளித்திடும் நிதி உதவியைத் தவிர தேவைப்படும் நிதியினைத் திரட்ட விளையாட்டு அரங்கக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மைய அரசிடமிருந்து ஒப்புதல் மற்றும் நிதி உதவி பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

44—

நாங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் கூடம் தொடங்குதல்.

வினா எண் 16861—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நாங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

45—

பாலிடெக்னிக்குகளை நவீனப்படுத்தல்.

வினா எண் 16982—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உலக வங்கி நிதியுதவியின்கீழ் தமிழ்நாட்டில் நவீன மயமாக்கப்படவுள்ள பாலிடெக்னிக்குகள் எத்தனை ?

(ஆ) இவற்றுள் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் உள்ள பாலிடெக்னிக்கும் உள்ளடங்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) 21 அரசு பாலிடெக்னிக்குகளும், 34 அரசு மான்யம் பெறும் பாலிடெக்னிக்குகளுமாக மொத்தம் 55 பாலிடெக்னிக்குகள் உலக வங்கி நிதியுதவியுடன் மேம்படுத்தப் படவுள்ளன. அவற்றுள் அகில இந்திய தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற 42 பாலிடெக்னிக்குகளுக்கு மேற்கண்ட நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அகில இந்திய தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவில் அங்கீகாரம் பெறாத 13 பாலிடெக்னிக்குகளுக்கு அவற்றின் அங்கீகாரம் பெற்றபின் உலக வங்கி நிதியுதவி வழங்கப்பட வுள்ளது.

(ஆ) அகில இந்திய தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவால் அங்கீகரிக்கப்படாத 13 பாலிடெக்னிக்குகள் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் உள்ள பாலிடெக்னிக்கும் ஒன்றாகும் எனவே இப்பாலிடெக்னிக்கிற்கு உலக வங்கி நிதியுதவி வழங்கப்படவில்லை. அகில இந்திய தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவின் அங்கீகாரம் பெற்றவுடன் இப்பாலிடெக்னிக்கிற்கு உலக வங்கி நிதியுதவி வழங்கப்படும்.

[1993 அக்டோபர் 29

46—

காவேரிப்பட்டினம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேனிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்.

வினா எண் 16994—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை 1992-93-ம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

காவேரிப்பட்டினம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட கருத்துரு ஏதும் இல்லை.

47—

கன்னியாகுமரி மாவட்ட அறிவொளி திட்டம்.

வினா எண் 17479—டாக்டர். மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அறிவொளி திட்டத்தில் ஒரு வருடத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது?

(ஆ) அதனால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் அறிவொளி திட்டத்திற்காக கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது:—

30-9-1991 முதல் 31-3-1992 வரை செலவு	ரூ.	17,63,248
1-4-1992 முதல் 30-9-1992 வரை செலவு	ரூ.	19,56,959
30-10-1992 முதல் 28-2-1993 முடிய செலவு	ரூ.	9,45,506
30-9-1991 முதல் 28-2-1993 முடிய மொத்த செலவு	ரூ.	46,65,713

1993 அக்டோபர் 29]

(ஆ) இத்திட்டத்தின்கீழ் 96,552 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

48—

திட்டுவிளை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்.

வினா எண் 17486—டாக்டர். மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியம் திட்டுவிளை அரசு உயர்நிலைப்பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியம் திட்டுவிளை அரசினர் உயர்நிலைப் பள்ளியை 1993–94 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 17561—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

50—

திருச்சியில் கோள் அரங்கம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 19099—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் அரசின் சார்பில் கோள் அரங்கம் (Planetarium) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

51—

செங்காட்டுப்பட்டியில் தொழில் நுட்ப கல்லூரி அமைத்தல்.

வினா எண் 19109—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்ட உப்பிலியாபுரம் பகுதியில் உள்ள செங்காட்டுப்பட்டியில் தொழில் நுட்ப கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

52—

துறையூரில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

வினா எண் 19128— திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூரில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தற்சமயம் உள்ள அரசின் நிதி நிலையை முன்னிட்டு அரசு தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

53—

இராம நூல் நிலையங்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த வார, மாத இதழ்கள் வாங்குதல்.

வினா எண் 19167— திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம நூல் நிலையங்களில் இளைஞர் சமுதாயத்திற்கு பயன் தரக்கூடிய ''ஜாப் கெய்டுலைன், எம்ப்ளாய்மென்ட் நியூஸ், வளர் தொழில்'' போன்ற இதழ்களையும் வாங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

53— 312— 27

விடை —

மாண்புமிகு பேராசிரியர் க.பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

எம்ப்ளாய்மென்ட் நியூஸ் எனும் ஆங்கில வார பத்திரிகை மட்டும் அரசு அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வாங்கப்பட்டு வருகின்றன. ''ஜாப் கைய்டுலைன்'' மற்றும் ''வளர் தொழில்'' போன்ற பருவ இதழ்களை நூலகங்களுக்கு வாங்கக் கோரி சம்மந்தப் பட்ட நிறுவனத்திடமிருந்தோ ஆசிரியரிடமிருந்தோ எவ்வித கடிதமும் வராததால் இவைகள் நூலகங்களுக்கு வாங்குவ தில்லை.

54—

மாவட்ட தலை நகரங்களில் கணிப் பொறி பயிற்சி மையம் தொடங்கும் திட்டம்.

வினா எண் 19170— திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைநகரங்களில் கணிப்பொறிப் பயிற்சி மையம் (Computer Training Center) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இத்தகைய திட்டமேதும் அரசின் பரி சீலனையில் தற்போது இல்லை.

55—

பெரணமல்லூரில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்கும் திட்டம்.

வினா எண் 19180— திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் நகரில் அரசு பெண்கள் உயர் நிலைப்பள்ளி தனியாக நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

56—

பரமக்குடியில், கோள் அரங்கம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 19183—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் கோள் அரங்கம் (Planetorium) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

57—

கடலூரில் கோள் அரங்கம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 19217—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் ''கோள் அரங்கம்'' (Planetorium) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

58—

மொடக்குறிச்சி தொகுதியில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக போராடியவர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல்.

வினா எண் 19223— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், கொடுமுடி பேரூராட்சி ஊஞ்சலூர், பேரூராட்சியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் போராடி சிறை சென்ற சுமார் 20 பேர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

குறிப்பிடப் பெறும் 20 விண்ணப்பத்திற்குரியவர்களின் பெயர் முகவரி ஆகிய விவரங்கள் தமிழ் வளர்ச்சி துறைக்கு தெரிவித்திருந்தால் அரசால் அமைக்கப்படவிருக்கும் தேர்வுக்குழுவின் ஆய்விற்கு விண்ணப்பங்கள் வைக்கப் பெற்று குழுவின் முடிவிற்கேற்ப ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

59—

பச்சைமலை டாப் செங்காட்டுப்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண் 19338—திரு வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்புலியாபுரம் தொகுதி பச்சைமலை டாப்செங்காட்டுப் பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் :

(அ) 1993-94-ம் ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கிட கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

60—

பள்ளத்தூர் பி.டி. பல்ராம்சிங் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய அறிவியல் ஆய்வகம் தொடங்கும் திட்டம்.

வினா எண் 19524—திரு. கா. பூ. முனுசாமி.: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி பள்ளத்தூர் பி. டி. பல்ராம்சிங் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிய அறிவியல் ஆய்வகம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர்க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

61—

வலங்கைமான் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேனிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண் 19788—திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலங்கைமான் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: கல்வி அமைச்சர்:

(அ) இப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த 1993-94-ம் ஆண்டில் கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

62—

கலைக்களஞ்சியங்கள் வெளியிடும் திட்டம்.

வினா எண் 19825—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வியமைச்சர்' கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் வளர்ச்சிக் கழகம் எத்தனை கலைக் களஞ்சியங்களை வெளியிட்டது?

(ஆ) அவைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழ்க் கலைக் களஞ்சியத்தை 10 தொகுதிகளாக (1947-68) முதன்முதலில் வெளியிட்டுள்ளது. இக்கழகம் சிறுவர் கலைக்களஞ்சியத்தையும் 10 தொகுதிகளாக (1968-76) வெளியிட்டுள்ளது. இதன் திருத்திய பதிப்பினை 1988-இல் வெளியிட்டுள்ளது.

63—

திட்டச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அறிக்கை ஆய்வுக் கூடம் கட்டுதல்.

வினா எண் 19834—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திட்டச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டிடத்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வியமைச்சர்:

தற்போது இல்லை.

64—

நெற்குணம் கிராம உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண் 19852—திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, நெற்குணம் கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நெற்குணம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லை. நடுநிலைப்பள்ளி மட்டுமே உள்ளது. எனவே இக்கேள்விக்கிடமில்லை.

65—

பெரம்பலூரில் பெண்களுக்கென்று தனியே மேல்நிலைப் பள்ளி அமைத்தல்.

வினா எண் 19951— திரு. தா. செழியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரில் பெண்களுக்கென்று தனியே மேல் நிலைப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : உயர்நிலைப்பள்ளியாக இருக்கும் பள்ளியைத்தான் மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த விதிகளில் இடமுண்டு. பெரம்பலூரில் பெண்களுக்கென்று தனியாக அரசு உயர்நிலைப்பள்ளி இல்லையாதலால் இவ்வினாவிற்கு இடமில்லை.

66—

செங்கற்பட்டு ஆர். வி. கலைக்கல்லூரியில் புது பட்ட வகுப்புகள் தொடங்குதல்.

வினா எண் 19955— திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) செங்கற்பட்டு ஆர்.வி. கலைக்கல்லூரியில் 1993—94 ஆம் ஆண்டு புது பட்ட வகுப்புகள் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

67—

அனைத்துக் கல்லூரிகளிலும் கூட்டுறவு பட்ட படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கும் திட்டம்.

வினா எண் 19960— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்துக் கல்லூரிகளிலும் கூட்டுறவு பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

68—

பள்ளப்பாளையம் கிராமத்தில் புதிய அரசு உயர்நிலைப்பள்ளி தொடங்கும் திட்டம்.

வினா எண் 20079—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரவக்குறிச்சி தொகுதி பள்ளபாளையம் கிராமத்தில் புதிதாக அரசினர் உயர்நிலைப்பள்ளி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

69—

மெட்ரிகுலேஷன் உதவிப் பள்ளிகளில் ப்ளஸ் 1, ப்ளஸ் 2 வகுப்புகளில் மாணவர்களை அனுமதிக்காமல் இருத்தல்.

வினா எண் 20099— திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தனியார் நடத்தும் மெட்ரிகுலேஷன் உதவிப் பள்ளிகளில் ப்ளஸ் 1, ப்ளஸ் 2, வகுப்புகள் இருந்தும் மாணவர்களை அனுமதிக்காமல் உள்ள பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இப்பொருள் குறித்து இதுவரை குறிப்பிட்ட புகார் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

70—

குறிச்சி குளத்தில் புதிய அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 20232— திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி குறிச்சி உயர் நிலைப்பள்ளிக்குப் போதுமான இடம் இல்லாத காரணத்தால் அருகில் உள்ள குறிச்சி குளத்தில் இடம் பெற்று அதில் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

1993 அக்டோபர் 29]

71—

சர்க்கஸ் வீரர்களையும், வீராங்கனைகளையும் ஊக்குவிக்கும் திட்டம்.

வினா எண் 20396—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கஸ் வீரர்களையும், வீராங்கனைகளையும் ஊக்குவிக்க சலுகைகள் கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

72—

முதுமையான தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்.

வினா எண் 20606—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1991—92 மற்றும் 1992—93 ஆம் ஆண்டுகளில் எத்தனைப்பேருக்கு உதவி செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) வரும் 1993—94 நிதி ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் ;

(அ) அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1991—92 ஆம் ஆண்டில் 20 தமிழறிஞர்களுக்கும், 1992—93 ஆம் ஆண்டில் 16 தமிழறிஞர்களுக்கும், புதிதாக நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

(ஆ) 1993—94 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவி திட்டத்திற்கு ரூ. 19,01,000 நிதியொதுக்கப்பட்டுள்ளது.

73—

தவிட்டுப்பாளையத்தில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம்

வினா எண் 20924—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் ஒன்றியத்திலுள்ள தவிட்டுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய உயர் துவக்கப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு கல்வி ஆண்டு முதல் இதனை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்திட எவ்வித கருத்துருவும் பெறப்படவில்லை. இந்நிலையில் அதனை உயர்நிலைப்பள்ளியாக மேம்படுத்துதல் பற்றிய நடவடிக்கை ஏதுமில்லை.

74—

குன்னத்தூர் புதூரில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

வினா எண் 21069—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசித் தொகுதி, குன்னத்தூர் புதூர் ஊராட்சி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

75—

குன்னத்தூர் ஊராட்சியில் நூல்நிலையம் அமைத்தல்.

வினா எண் 21070—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னத்தூர் ஊராட்சியில் ஓர் நூல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

75-ஏ—

சாலியமங்கலத்தில் நூலகம் அமைத்தல்.

வினா எண் 21250—திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, சாலியமங்கலத்தில் நூலகம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இல்லை.

76—

மாம்பட்டு கிராமத்தில் கிளை நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண் 21321— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராமத்தில் கிளை நூல் நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

77—

போளூரில் உள்ள நூலகக் கட்டிடத்தை நவீனப் படுத்தல்.

வினா எண் 21322— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும்வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரில் உள்ள மாவட்ட கிளை நூலகத்தில் இரண்டாம் மாடி கட்டி நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

78—

பெண்ணாத்தூரில் உள்ள பள்ளியை மேல்நிலை பள்ளியாக்குதல்.

வினா எண். 21324— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29ி

(அ) வேலூர் வட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சியிலுள்ள உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மேல்நிலைப் பள்ளியாக்கப் படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) 1993—94-ம் கல்வியாண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பளளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

79—

கண்டிரமாணிக்கத்திலுள்ள பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுதல்.

வினா எண் 21411—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்விஅமைச்சர் :

நாகப்பட்டினம்–காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சி, அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் 1993—94 ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை.

80—

குன்னூரில் மகளிருக்கெனத் தனி தொழிற்கல்வி நிலையம் அமைத்தல்.

வினா எண் 21475—டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதியில் மகளிருக்கென தனியாக தொழிற்கல்வி நிலையம் (Polytechnic) அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசு ஆணை எண். 579, கல்வி, நாள் 15—6—1993-ல் 1993—94-ஆம் ஆண்டில் புதிய பாலிடெக்னிக்குகள் துவக்குவதை நிறுத்தி வைத்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில் குன்னூரில் மகளிருக்கென தனியாக தொழில் கல்வி நிலையம் அமைக்க வழிவகை ஏதும் இல்லை.

81—

தேயிலைத்தூள் தயாரிப்பதற்கென பட்டயப் படிப்பு ஏற்படுத்தல்.

வினா எண் 21476—டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னிய செலாவணியை ஈட்டித்தரும் தேயிலைத் தூள் தயாரிப்பதற்கென (Tea makers) பட்டயப் படிப்பு உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(அ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) அன்னிய செலாவனியை ஈட்டித்தரும் தேயிலைத் தூள் தயாரிப்பதற்கென (Tea Makers) பட்டயப் படிப்பு உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

82—

பரிவிளாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 21648—திரு. என். ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், பரிவிளாகம் கிராமத்தில் உள்ளஅரசு உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1993-94ஆம் கல்வியாண்டில் பரிவிளாகம் அரசு உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

83—

லால்பேட்டையிலுள்ள பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா எண் 21649—திரு. என். ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், லால்பேட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1993-94ஆம் கல்வி ஆண்டில் லால்பேட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

84—

தொழிலாளர் நலத்துறையில் சில காலியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 10639— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நலத்துறை ஆணையருக்கு அடுத்து அவரின் கீழ் உள்ள துணை ஆணையர், உதவி ஆணையர் போன்ற பணியிடங்களில் காலியிடங்கள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிரப்ப அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் துணை ஆணையர் மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் பணியிடங்களில் காலி இடம் ஏதும் தற்போது இல்லை.

85—

படித்த இளைஞர்கட்கு வழங்கப்படும் கடனை முறைப்படுத்தல்.

வினா எண் 13163— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்களுக்கு தொழில் செய்ய வழங்கப்படும் கடன்களை ஒழுங்குபடுத்தி உடனுக்குடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்த வரை படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி எதுவும் அளிக்கப்படுவதில்லை.

86—

பஞ்சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்தல்,

வினா எண் 15151—திரு. கே. செல்வராஜ், : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதைத் தடுக்க அரசு சட்டம் இயற்றுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஒப்பந்தத் தொழிலாளர்களின் வேலையினை சில நிறுவனங்களில் முறைப்படுத்தவும், பணச் சூழ்நிலைகளுக்கேற்ப ஒப்பந்த முறையினை சில நிறுவனங்களில் நீக்கம் செய்யவும் ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 என்ற சட்டம் ஒன்று இருப்பதால், தனியாக பஞ்சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதைத் தடுக்க புதிய சட்டம் ஒன்று அரசு இயற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

87—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோருக்கு முன்னுரிமை அளித்தல்.

வினா எண் 45287—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கணவனால் கைவிடப்பட்டவர்கள், குருடர், உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்வுக்கு அனுப்புவதில் முன்னுரிமை அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை ஏதும் அரசால் அளிக்கப்படவில்லை. இவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் திட்டம் ஏதும் இத்துறையில் பரிசீலனையில் இல்லை. பார்வையற்றவர்கள் மற்றும் காதுகேளாதோர், வாய்பேச இயலாதோர், மற்ற உடல் உறுப்புகளில் ஊனமுற்றவர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்வதில் முன்னுரிமை அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

88—

தொழிலாளர் நலத்துறையில் தாழ்த்தப்பட்டவர் நியமனம்.

வினா எண் 17355—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலத்துறையில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் எத்தனை விழுக்காடு பணி பெற்றுள்ளனர் ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

தொழிலாளர் நலத்துறையில் பணியாற்றும் 2,065 பணியாளர்களில் 271 பணியாளர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களாவர். அது மொத்த எண்ணிக்கையில் 13.1 சதவீதம் ஆகும்.

89—

தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள் வேலை செய்தல்.

Question No. 17403—Thiru M. SUNDARADOSS : Will the Hon. Minister for Labour Welfare be pleased to State—

(a) Whether any investigation has been conducted recently by UNICEF into the incidence of child labour in this State and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் 15 வயதிற்குட்பட்ட குழந்தை தொழிலாளர்கள் வேலை செய்வதை அறவே நீக்க 5 ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் ஏப்ரல் திங்கள் 1992-ல் அறிவித்ததையொட்டி யூனிசெப் நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து இப்பிரச்சினை குறித்து விரிவாக ஆராய ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவும் அரசிற்கு ஒரு அறிக்கையினை சமர்ப்பித்தது. அதனை பரிசீலித்து வருகிறது.

90—

அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் தகவல் தொகுப்பு மையத்தை கணினி மயமாக்குதல்.

வினா எண் 19179—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தகவல் தொகுப்பு மையத்தை கணினி (Computerisied) மயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) ஆனால், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் புள்ளி விவர தொகுப்பு மையத்தை கணினி மயமாக்கும் பணியை அந்நிறுவனமே, நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெற்று மேற்கொண்டுள்ளது. அப்பணி திருவாளர்கள் பல்லவன் ஆலோசனைக்குழுவின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆலோசனைக்குழு வழங்கிய அறிவுரையின்படி திருவாளர்கள் எலெக்ட்ரானிக் சிஸ்டம் ஆப் பஞ்சாப் (இது ஒரு பஞ்சாப் மாநில அரசு நிறுவனம்) அவர்களின் மூலம் ரூபாய் 1,41,595 செலவில் ஒரு பி. சி. (எ.டி.) நிறுவப்பட்டது.

மேலும் இந்நிறுவனத்தின் பணியாளர்களுக்கு அக்கணினியை இயக்க ஓரளவு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த 14 ஆண்டு காலமாக பதிவு செய்த நபர்களின் விவரங்களை கணினியில் பதிவு செய்வதற்கான பணியை 3 மாத காலத்திற்குள் முடிக்குமாறு ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் 13,000 நபர்களின் விவரங்கள் கணினியில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

91—

பிச்சாவரம் பகுதியில் தொழிலாளர் ஓய்வு இல்லம் அமைத்தல்.

வினா எண் 19315— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், பிச்சாவரம் சுற்றுலா பகுதியில் 'தொழிலாளர் ஓய்வு இல்லம்' அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

92—

கடலூரில் தொழிலாளர் நல மையம் தொடங்குதல்.

வினா எண் 19316— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூரில் தொழிலாளர் நல மையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூரில் எண் 17, துக்காராம் தெரு, மஞ்சக்குப்பம் என்ற முகவரியில் 5—2—1993 முதல் புதிதாக ஒரு தொழிலாளர் நல மையம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் பல்வேறு தொழிலகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் 50 குழந்தைகள் பாலர்பள்ளி பிரிவில் பயிற்சி பெற்று வருகிறார்கள். தையற் பயிற்சி பிரிவில் 47 மாணவிகள் தற்பொழுது தையற் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

93—

தொழிற்சாலைகளில் விபத்து தடுப்பு நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் 20034— திருமதி சே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 29

தொழிற்சாலைகளில் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றி தொழிலாளர்களுக்கு வீடியோ கேசட்டுகள் மூலம் விளக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

ஆம். தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய வீடியோ கேசட்டுகள், பாது காப்பு குறித்த பயிற்சி வகுப்புகள் நடக்கும்போது தொழிலாளர் கள் பயன் பெற விளக்கிக் காட்டப்பட்டு வருகின்றன.

94—

பாரம்தூக்கும் தொழிலாளர்களுக்கும் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையில் சிகிச்சை அளித்தல்.

வினா எண் 20098—திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளில் (ஈ.எஸ்.ஐ.) பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

ஈ. எஸ். ஐ. விதிகளின்படி, மாத வருமானமுள்ள 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மட்டுமே, இந்த திட்டத்தில் சேர முடியும். தனிப்பட்ட, சொந்த வருமானமுள்ள பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

95—

பெரியநெகமம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கோவில் நிலம் வாங்குதல்.

வினா எண் 1102—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) கிணத்துக்கடவு தொகுதி, பெரிய நெகமம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு, கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை சட்டவிரோதமாக அதிகவிலை கொடுத்து வாங்கியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) கோவிலுக்குச் சொந்தமான நிலம் திரு. கே. வி. கந்தசாமிக்கு சொந்தமான பின்பு அவரிடமிருந்து பெரிய நெகமம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வாங்கியுள்ளது. அரசு வழக்குரைஞரிடமிருந்து சட்டக் கருத்துரை பெற்று அரசு நிர்ணயித்த விலைக்கு உட்பட்டே வங்கி நிலத்தை வாங்கியுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

96—

திருச்சியில் உள்ள அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடியின் செயல்பாடுகள்.

வினா எண் 11499—டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடி நட்டத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில், அக்கூட்டுறவு சிறப்பங்காடி இலாபகரமாக செயல்பட அரசு ஆவன செய்யுமா ?

விடை —

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) திருச்சிராப்பள்ளியில் உள்ள அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடி திருச்சிராப்பள்ளி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் ஓர் அங்கமாகும். இப்பண்டகசாலை இப்போது நட்டத்தில் இயங்கி வருகிறது. ஆனால் அமராவதி கூட்டுறவு சிறப்பங்காடிக்கென தனியாக வரவு-செலவு மற்றும் இலாப நட்ட கணக்குகள் பராமரிக்கப் படவில்லை.

(ஆ) இப்பண்டகசாலை இலாபகரமாக செயல்படக் கூடிய சாத்தியக்கூறுகள் ஆய்ந்தறியப்பட்டு, அவற்றை செயல்படுத்து வதற்குறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

97—

அக்னேஸ்புரம் கிராமத்தில் கூட்டுறவு அங்காடி ஏற்படுத்தல்.

வினா எண் 16139— திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் அக்னேஸ்புரம் கிராமத் திற்கு தனியாக கூட்டுறவு அங்காடி ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

98—

கோவை மாநகராட்சிக்கு குப்பை லாரிகள் வாங்குதல்.

வினா எண் 9272—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சிக்கு குப்பைகள் எடுத்துச்செல்ல புதிதாக லாரிகள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், எப்போது வாங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) கோவை மாநகராட்சிக்கு குப்பைகள் எடுத்துச் செல்ல புதிதாக ஆறு டன் கொள்ளளவு கொண்ட ஆறு டிம்பர் லாரிகள் மற்றும் ஒரு எக்ஸாவேடர்-கம்-லோடர் வாகனமும் உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) இந்த ஏழு வாகனங்களை வாங்குவதற்கு தேவையான தொகையினை கோவை மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையரையும், உலக வங்கி இணை இயக்குநரையும் கேட்கப்பட்டுள்ளது. அத்தொகை பெறப்பட்டதும் வாகனங்கள் வாங்கப்படும்.

99—

பஞ்சப்பட்டி கிராமத்திற்கு காவிரி குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 9333—திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுக்கா, பஞ்சப்பட்டி கிராமம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளா?

(ஆ) ஆம்எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

100—

நகராட்சி மருத்துவ அலுவலரின் பொறுப்புகள் நகராட்சி ஆணையரிடம் ஒப்படைத்துள்ளது.

வினா எண் 9747— டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989-90 நகராட்சி மருத்துவ அலுவலரின் (M.H.O.) பொறுப்புக்கள் நகராட்சி ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பொறுப்புக்களை மீண்டும் நகராட்சி மருத்துவ அலுவலரிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நகராட்சிகளின் பொது சுகாதார நிர்வாக பொறுப்பை நகராட்சி நிர்வாக துறைக்கும் நகராட்சி ஆணையர்களுக்கும் முழுமையாக ஒப்படைத்து வெளியான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 351, நாள் 14-6-1989 மற்றும் இது குறித்து இந்த சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள திருத்த சட்டம் 25/90 ஆகியவற்றில் மாற்றம் தேவையென அரசு கருதவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

101—

சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 9852—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) காமராசர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தினை இரண்டாகப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

102—

ஆனைமலை கிளப் அருகில் உள்ள ஆற்றில் போட்ஹவுஸ் கட்டுதல்.

வினா எண் 9972—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வால்பாறை நகரியத்திற்குட்பட்ட ஆனைமலை கிளப் அருகிலுள்ள ஆற்றில் குறுக்குச் சுவர் கட்டி நீர்தேக்கி 'Boat House' விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இது தொடர்பாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளரிடமிருந்து கோவை மாவட்டப் பேரூராட்சி அலுவலரால் மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. அது கிடைக்கப் பெற்றதும் மேற்படி படகு இல்லம் கட்டுவது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

[1993 அக்டோபர் 29

103 —

தொகுப்பு வீடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்படும் முறை.

வினா எண் 10112—டாக்டர். வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு தொகுதிக்கும் தொகுப்பு வீடுகள் எந்தெந்த நிபந்தனைக்குட்பட்டு ஒதுக்கப்படுகிறது ?

(ஆ) தனித் தொகுதிகளில் உள்ளவர்களுக்கும் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மற்ற இனத்திற்கும் அதிகமாகத் தொகுப்பு வீடுகள் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் ஆகியவர்களுக்கு அவர்கள் நிலப்பட்டா வைத்திருந்தால் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்கப்படும். இதில் இதுவரை காங்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகள் கட்டப்படாத கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தொகுப்பு வீடுகள் கட்டித்தரப் படுகிறது.

(ஆ) தனித் தொகுதிகளில் உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மற்ற இனத்திற்கும் தொகுப்பு வீடுகள் அதிகமாக அளிப்பதற்கு மத்திய அரசின் விதிமுறைகளின்படி வழிவகை இல்லை.

104—

பெரிய நெகமத்தில் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 10155— திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

105—

திருநின்றவூரில் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 10257—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி திருநின்றவூரில் பேருந்துகள் நிற்பதற்கு பேருந்து நிலையம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருநின்றவூர் பேரூராட்சி எல்லைக்குள் 2 பேருந்துகள் மட்டும் வந்து செல்வதாலும் பேரூராட்சிப் பகுதியில் போதிய இடவசதி இல்லாததாலும், பேருந்து நிலையம் அமைக்க இயலவில்லை.

106—

வலங்கைமானில் பேருந்துநிலையம் அமைத்தல்.

வினா எண் 10293—திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி வலங்கைமானில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

107 —

திருவேங்கடத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 10316— திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி திருவேங்கடத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர ஒப்பளிப்பு (Sanction) செய்யப்பட்டும் வேலை தொடங்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில், கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருவேங்கடம் குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 29.62 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் (1993-94) நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நிதி ஒதுக்கீடு செய்து பின் திட்டப் பணிகள் செயல்படுத்தப் படும் என்று நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

1993 அக்டோபர் 29]

108 —

ஓசூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களை நகரியமாக மாற்றுதல்.

வினா எண் 10323—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துகளான சூசுவாடி (Zuzuadi) முக்காண்டப்பள்ளி கிராமங்களை இணைத்து ஓர் நகரியமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஓசூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துகளான சூசுவாடி முக்காண்டப்பள்ளி கிராமங்களை இணைத்து நகரியம் ஆக்கும் திட்டம் தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

109—

நகராட்சி பகுதிகளில் சிறிய தொழில் நிறுவனங்கள் அமைத்தல்.

வினா எண் 10359—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதிகளில் சிறிய தொழில் நிறுவனங்கள் அமைக்க உதவியும் மானியமும் அளிக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகராட்சிப் பகுதிகளில் வறுமை கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு சிறு தொழில் செய்ய நிதியுதவி அளிக்கப்படுகிறது.

110—

செட்டியூர், கவுண்டன்புதூர் ஆகிய கிராமங்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை போக்கும் திட்டம்

வினா எண் 10365—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி ஒன்றியம், ராகலாபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட செட்டியூர், கவுண்டன்புதூர் ஆகிய இரு கிராமங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்விரு கிராமத்திற்குமிடையில் பொதுவான ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இக்கிராமங்களுக்குப் போதிய அளவு குடிதண்ணீர் கிடைப்பதால் முழு அளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

111—

உதயேந்திரம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுதல்.

வினா எண் 10374—டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதயேந்திரம் வட ஆற்காடு, அம்பேத்கார் மாவட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பணி துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்,

(ஆ) திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

112—

அத்தியூத்துகிராமத்தில் மேல்நிலைத்தொட்டி கட்டுதல்.

வினா எண் 10407—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அத்தியூத்து கிராமத்தில் மேல்நிலைத்தொட்டி செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூத்து கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 1991ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரம் முதல் இயக்கப்பட்டு நான்கு நல்லிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[1993 அக்டோபர் 29

113—

சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடை அமைத்தல்,

வினா எண் 10539—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

114—

கெங்கம்பாளையத்தில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண் 10951—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆனைமலை ஒன்றியம், கெங்கம்பாளையம் என்ற கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கெங்கம்பாளையம் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்குத் தோராயமாக ரூ. 60 இலட்சம் தேவைப்படும். தற்போதுள்ள நிதிப்பற்றாக்குறையினால் இதுபற்றிய செயற்குறிப்பேதுமில்லை.

[1993 அக்டோபர் 29

115—

மருதப்பபுரத்திலிருந்து நவநீதகிருஷ்ணபுரம் வரையுள்ள சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 10957—திரு. எஸ். எஸ் ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், சிவலூர் வழியாக மருதப்பபுரத்திலிருந்து நவநீதகிருஷ்ணபுரம் வரையிலுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், சிவலூர் வழியாக மருதப்பபுரத்திலிருந்து நவநீதகிருஷ்ணபுரம் வரையிலுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

116—

பெருந்தோட்டம் கிராமத்தில் சத்துணவுக்கூடத்தில் தனிநபர் ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

வினா எண் 10997— திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் கிராமத்தில் சத்துணவு கூடத்திற்கு முன்னால் பஞ்சாயத்திற்குச் சொந்தமான இடத்தில் தனிநபர் ஆக்கிரமித்து சத்துணவுக்கூடத்திற்கு இடையூறு செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்கள் தாங்களாகவே இடத்தினை காலி செய்திட சீர்காழி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

117—

அருணாசலப்பேரி சுப்பையாபுரத்திற்கு இடையிலுள்ள சாலை பழுதடைந்திருப்பதை செப்பனிடுதல்.

வினா எண் 11049— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், அருணாசலப்பேரி சுப்பையாபுரத்திற்கு இடையிலுள்ள சாலையில் இரண்டு குழாய்ப் பாலங்கள் போடப்படாததால் சாலைகள் பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், அருணாசலப்பேரி சுப்பையாபுரத்திற்கு இடையே உள்ள சாலையில் இரண்டு குழாய் பாலங்கள் 1992–93ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 36,000 மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

118—

புவனகிரி பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைத்தல்.

வினா எண் 11149— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

119—

கோவில்பட்டி நகரத்தின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்த்தல்.

வினா எண் 11169— திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரத்தின் குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி நகரின் குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் தலைமைப் பணியிடத்தில் புதிய நீரேற்று இயந்திரங்கள் மாற்றியமைக்கவும், கோவில்பட்டி நகரில் கூடுதலாக ரு 5.00 இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவு நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டுவதற்கும் ரூ. 132.20 இலட்சங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் திட்டமிடப்பட்டு, மதிப்பீடு, வாரிய தொழில்நுட்பக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

120—

ஆரணி நகராட்சியில் புதிய பயணியர் விடுதி கட்டுதல்.

வினா எண் 11329—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி நகரில் நகராட்சி சார்பாக புதிய பயணிகள் விடுதி ஒன்றை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆரணி நகரில் நகராட்சி சார்பாக புதிய பயணியர் விடுதி கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

121—

பழனி நகரின் குடிநீர்ப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுதல்.

வினா எண் 11703 திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரின் குடிநீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரமான தீர்வு காணும் வகையில் தொலைநோக்கு திட்டம் ஒன் உருவாக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பழனி நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க நான்காவது குடிநீர் அபிவிருத்தி திட்டம் அமைக்க பாலாறு பொருந்தலாறு அணையை நீராதாரமாகக் கொண்டு ரூ. 584 இலட்சங்களுக்கு திட்டமதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டதும் வாரியக் குழுவின் ஒப்புதல் பெற்று திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 29]

122—

பழனிக்கு வரும் குடிநீரை தடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்தல்.

வினா எண் 11705—திரு. ஆ. சுப்புரத்தினம்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலிலிருந்து பழனி நகருக்கு வரும் குடிநீரை வழியில் உள்ளோர் தடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) இதனைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்லவகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம், கொடைக்கானலிலிருந்து பழனி நகருக்கு வரும் பெரியாறு ஆற்றுநீர் 1932 ஆம் ஆண்டு முதல் பழனி நகராட்சியின் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வருவாய்த்துறை கணக்குகளின்படி, கொடைக்கானல் வட்டம், வில்பட்டி கிராமத்தில் 69.52.5 ஹெக்டேர் நிலம், பெரியாறு ஆற்றில் நஞ்சை ஆயக்கட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆயக்கட்டுதாரர்கள் நஞ்சை தீர்வை செலுத்துவதால், வருடத்தில் ஒரு பயிருக்கு இந்த ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ள தகுதி உண்டு. எனவே விவசாயத்திற்கு இவ்வாறு நீரைப் பயன்படுத்துவதை சட்டபூர்வமாக தடுக்க இயலாது.

123—

வேட்டைக்காரன்புதூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 11721—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிக்கு சர்கார்பதி மலையிலிருந்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

[1993 அக்டோபர் 29

124—

கொடுமுடியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 11763—திருமதி கலிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியில் புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

125—

போரூர் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 11852—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்குன்றத்திலிருந்து போரூருக்கு குடிநீர் கொண்டு செல்லும் முக்கிய குழாய்கள் அமைக்கும் பணி எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தேசிய நகர்ப்புற வீட்டு வசதிக் கழகம் மூலம் பெறப்படவுள்ள கடனுதவி கிடைத்தவுடன் சுமார் மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

1993 அக்டோபர் 29]

126—

மூர் அங்காடிக்கு ராஜீவ்காந்தி பெயரைச் சூட்டுதல்.

வினா எண் 11958—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மூர் அங்காடிக்கு புதிதாகக் கட்டப் படும் கட்டிடத்திற்கு அமரர் ராஜீவ் காந்தியின் பெயரை சூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இத்தகைய கோரிக்கை ஏதும் வரவில்லை. எனவே, இத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

127—

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 12095—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி நீப்பத்துறைக்கும் அம்மாபேட்டை தர்மபுரிக்கும் இடையில் ஓடும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1993 அக்டோபர் 29

128—

கோவை மாநகராட்சியில் அடிப்படை வசதிகள் செய்தல்.

வினா எண் 12828—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி எல்லைக்குள் அங்கீகரிக்கப் படாத மனைக்கட்டுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகட்கு சொத்து வரி மட்டும் வசூலித்துக்கொண்டு அடிப்படை வசதிகள் செய்து தரப்படாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்

(அ) ஆம்.

(ஆ) கோவை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள அங்கீகரி கப்படாத மனைப்பிரிவுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகட்கு அடிப் படை வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

129—

கோவை மாநகராட்சியின் கீழ்பகுதிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்தல்

வினா எண் 12835—திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியின் கீழ்பகுதிகளும், சிங்காநல்லூரும் பயன்பெறும் வகையில் 3-வது பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்று நிறைவேற்ற அரசிடம் செயற்திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை.

1993 அக்டோபர் 29]

130—

ஒவ்வொரு ஊராட்சியிலும் கண்காணிப்புக்குழு அமைத்தல்.

வினா எண் 12853.—திரு. சே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் நலத் திட்டங்கள் சீரியமுறையில் செயல் படுவதனைப் பார்வையிட அரசு ஒவ்வொரு ஊராட்சிக்கும் கண்காணிப்புக்குழு (Vigilance Committee) ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மக்கள் நலத்திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுவதையும், அதன் பயன்கள் மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க கிராம அளவிலும், ஊராட்சி ஒன்றிய அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

131—

இராசிபுரம் நெடுங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண். 13311.—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

இராசிபுரம் நெடுங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீட்டித்து மாமுண்டி அக்ரகாரம் வரை விரிவுபடுத்த அரசு ஆவண செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராசிபுரம் நெடுங்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மாமுண்டி அக்ரகாரம் வரை நீட்டித்து விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 29

132—

அடைச்சாணி ஊராட்சி ஒன்றிய குடிநீர்த்திட்டம்.

வினா எண் 13820.—திரு இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம் அடைச்சாணி ஊராட்சி குடிநீர்த் திட்டம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிக்கு விடப்பட்டும் இன்னும் வேலை துவங்கப்படாதது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இக்குடிநீர்த் திட்டத்தில் குழாய் பதிக்கும் பணி 1992-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலும், நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி 1993-ம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும் துவங்கப்பட்டு நடந்தேறி வருகிறது.

133—

பாப்பான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 13821.—திரு இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கடையம் ஒன்றியம், பாப்பான்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து, மலையான்குளம், மடவார்விழாகம், புதுக்காலனி பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடையம் ஒன்றியம், பாப்பான்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து மலையான்குளம் கிராமத்திற்கு நான்கு பொதுக் குழாய்கள் மற்றும் மடவார்விழாகம் கிராமத்திற்கு இரண்டு பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 29]

134—

சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

வினா எண் 14488.—திரு க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் எதிர் காலத்தில் உருவாகவிருக்கிற மாநகராட்சியின் அனைத்துப் பகுதிக்கும் சேர்த்து விரிவாக்கப்படுமா ?

(ஆ) அதற்கான தோராய மதிப்பீடு எவ்வளவு ?

(இ) திட்டம் எப்போது துவங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சேலம் மாநகராட்சியில் இணைக்கப்படும் பகுதிகள் இன்னும் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப் படாததால் இவைகள் தற்போதைய திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. உரிய நேரத்தில் மாநகராட்சியின் ஒப்புதல் பெற்று இவைகள் சேர்த்துக் கொள்ளப்படும்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(இ) சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்கனவே துவங்கப்பட்டு விட்டது.

135—

சேலம் மாநகராட்சிக்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 14489.—திரு க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியாகும் பொழுது உடன் சில கிராம பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்படுவதால் அப்பகுதி மக்களுக்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர்த் திட்டம் நிறை வேற்றப்படுமா ?

(ஆ) இத்திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கித் திட்டத்தின் கீழ் அமைக்கும் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்டுள்ள 5 ஊராட்சிகளையும், சேலம் நகராட்சியையும் சேர்த்து, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு திட்டம் ஒன்று ரூ. 89.50 கோடி தோராய மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றபின் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

136—

கடையம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடக் குடியிருப்புகள் கட்டுதல்.

வினா எண் 14557.—திரு இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், ஏ. பி. நாடானூர் ஊராட்சி—புதுக்காலனியில் ஆதிதிராவிட குடியிருப்புகள் அமைப்பது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கடையம் ஊராட்சி ஒன்றியம், ஏ. பி. நாடானூர் ஊராட்சி புதுக்காலனியில் ஆதிதிராவிட குடியிருப்புகள் ஏற்படுத்த பட்டா நிலம் இல்லாத காரணத்தால் வேலை எடுக்கப்படவில்லை.

137—

கடையம் ஒன்றியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 14562.—திரு இரா. புதுநயினார் ஆதித்தன்: ண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி காலூர்—ராமநாதபுரம்—சங்கரலிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

138—

கடையம் ஒன்றியத்தில் முருகாண்டியூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 14563.—திரு இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், அனந்த பெருமாள் நாடானூர் ஊராட்சி, செல்வப் பிள்ளையார்குளம் குடிநீர் திட்டத்தில் இருந்து முருகாண்டியூர் ஊருக்கு தண்ணீர் செல்ல தனிக் குழாய்கள் (Pipe Line) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறை வேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

139—

முப்புலியூர் கூட்டுக் குடிநீர் திட்டம்.

வினா எண் 14565.—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, கோதண்டராமபுரம் — முப்புலியூர் கூட்டுக் குடிநீர் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

140—

கட்டளையூர் கூட்டுக்குடிநீர் திட்டம்.

வினா எண் 14568— திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், அஞ்சாங்கட்டளை ஊராட்சி, சொக்கநாதப்பட்டி, கட்டளையூர் கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது'

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஐந்தான் கட்டளை (ஊ) சொக்கநாதப்பட்டி கட்டளையூரில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் திட்டம் எதுவும் இந்த ஆண்டில் இல்லை.

141—

சொக்கலிங்கபுரத்தில் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 14573—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், அனந்தபெருமாள் நாடாரூர் ஊராட்சி சொக்கலிங்கபுரம் ஊருக்கு குடிநீருக்காக ஒரு தரை மட்ட நீர்த்தொட்டி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

142—

அகரபுத்தூர் கிராம மக்களுக்கு குடிநீர்வசதி செய்தல்.

வினா எண் 14694— திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோவில் தொகுதி, அகரபுத்தூர் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படுமா

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1993 94ல் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு அவ்வாண்டு இறுதிக்குள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

143—

காட்டுமன்னார்கோவில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 14696—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னரர் கோயில், பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவண செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

செய்வதற்கில்லை.

144—

பரமக்குடி நகரில் ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனி கதவிலக்கம் இடுதல்.

வினா எண் 14727—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில் ஒரே கதவு எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் இருப்பதால் ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாக கதவு இலக்கம் அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பரமக்குடி நகராட்சிப் பகுதியில் ஒரே கதவு எண்ணில் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் ஏதும் இல்லை.

—

145—

சுப்பிரமணியபுரத்தில் கல்யாணமண்டபம் கட்டுதல்.

வினா எண் 15222—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான சுப்பிரமணியபுரம் பகுதியில் குறைந்த வாடகைக்கு விட கல்யாண மண்டபம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான சுப்பிரமணியபுரம் பகுதியில் கல்யாண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

146—

கோவை மாநகராட்சியின் சில பகுதிகளுக்கு பாதாள சாக்கடை.

வினா எண் 15223—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கணபதி சீரநாயக்கன்பாளையம், கவுண்டம்பாளையம், குனியமுத்தூர் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமுல் படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் ,எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கணபதி, சீரநாயக்கன்பாளையம், கவுண்டம்பாளையம், குனியமுத்தூர் ஆகிய பகுதிகளில் கணபதி யாகிய ஒரு பகுதி மட்டும் விடுபட்ட பகுதிகளுக்கான கோவை

மாநகர பாதாள சாக்கடைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 15-2-1993ல் தான் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்பக் குழு மற்றும் வாரியக் கூட்டத்தின் அனுமதியுடன் அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் கிடைத்த பின்னரே திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

147—

செம்பனார் கோவிலில் பேரூராட்சி அமைத்தல்.

வினா எண் 15344—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார் கோவில் ஒன்றியம், பரசலூர், செம்பனார் கோவில் ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இணைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பரசலூர் மற்றும் செம்பனார் கோவில் ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சி அமைக்கக் கோரும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

148—

தமிழகத்தில் வருமானவரி விற்பனைத் தொகை அடிப்படையில் விதிக்கப்படுதல்.

வினா எண் 15387—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வருமான அடிப்படையில் தொழில்வரி விதிக்காமல் ஆண்டு விற்பனைத் தொகை அடிப்படையில் விதிக்கப்படுவதை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை துறை அமைச்சர்:

இல்லை.

149—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல்.

வினா எண் 16024—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பற்றாக்குறையைப் போக்க சிறுவாணி குடிநீர் திட்டத்தை விரிவாக்க கேரள அரசுடன் கலந்து ஆலோசித்து அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

150—

சென்னையிலுள்ள திரு.வி.க. பூங்காவில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதை தடுத்தல்.

வினா எண் 16397—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள திரு. வி. க. பூங்காவில் மழைக் காலங்களில் நிறைய தண்ணீர் தேங்குவதால் பூங்கா பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாறு தண்ணீர் தேங்காமல் இருக்க பூங்காவை மேடுபடுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னை செனாய் நகரில் உள்ள திரு.வி.க. பூங்காவில் அடை மழைக்காலங்களில் மட்டும் ஓரிரண்டு நாட்களுக்கு பூங்காவில் ஒரு பகுதியில் தண்ணீர் தேங்கும் நிலை உள்ளது.

மேற்படி மழைத் தண்ணீர் தேங்காமல் இருக்க அருகில் இருக்கும் மழைநீர் வடிகாலுடன் இணைப்பு கொடுக்கவும், மேலும் பள்ளமாக இருக்கும் பகுதியை, மேடாக்கி சமப்படுத்துவதற்கும் நடப்பு நிதியாண்டில் (1993—94) சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

151—

பாரதி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல்.

வினா எண் 16418— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் 1992-93-ஆம் ஆண்டு பாரதி நகர் பகுதியில் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் 1992-93-ம் ஆண்டு பாரதி நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

152—

பரமக்குடி நகராட்சி பகுதியில் ஆற்றின் கரை ஓரங்களில் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 16420—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சிப் பகுதிக்குள் சாக்கடை நீர் கலக்காமல் இருக்க ஆற்றின் கரை ஓரங்களில் தடுப்புச் சுவர் கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி நகராட்சியில் கழிவு நீர் ஆற்றில் கலப்பதைத் தடுப்பதற்கான திறந்தவெளி வாய்க்கால் மற்றும் தடுப்புச் சுவர் கட்ட நகராட்சியிடமிருந்து வேண்டுகோள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கிடைத்துள்ளது.

இதற்கான விரிவான ஆய்வுப் பணிகளைச் செய்வதற்காக ரூ. 3.46 இலட்சங்களுக்கு ஆய்வு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுத் தொகையை நகராட்சி செலுத்தினால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு உரிய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும்.

153—

பர்கூர் ஆதிதிராவிட மலைவாழ் மக்களுக்கு மேல்நிலை தொட்டி கட்டுதல்.

வினா எண் 16515—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குழாய் அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பர்கூர் மலைப் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் துரப்பனைகருவிகள் கொண்டு செல்ல போதியபாதை வசதி இன்மையாலும், இங்கு சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினைகள் காரணமாக தடை உத்தரவு நிலவுவதாலும், இங்கு குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள இயலவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

154—

பரமக்குடி நகராட்சியின் கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் தடுத்தல்.

வினா எண் 16685—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியின் கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு உலக வங்கி கடன் வழங்கி உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

155—

நகராட்சி பகுதிகளில் மரங்கள் அதிகமாக வளர்த்தல்.

வினா எண் 16701—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) நகராட்சிப் பகுதிகளில் மரங்கள் அதிகமாக வளர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பதைக் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நகராட்சிப் பகுதிகளில் காலியான இடங்கள், அலுவலக வளாகங்கள், பள்ளிக் கட்டிடப் பகுதி ஆகிய இடங்களில் மரங்கள் அதிகமாக வளர்க்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

(ஆ) இனி, நகராட்சிப் பகுதிகளில் புதியதாக வீடுகள் கட்ட நகராட்சி அனுமதி வழங்கும்போது, அந்த வீட்டு மனையில் குறைந்தது ஒரு மரமாவது நடப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி அறிவுரை வழங்குவது பற்றி ஆராயப்படும். மற்றும் தற்போது நகராட்சிகளில் உள்ள வீடுகளில் மரங்கள் இல்லையெனில் வீட்டிற்கு ஒரு மரமாவது நடப்பட வேண்டும் என்று வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அறிவுரை வழங்குவது பற்றியும் ஆராயப்படும்.

156—

பரமக்குடி நகராட்சியில் தொழில் வரி மற்றும் வீட்டுவரி நிலுவைத் தொகை.

வினா எண் 16838—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் தொழில்வரி மற்றும் வீட்டுவரி நிலுவைத் தொகை 1991-92-இல் எவ்வளவு ?

(ஆ) முற்றிலுமாக வீட்டுவரி வசூல் செய்த நகராட்சிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் 1991-92 நிதியாண்டில் தொழில் வரியின் கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 3.92 இலட்சம் ஆகும். வீட்டுவரியின் கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 2.35 இலட்சம் ஆகும்.

(ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

புதுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம்.

வினா எண் 16999—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

158—

சென்னை மாநகராட்சி பூங்காவில் மூலிகைச் செடிகளை வளர்த்தல்.

வினா எண் 17446—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சென்னை மாநகரப் பூங்காக்களில் அன்றாட வாழ்வில் பயன்படும் துளசி, தும்பைப் போன்ற மூலிகைச் செடிகளை வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

159—

தளி ஊராட்சி பிற்பட்ட ஒன்றியங்களுக்கு ஐ.எல்.ஓ. திட்டம் செயல்படுத்துதல்.

வினா எண் 17558—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் ஐ.எல்.ஓ. (International Labour Organisation) திட்டம் மற்ற பிற்பட்ட ஒன்றியங்களுக்கு செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம், அரசினால் பரிசீலிக்கப்பட்டு திட்டம் ஐ.எல்.ஓ. வின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

160—

உதச்சிக்கோட்டை தினசரி சந்தையை தனியாரிடமிருந்து மீட்டு பஞ்சாயத்துச் சந்தையாக மாற்றுதல்.

வினா எண் 17568—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை பேரு ராட்சி உதச்சிக்கோட்டை தினசரி சந்தை தனியார் நிலத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தச் சந்தையை தனியாரிடமிருந்து மீட்டு அதே இடத்தில் பஞ்சாயத்துச் சந்தையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

161—

மோகனூர்-ஆர். பட்டினம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19084—திருமதி க. பழனியம்மாள் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர்-ஆர். பட்டினம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

162—

துறையூர் நகருக்கு முசிறி காவிரியிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைத்தல்.

வினா எண் 19109—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) உப்பிலியாபுரம் தொகுதியைச் சார்ந்த துறையூர் நகருக்கு முசிறி காவிரியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காவிரி நதியை நீராதாரமாகக் கொண்டு துறையூர் நகராட்சி உப்பிலியாபுரம், மேட்டுப்பாளையம் தாத்தையங்கார்ப்பேட்டை, பாலகிருஷ்ணயம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 94 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

163—

விளவங்கோடு தொகுதியில் மெதுகும்மல்-களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19171—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி மெதுகும்மல்-களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மெதுக்கும்மல், களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் 12/94க்குள் முடித்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

164—

விருதுநகருக்கு குடிநீர்த் திட்டம்

வினா எண் 19362—திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு உடனடி குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஒண்டிபுலி தண்ணீர்த் திட்டம் துவங்கப்பட்டும் போதிய குடிநீர் கிடைக்காததால், நிரந்தர தீர்வாக மாற்றுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் நகராட்சிக்கு மாற்றுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் எதுவும் வாரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

165—

வருமானம் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றுதல்.

வினா எண் 19311—திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வருமானம் மிகக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வருமானம் மிகக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றம் செய்ய கோரிக்கை வரப்பெற்றால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்குட்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 29]

166—

புளியஞ்சோலையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 19337—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரத்திற்கு உப்பிலியாபுரம் தொகுதி புளியஞ்சோலையில் இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) உப்பிலியாபுரம் பேரூராட்சியின் குடிநீர்த் திட்டம் அய்யம்பாளையத்தில் காவிரி நதியை தலைப்பிடமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ள துறையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், புளியஞ்சோலையில் இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

167—

விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டம்.

வினா எண் 19361—திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

[1993 அக்டோபர் 29

168—

சுப்பையாபுரத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 20054—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம்-ஆட்டையாம்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் சுப்பையாபுரத்தையும் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

169—

கிருஷ்ணகிரிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கல்.

வினா எண் 20090—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரிக்குப் போதிய குடிநீர் வழங்க இரண்டாவது குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதலும் குழாய் அமைத்தலும் எந்த நிலையில் உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கிருஷ்ணகிரிக்கு தென்பெண்ணையாற்றில் கூடுதலாக ஒரு நீர் உறிஞ்சி கிணறும், நகரில் கூடுதலாக ஒரு மேல்நிலைத் தொட்டியும், மேலும், நகரில் விடுபட்டுள்ள பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள் பதிக்கவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி நகராட்சியினர் ஆய்வுக் கட்டணம் முழுவதையும் செலுத்திய பின்னரே நகராட்சிக்கான குடிநீர் திட்ட ஆய்வுப்பணிகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 29]

170—

குமரன் ஆதிதிராவிடர் காலனிக்கு கழிவுநீர் வடிகால் வசதி செய்தல்.

வினா எண் 21079—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி நகரம் குமரன் ஆதிதிராவிடர் காலனிக்கு கழிவு நீர் வடிகால் வசதி செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

171—

சீர்காழி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 9347— திரு. து. மூர்த்தி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் வாடகை கட்டிடத்தில் இயங்கும் ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு அரசின் சார்பில் சொந்தமாக கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் சீர்காழி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் நிலம்

கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்திய பின் வரும் ஆண்டுகளில் நிதிநிலைமையின் அடிப்படையில் இப்பணியை மேற்கொள்வது பற்றிக் கருதப்படும்.

172—

ஆதிதிராவிட குழந்தைகளுக்கு கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே இலவச பாடநூல்கள் வழங்குதல்.

வினா எண் 9635—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட குழந்தைகளுக்கு, அரசு கொடுக்கும் இலவச பாடநூல்கள், சீருடைகள், காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் மாணவ, மாணவிகள் கல்வித் தரம் குறைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிட குழந்தைகளுக்கு அரசு கொடுக்கும் இலவச பாடநூல்கள், சீருடைகள், காலம் தாழ்த்தி வழங்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கு இடமில்லை.

173—

மணமை ஆதிதிராவிட நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 10586—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மணமை கிராம ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு எவ்வளவு மதிப்பீட்டில் நிறைவேறும் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், மணமை கிராம ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

174—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தடை உத்தரவு மூலம் நிறுத்தி வைக்காமல் இருக்க அரசு சட்டத் திருத்தம்.

வினா எண் 10865—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தடை உத்தரவு மூலம் நிறுத்திவைக்காமல் இருக்க அரசு சட்டத் திருத்தம் கொண்டு வர உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

175—

பரமக்குடி தொகுதி ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக வழக்குகளை பரிசீலிக்க தனியாக நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 10933—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை ?

(ஆ) அந்த வழக்குகளை பரிசீலிக்க தனியாக நீதிமன்றம் அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) நான்கு.

(ஆ) இல்லை.

176—

ரெஸல்லர் என்ற இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 11015—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி, கோவை, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் வாழும் ரெஸல்லர் என்ற இனத்தவர் அனைவரையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி, கோவை, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் ரெஸல்லர் இனத்தவர் வசிக்கவில்லை.

177—

ஆதிதிராவிடர் துறையில் இயங்குகின்ற விளம்பர ஊர்தியை மேலும் வாங்குதல்.

வினா எண் 11377—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) ஆதிதிராவிடர் துறையில் இயங்குகின்ற விளம்பர ஊர்தியால் பயன் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஊர்திகளை மேலும் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

178—

முத்துப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் பெண்களுக்கு விடுதி அமைத்தல்.

வினா எண் 13784—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பெண்களுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பெண்களுக்கு ஆதிதிராவிடர் நல விடுதி துவங்குவதற்கு போதுமான வாய்ப்பு உள்ளதா என்ற கருத்துரு ஆய்வில் உள்ளது.

179—

பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் அமைத்தல்.

வினா எண் 16035—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவர்களுக்கு தனியாக ஆதி திராவிடர் நலத்துறை மூலம் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

180—

அரவக்குறிச்சியில் ஆதிதிராவிடர்களுக்குத் திருமணக் கூடம் அமைத்தல்.

வினா எண் 19979—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் ஆதி திராவிடர்களுக்குத் திருமணக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

திருமணக் கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

181—

பழனி கோவில் சார்பாக மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 9263.—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பாக மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

182—

பழனி கோவில் சார்பாக பணிபுரியும் மகளிர் விடுதி ஏற்படுத்துதல்.

வினா எண் 9264—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பாக "பணிபுரியும் மகளிர் விடுதி" (Working Women's Hostel) ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

183—

மதுரை மீனாட்சி ஆலயத்தின் வெளிப்புறத்தில் கடைகள் கட்டுதல்.

வினா எண் 9314—திரு. ஓ. எஸ். அம்ர்நாத் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் வெளிப்புற நான்கு பக்கத்திலும் அறநிலையத் துறை சார்பாகக் கடை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

இல்லை,

184—

பழனி கோயில் சார்பாக உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 9432—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக பழனி நகர் தெப்பக்குளம் அருகே அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் திருக்கோயில் மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

185—

அர்ச்சகர்களை அரசு ஊழியர்களாக மாற்றுதல்.

வினா எண் 9937—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் திருக்கோயில்களில் தெய்வப் பணி புரியும் அர்ச்சகர் அரசு ஊழியராக்கப்படுவார்களா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

186—

பழனி கோவில் சார்பாக பல் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 10178—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக பல் மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

187—

பரமக்குடியில் மகளிர் கல்லூரி ஏற்படுத்தல்.

வினா எண் 14737—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயில் மூலம் பரமக்குடியில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

188—

பேரூர் பட்டீஸ்வரர் கோவிலில் உள்ள சிற்பங்களை புதுப்பித்தல்.

வினா எண் 14884—திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் உள்ள சிற்பங்களைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் சிற்பங்கள் நல்ல நிலையில் உள்ளதால் இச்சிற்பங்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

189—

காரமடை ரங்கநாதர் கோவிலில் இராஜகோபுரம் கட்டுதல்.

வினா எண் 16327—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை அருள்மிகு ரங்கநாதர் கோயிலில் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஸ்ரீரங்கம் கோயில்போல் இராஜகோபுரம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

190—

சென்னை பார்த்தசாரதி கோயிலுக்கு பாதுகாப்புப்படை அமைத்தல்.

வினா எண் 16631— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிப் பெருமாள் திருக்கோயிலுக்குப் பாதுகாப்புப்படை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

பாதுகாப்புப்படை அமைக்கப்பட்டுள்ளது.

191—

அரசு வழங்கும் இலவச சீருடைகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுதல்

வினா எண் 9635-ஏ— டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு அரசு கொடுக்கும் இலவச பாட நூல்கள், சீருடைகள் காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் மாணவ, மாணவிகள் கல்வித்தரம் குறைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இலவச பாட நூல்கள் மற்றும் சீருடைகள் காலம் தாழ்த்தி வழங்கப்படுவதில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

192—

பூம்புகாரில் மீனவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

வினா எண் 15204—எம். பூராசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் மீனவர்களின் மீன்பிடி படகுகளில் ஆயில் என்சின்கள் அமைக்க மானிய விலையில் கடன் வழங்கும் செயற்குறிட்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பாரம்பரிய கட்டுமரங்களுக்கு வெளிப் பொருத்தும் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் (மைய-மாநில அரசு உதவியுடன், நடைமுறைப்படுத்தும் திட்டம்) சீர்காழி வட்டத்தில் இதுவரை (1991—92 மற்றும் 1992—93) பெறப்பட்ட 89 விண்ணப்பங்களில் 88 பேருக்கு அரசு மானியம் வழங்கப்பட்டு விட்டன. மீதியுள்ள ஒருவருக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

193—

கெலவரப்பள்ளி அணையில் மீன் குஞ்சு வளர்க்கும் திட்டம்.

வினா எண் 16387— திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) கெலவரப்பள்ளி அணையில் மீன்குஞ்சு வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப் படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

194—

மீன் வள வங்கி தொடங்கும் திட்டம்.

வினா எண் 19641-ஏ—திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு தனியாக 'மீன்வள வங்கி' தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) ஆயினும், மீனவர்களுக்கு தனியாக 'மீன்வள வங்கி' தொடங்கும் திட்டம் ஒரு நல்ல திட்டம் என்ற வகையில் இவ்வரசு அத்திட்டத்தை முழுமையாக ஆதரித்து மைய அரசின் உரிய நடவடிக்கைக் கோரி வலியுறுத்தியுள்ளது.

195—

தோகூர் ஊராட்சி மீனவர்களுக்கு நிலப்பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 20289—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் மாவட்டம், தோகூர் ஊராட்சி மீனவர்களுக்கு நிலப்பட்டா வழங்கி, வீடுகட்ட கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

நிலப்பட்டா வழங்கும் பணி, வருவாய்த் துறையைச் சார்ந்ததாகும். மீனவர்கள் தங்கள் சொந்த நிலம் 3 செண்ட் அரசிடம் ஒப்படைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தீர்மானத்துடன் அரசை அணுகினால், அவர்களுக்கு மீனவர் இலவச வீடுகட்டும் திட்டத்தின் கீழ் இலவசமாக வீடு கட்டித் தருவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

196—

வேதாரண்யம் பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலை தொடங்குதல்.

வினா எண் **21206**—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பகுதியில் இறால் பதனிடும் மற்றும் டின்களில் அடைக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் பகுதியில் இறால்களை பதனிட்டு டின்களில் அடைக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1993 அக்டோபர் 29]

197—

மீனவ கிராமங்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்கும் திட்டம்.

வினா எண் 21681—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவ மக்கள் வசிக்கும் மீனவ கிராமங்களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மீனவர் கிராமங்களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் மீனளதுறையின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

(ஆ) முந்தைய காலத்தில் மீனள துறையின் மூலம் சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய மீனவர் நலத் திட்டத்தின் மூலம் 7 கிராமங்களில் 24 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

198—

EXTENTION OF TECHNICAL TRAINING PROGRAMME TO ANGLO INDIANS

Question N . 22148 Dr. BEATRIX D'SOUZA : Will the Hon Minister for Backward classes Welfare and Fisheries be pleased to state—

(a) Whether there is a proposal with the Government to extend to the anglo Indian community Teehnical Trainning Programme available to backward classes Christians and

(b) if so the details there of?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

199—

அழகர் கோவிலில் இளைஞர் சுற்றுலா விடுதி கட்டுதல்.

வினா எண் 9057—திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா மையமாகிய மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் இளைஞர் சுற்றுலா விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

200—

வாத்தலையில் தமிழ்நாடு உணவு விடுதி தொடங்கும் திட்டம்.

வினா எண் 9706—திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறந்த சுற்றுலா மையமாகவுள்ள வாத்தலையில் சுற்றுலாத் துறையின் மூலம் தமிழ்நாடு உணவு விடுதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

201—

பூம்புகாரில் பனை ஓலை குடிசைத் தொழில் நிறுவுதல்.

வினா எண் 15342—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கிடைக்கும் பனை ஓலையைக் கொண்டு குடிசைத் தொழில் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை —

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

202—

பூம்புகாரில் வெல்லம் தயாரிக்கும் தொழில்களை தொடங்கும் திட்டம்.

வினா எண் 15343—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடற்கரையோர ஊராட்சிகளில் அதிக அளவில் கிடைக்கும் பதனீரைக் கொண்டு வெல்லம் தயாரிக்கும் தொழில்கள் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

203—

கதர் வாரியத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு நடைமுறைப் படுத்தல்.

வினா எண் 19097—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்திலும், விற்பனை நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கதர் கிராமத் தொழில் வாரியத்திலும், விற்பனை நிலையங்களிலும் ஏற்படும் காலியிடங்கள் அனைத்தும் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணிவிதி 6 (2)ன்படி சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகங்களிலிருந்து பட்டியல் பெறப் பட்டு தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 18 சதவீதம் என்ற அரசு ஆணை பின்பற்றப்பட்டு வாரிய தேர்வாணைய குழுவின ரால் தேர்வு செய்து பணி நியமனம் செய்யப்பட்டு நிரப்பப்படு கிறது.

1— இருபத்தொன்றாம் பட்டியல்.

ஒட்டன்காட்டில் கிராம மருத்துவமனையை துணைப் பிரதமர் சுகாதார நிலையமாக்குதல்

வினா எண் 7369—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காட்டில் இயங்கும் கிராம மருத்துவமனையை துணை பிரதம சுகாதார நிலையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தை சேர்ந்த ஒட்டங்காடு ஊராட்சி ஒன்றிய மருந்தகம் அலோபதி மருந்தகமாகும். இம்மருந்தகம் கடந்த பல ஆண்டுகளாக செயல்படாமலிருக்கிறது. இங்கு பணியாளர்கள் யாருமில்லை. இம்மருந்தகத்திற்கு அருகில் குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையமும் 8 கி.மீ. தொலைவில் பேராவூரணியில் அரசு மருத்துவமனையும் இயங்கி வருகின்றது.

மேலும், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 97,778. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) சிருவாவிடுதி, (2) குறிச்சி, (3) காலகம் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 30,000 மக்கள் தொகைக்கு, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இயலாது.

2—

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தனியார் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண் 7988—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் தனியார் துறையின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் தனியார் துறையின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இயங்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

3—

சின்கோனா மருத்துவமனையை செவிலியர் பயிற்சி மையமாக உயர்த்துதல்.

வினா எண் 8545—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்கோனா மருத்துவமனையை செவிலியர் பயிற்சி மையமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

4—

தருமபுரி மாவட்ட மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் ஒதுக்குதல்.

வினா எண் 8619—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் தாலுக்கா-ஒன்றிய தலை நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் ஒதுக்கீடு இன்மையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கீடு அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

(இ) எந்த அடிப்படையில் ஒதுக்கீடு அதிகரிக்கப்படுகின்றது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த எல்லா மருத்துவ மனைகளுக்கும் தேவையான மருந்துப் பொருட்களையும் விநியோகிப்பதற்கேதுவாய் தேவைப் பட்டியல்கள் அந்தந்த மருத்துவ மனைகளிடமிருந்து பெறப்பட்டு மருந்தாக்கங்களுக்கு கொள்

1993 அக்டோபர் 29]

முதல் செய்வதற்காக ஆணைகள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் கொடுக்கப்பட்டு மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

(ஆ) மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவுக்கு மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாய் வரவு-செலவில் நிதி ஒதுக்கப்படுகிறது.

(இ) ஆண்டுதோறும் புற மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பின் அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்படுகிறது.

5—

மேலாய்க்குடி மற்றும் மூவலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பித்தல்.

வினா எண் 9112—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், மேலாய்க்குடியிலும் மற்றும் நயினார்கோவில் ஒன்றியம் மூவலூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை ஏறத்தாழ 61,500. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) பார்த்திபனூர், (2) பாம்பூர், (3) வெங்கிடகுறிச்சி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. நயினார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை ஏறத்தாழ 51,200. இவ்வூராட்சி ஒன்றியத்தில் (1) நயினார்கோயில் (2) பி.கொடிக்குளம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேற்குறிப்பிட்ட இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தற்போது சாத்தியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6—

தொண்டமான் ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்.

வினா எண் 10552—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் ஊராட்சிக்,கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இயங்கவில்லை. எனவே, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்ட வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை.

7—

சீதாம்பாள்புரம் பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்குதல்.

வினா எண் 13468—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சீதாம்பாள்புரம் பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அரசு ஆணை (நிலை) எண் 1080, சுகாதாரம், நாள் 4—8—1993-ன் படி ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 1993-94 ஆம் ஆண்டு முதல் ரூ. 75,000 மதிப்பிற்கான

1993 அக்டோபர் 29]

மருந்துகள் வழங்க உத்தரவு இடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி பேராவூரணி தொகுதி, சீதாம்பாள்புரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 75,000 மருந்துகள் வழங்கப்படும்.

8—

சென்னையிலிருந்து பொள்ளாச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து விடுதல்.

வினா எண். 9449—திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து பெரம்பலூர் வழியாக பொள்ளாச்சிக்கு சென்று வந்த தடம் எண் 592 என்ற திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்பொழுது சென்னையிலிருந்து பெரம்பலூர் வழியாக பொள்ளாச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் விடும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

9—

தலைவாசலிலிருந்து பாலக்காட்டிற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 10268—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலிலிருந்து வீரகனூர் பூலாம்பாடி வழியாக வேப்படி–பாலக்காட்டிற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பாலக்காட்டிலிருந்து வேப்படி செல்லும் சாலையில் கி.மீ. 0/8-ல் நீர் குறுக்கீடு உள்ளதால், கி.மீ. 0/ — 2/8 வரை பேருந்து செல்லத்தக்க சாலையில்லை என சேலம் கோட்டப் பொறியாளர் அவர்கள் சான்றளித்துள்ளதால், வேப்படி - பாலக்காட்டிலிருந்து வேப்படி வரை உள்ள சாலைகள் பேருந்து இயக்கத்தக்க வகையில் அமைந்த பின்னர் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

பேராவூரணியிலிருந்து பழனிக்கு பேருந்து விடுதல்.

வினா எண் 12428—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக பழனிக்கு பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

11—

பேராவூரணியில் சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய நகர வழித்தடம் அமைத்தல்.

வினா எண் 12432—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் அடங்கிய முறுமாக்காடு, குண்டா மறைக்காடு, சி. கள்ளங்காடு, பெ. கள்ளங்காடு கிராம மக்கள் ''பயன்பெறும் வகையில் பேராவூரணியை இணைக்க சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் 1992-93-ல் புதிய நகர வழித்தடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி தடம் எண் 3 நகரப் பேருந்து பேராவூரணி-சேதுபாவாசத்திரம் (வழி) குண்டாமரைக்காடு, கள்ளங்காடு, குருவிக்கரம்பை, மருங்காபள்ளம் தடத்தில் நான்கு நடைகள் இயங்கி வருகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதால் புதியதாக ஒரு நகரப் பேருந்து இத்தடத்தில் இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

12—

கூவத்தூரிலிருந்து காட்டாத்தூர் வழியாக புதிய நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 12711—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கூவத்தூரிலிருந்து காட்டாத்தூர் வழியாக புதிய நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

13—

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய பேருந்து வசதி செய்தல்.

வினா எண் 13031—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகர் பகுதி முழுமையும் சென்றுவர புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டையிலிருந்து பல ஊர்களுக்குச் செல்லும் நகரப் பேருந்துகள் புதுக்கோட்டை நகராட்சியின் எல்லைக்குள் எல்லா திசைகளின் வழியாக இயங்கி வருகின்றன. எனவே, புதுக்கோட்டை நகராட்சி பகுதிக்கென தனி நகரப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

14—

புதுக்கோட்டை ரயில்வே நிலையத்திற்கும் பேருந்து நிலையத்திற்கும் புதியதாக பேருந்து விடுதல்.

வினா எண் 13032—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ரயில்வே நிலையத்திற்கு ரயில் வரும் நேரங்களில் பேருந்து நிலையத்திற்கும் ரயில் நிலையத்திற்கும் புதியதாக பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்போது ஒரு நகரப் பேருந்து பல்முனைத் திட்டத்தில் புதுக்கோட்டை புகைவண்டி நிலையத்திற்கு 14 நடைகள் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து புகைவண்டி நிலையத்திற்கு பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

15—

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணி வரை நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 13763—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம், ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம், ராஜாமடம். சின்ன ஆவுடையார்கோவில், ஆண்டிவயல், ஆண்டிகாடு, பள்ளத்தூர், தில்லாங்காடு, செரு பாலக்காடு வழியாக பேராவூரணி வரை 1992-93-ல் நகரப் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை—பேராவூரணி (வழி) அதிராம்பட்டினம் ராஜாமடம், சின்ன ஆவுடையார்கோயில, ஆண்டிவயல், ஆண்டிக் காடு, பள்ளத்தூர், தில்லங்காடு, செருபாலக்காடு தடத்தின் நீளம் 50 கி.மீ, அரசு ஆணைப்படி பேருந்து வசதிபெற்ற தடங்களில் 30 கி.மீ. தூரம் வரையிலும் பேருந்து வசதி பெறாத தடங்களில் 35 கி.மீ. தூரம் வரையிலும் நகரப் பேருந்துகள் இயக்க இயலும். இத்தடத்தின் நீளம் 35 கி.மீ.-க்கு மேல் உள்ளதால் நகரப் இயக்க இயலாது.

16—

தென்னாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைப்பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமித்தல்.

வினா எண் 19731—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

17—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமித்தல்.

வினா எண் 19735— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களை வயல் விளக்க அலுவலர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

18—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசின் முதலீட்டு மானியம் பெற்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள்.

வினா எண் 1666— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1989-90, 1990-91 ஆம் ஆண்டுகளில் மத்திய, மாநில அரசின் முதலீட்டு மானியம் மற்றும் சலுகைகள் பெற்று ஆரம்பிக்கப்பட்ட தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசின் முதலீட்டு மானியம் மற்றும் சலுகைகள் பெற்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள் வருமாறு :—

வருடம்		எண்ணிக்கை
1989-90	..	9
1990-91	..	42

1993 அக்டோபர் 29]

இதைத் தவிர தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், பொதுத் துறையில் தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்னும் நிறுவனத்தை பொதுத் துறையில் தொடங்கி உள்ளது.

19—

இராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் துறையில் பிற்படுத்தப் பட்ட பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 2019—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலில் முன்னேற்றம் அடையாத இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆறு வட்டங்களும் ஏற்கனவே தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

20—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்குதல்.

வினா எண் 2100—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்பு பயிரிடுவதற்குப் போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தால், அறந்தாங்கி தாலுக்காவில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்க மத்திய அரசு இசைவுக் கடிதம் வழங்கியுள்ள போதிலும், அங்கு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதும் அரசிடம் இல்லை.

21—

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் தொழில் திறமையை நம் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல்.

வினா எண் 2384— திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் தொழில் திறமையை நம் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ள மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

மாநில அரசு தமிழகத்தில் அயல்நாட்டு இந்தியர்களின் முதலீட்டை பெரிதும் வரவேற்கிறது. அயல்நாட்டு இந்தியர் களுக்கு தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதில் ஏதாவது இடையூறு ஏற்படுமானால் மைய அரசை அணுகி சிக்கல்களை நீக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும்.

22—

Sugar quota issued to M/s Parry and Company.

Question No. 2824—Tmt. V. G. Manimegalai:

Will the Hon'ble Industries Minister be pleased to state—

(a) Whether sugar quota is issued to M/s Parry and Company Madras for their confectionary production?

(b) the details thereof; and

(c) the rates at which sugar is supplied to this firm?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : நெல்லிக்குப்பத்தில் அமைந்துள்ள இ.ஐ.டி. பாரி கன்பெக்ஷனரி நிறுவனத்திற்கு தனியாக சர்க்கரை கோட்டா எதுவும் வழங்கப்படவில்லை. மத்திய அரசால் மாதா

மாதம் ஒதுக்கப்படும் வெளிச்சந்தை சர்க்கரை விடுவிப்பிலிருந்து திருவாளர்கள் இ.ஐ.டி. பாரி நிறுவனம், மாதம் ஒன்றுக்கு சுமார் 350 டன்கள் சர்க்கரையை மற்றவர்களுக்கு (பெரிய அளவு உபயோகிப்பாளர்கள்) அவ்வப்போது நிர்ணயிக்கப் பட்டுவரும் சந்தை விலையிலேயே பெற்றுக்கொள்கிறது.

23—

Federation of Danish Industries

Question No. 3214—Tmt. V. G. Manimegalai:

Will the Hon'ble Minister for Industries be pleased to state—

(a) Whether Federation of Danish Industries is to sponsor industrial undertakings in this State shortly; and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இல்லை.

24—

கொடுமுடி ஒன்றியத்தில் உடல் ஊனமுற்றோருக்கு தையல் இயந்திரம் வழங்குதல்.

வினா எண் 19202—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் கிராமத்தில் வாய்க்கால் மேடு, வாழைத் தோட்டம் ஆகிய கிராமத்திலுள்ள உடல் ஊனமுற்ற தையல் தொழில் தெரிந்த 50 பேருக்கு தையல் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

சமூக நல இயக்ககத்தின் மூலம் விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள், ஏழைப் பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இலவச தையல் இயந்திரங்கள் பெற விரும்புபவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலருக்கு உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பம் செய்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்கிறவர்களுக்குமுதுநிலை வரிசையின்படி தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, தனியாக ஒரு தொகுதிக்கென்று தையல் இயந்திரம் வழங்கும் நிலை எழாது.

25—

வெள்ளோட்டம் கிராம ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

வினா எண் 19249—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் 13 ஊனமுற்றோர்களுக்கு மாதா மாதம் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் உதவித்தொகை கோரி உடல் ஊனமுற்றவர்களிடமிருந்து மனு எதுவும் பெறப்படவில்லை. எனினும் வெள்ளோட்டம் பரப்பு கிராமத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்கள் மனு செய்தால் அம்மனுக்களை விசாரித்து அவர்களுக்குத் தகுதி இருப்பின் அரசு உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

அண்ணா அருங்காட்சியகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர்.-ம் அண்ணாவும் சேர்ந்த படம் வைத்தல்.

வினா எண் 7483—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) சென்னை கடற்கரையிலுள்ள அண்ணா அருங்காட்சியகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர்.-ம் அண்ணாவும் சேர்ந்த படம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை படங்களில் டாக்டர் எம்.ஜி.ஆர். உள்ளார் ?

(இ) மற்ற படங்கள் வைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஒன்று.

(இ) பரிசீலனையில் இல்லை.

27—

திரைப்படத் தொழில் நுட்பவியல் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

வினா எண். 13664—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரைப்படத் தொழில் நுட்பவியல் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

இல்லை.

28—

விளையாட்டுத் துறையையும் விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைக்கும் திட்டம்

வினா எண் 7840—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1993 அக்டோபர் 29

விளையாட்டுத் துறையையும் விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையினையும், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி வாரியத்தினையும் இணைத்து "தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம்" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அரசாணை நிலை எண் 641, கல்வி, நாள் 18-7-1992-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது (இது பற்றிய குறிப் பொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

குறிப்பு

மாநில அரசு விளையாட்டு முன்னேற்றத்திற்கென பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு அரசாக விளங்கி வருகின்றது. மாநில அரசு 1979-ம் ஆண்டு விளையாட்டிற்கென "இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை" என்ற தனித் துறையை உருவாக்கியது. "தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்" என்ற ஒரு அமைப்பினை அரசாணை எண் 289, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 16—3—1984—ல் நிறுவியது.

2. தமிழ்நாட்டு இளைஞர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று அரசுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மாநில அரசும் சிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை கௌரவிக்கிறது. ஆண்டுதோறும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. அரசு விளையாட்டுக்கள் முன்னேற்றமான வெற்றியை ஈட்டித் தருகிறது. நாட்டின், முழுமையான விளையாட்டு வளர்ச்சிக்காக மத்திய அரசு "இந்திய விளையாட்டுக் குழுமம்" என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளது.

3. இந்திய விளையாட்டுக் குழுமம் என்ற அமைப்பினை போன்றே பல்வேறுவிளையாட்டு முன்னேற்ற அம்சங்களை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் என்ற அமைப்பினை உருவாக்கிட அரசு முடிவு செய்தது. இதன்படி தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தையும் மற்றும் இளைஞர் விளையாட்டு பயிற்சித் துறையையும் இணைத்து, 'தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம்" என்ற அமைப்

1993 அக்டோபர் 29]

பினை அரசு உருவாக்கியது. இக்குழுமம் 1975-ம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

29—

காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 8117—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் (கணிதம்) விளையாட்டு ஆசிரியர், எழுத்தர், கடைநிலை ஊழியர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தலைமையாசிரியர் பணியிடம் 3–9–1992 அன்று நிரப்பப்பட்டுவிட்டது. உடற் கல்வி ஆசிரியர் மற்றும் எழுத்தர், கடைநிலை ஊழியர் பணியிடங்கள் நிதி நிலைமைக்கேற்ப அரசால் அனுமதிக்கப்படும்போது பரிசீலிக்கப்படும்.

30—

ஆசிரியர்களுக்கு இசைப் பயிற்சி அளித்தல்

வினா எண் 8158—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசால் தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட இசைக் கருவிகள், ஆய்வகப் பொருள்கள் யாவும், மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் இதுவர 86,000 ஆசிரியர்களுக்கு 10 நாள் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது இப்பயிற்சியில், புதிய பாடத் திட்டம், சார்ந்ததும், கரும்பலகைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் வழங்கப்பட்ட கல்வி உபகரணங் களை கையாள்வது சார்ந்தும், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

31—

சுதந்திர போராட்ட வீரரை பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினராக நியமித்தல்

வினா எண் 8663—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் செனேட் மற்றும் கவுன்சில்களில் அரசு நியமிக்கும் உறுப்பினர்களில் சுதந்திரப் போராட்ட வீரர்களில் இருந்தும் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற் குறிப்பு ஏதும் இல்லை.

32—

'சங்ககால நாட்டுத் தொண்டு' என்ற நூலை பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு பாட நூலாக்க செய்தல்

வினா எண் 8679—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தியாகி திரு. நா. இராமையா பிள்ளை என்பவர் தமிழ்நாடு சங்க காலத்தை ஆராய்ந்து ''சங்ககால நாட்டுத் தொண்டு'' என்று உருவாக்கிய நூலை பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்க்கான பாட நூலாக்க செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) அந்த நூலின் தேர்ந்தெடுத்த சில பகுதிகளை உயர் நிலை மற்றும் மேல்நிலை கல்விக்கான பாடத் திட்டங்களில் சேர்க்க அரசு முன்வருமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இது போன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

சமய ஆராய்ச்சி தொடர்பான பணிகளுக்காக பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்தல்.

வினா எண் 8744—திரு. அ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய தத்துவ நூல்கள் வெளியீடு மற்றும் சமய ஆராய்ச்சி தொடர்பான பணிகளுக்காக பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 5,25,000 கோயில்களின் உபரி நிதியிலிருந்து நன்கொடையாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

34—

பகுதி நேர தொழில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கல்

வினா எண் 8891—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படாத 500 பகுதிநேர தொழில் ஆசிரியர்களுக்கு உடன் ஊதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து பகுதி நேர ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. கல்வித் துறையின் முன் அனுமதியின்றி சில பள்ளிகளில் நிர்வாகமே பகுதிநேர ஆசிரியர்களை நியமித்துள்ளது. வினாவில் சொல்லப்பட்டுள்ள ஆசிரியர்கள் மேற்படி அங்கீகரிக்கப்படாத பணியிடங்களில் பணிபுரிபவர்களாகும்.

35—

புரசைவாக்கம் தொகுதியில் அரசு அங்கீகாரம் அளித்துள்ள பள்ளிகள்

வினா எண் 10394— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரசைவாக்கம் தொகுதியில் அரசு அங்கீகாரம் அளித்துள்ள தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

புரசைவாக்கம் தொகுதியில் அரசு அங்கிகாரம் அளித்துள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 4 ஆகும். மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 38 ஆகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

36—

குழுமூரில் உள்ள பிலோமினா நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 10605— திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில், குழுமூரில் இருக்கும் பிலோமினா நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளி எப்போது உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படும் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) ஆண்டிமடம் தொகுதியில் குழுமூரில் இருக்கும் பிலோமினா நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கோரும் கருத்துரு ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

(ஆ) இப்பிரச்சினை எழுவில்லை.

37—

கோவையில் பொறியியற் பல்கலைக் கழகம் அமைத்தல்.

வினா எண். 11143— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் பொறியியற் பல்கலைக் கழகம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கோவையில் பொறியியற் பல்கலைக் கழகம் அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

38—

கூட்டுறவு நிலவள வங்கிக்கு விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்த்து தேர்தலை நடத்துதல்.

வினா எண் 16160— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிக்கு விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்த்து விரைவில் தேர்தல் நடத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

1983ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் மற்றும் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதிகளுக்குட்பட்டு எந்த ஒரு தகுதியான நபரும் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக எப்போதும் சேரலாம்.

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் திங்கள் களில் தேர்தல் நடத்த அரசு ஆணையிட்டது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பல நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது தவிர உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனு எண் 758/91-ன் மீதான வழக்கிடை விண்ணப்ப எண். 4/92 தாக்கல் செய்துள்ளதற்கு அரசு எதிர் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

இச்சூழ்நிலையில் உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் முடிவுற்ற பின்னரே கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த இயலும்.

39—

பரமக்குடி மார்க்கட்டிங் சொசைட்டி மூலம் வாங்கப்பட்ட மிளகாய்.

வினா எண் 16554— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் 91-92-இல் வாங்கப்பட்ட மிளகாய் எவ்வளவு ?

(ஆ) இதில் இந்த சொசைட்டிக்கு கிடைத்த லாபம் எவ் வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1991—92—ல் மொத்தம் 193.948 டன் அளவு மிளகாய் கொள்முதல் செய் துள்ளது. அதன் மதிப்பு ரூ. 31.16 லட்சமாகும்.

1993 அக்டோபர் 29]

(ஆ) இதன் மூலம் இச்சங்க திற்கு மொத்த லாபம் ரூ. 1,71,926 கிடைத்துள்ளது. இதில் வட்டி இதர செலவினங்கள் நீங்கலாக நிகர லாபம் ரூ. 89,906 கிடைத்துள்ளது.

40—

பரமக்குடி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் மிளகாய் வாங்கப்பட்டு அதை கூட்டுறவு அங்காடிக்கு அனுப்ப அதிகாரம் வழங்கல்

வினா எண் 16555—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் மிளகாய் வாங்கப்பட்டு அதை கூட்டுறவு அங்காடிக்கு அனுப்ப அதிக நிதியும், அதிகாரமும் வழங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பரமக்குடி கூட்டுறவு விற்பனைச் சங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. கடந்த வருடம் ரூ. 32.11 லட்சம் மதிப்புள்ள மிளகாயை நேரடியாகக் கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்துள்ளது. அதைத் தவிர கூட்டுக் கொள்முதல் (Joint Venture Basis) மூலமாக ரூ. 5.03 லட்சமும் முகவர் கொள்முதல் (Agency Basis) மூலமாக ரூ. 16.55 லட்சம் மதிப்புள்ள மிளகாயினை கொள்முதல் செய்து டான்பெட் மற்றும் நேஃபெட் ஆகியவற்றுக்கு விற்பனை செய்துள்ளது. கூட்டுறவு விற்பனை சங்கம் தற்பொழுதும் திறம்பட மிளகாய் வியாபாரம் செய்து வருகிறது மேலும் வியாபாரத்தினை பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிதி உதவி வழங்குவது மூலமாகவும், இதர மொத்த கூட்டுறவு பண்டக சாலை மூலமாக விற்பனை செய்வதன் மூலமாகவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது சங்கத்தின் துணை விதிகளின் படி, பரமக்குடி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அலுவலர் மிளகாய் வியாபாரத்தை திறம்படச் செய்யத் தேவையான நிதி நிலை மற்றும் அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கொண்டு மிளகாய் வியாபாரத்தைப் பொறுத்தமட்டில் அதிக அதிகாரம் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

41—

கீழச்சாவடி ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 11161—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள கீழச்சாவடி ஆதிதிராவிடர்களுக்கு 30 தொகுப்பு வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

42—

மேலக்கொள்ளுக்காட்டில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 11466—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம் பாதரங்கோட்டை வடக்கு மேலக்கொள்ளுக்காட்டில் 1992–93–ல் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். ஆனால் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியல்ல. இக்கிராமத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் 6/93–ற்குள் முடிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

43—

ஏரிப்புறக்கரை புதிய ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 11474— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை புதிய ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஆழ்குழாய்க்கிணறு அமைக்க 1992–93–ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. ஏரிப்புறக்கரை புதிய ஆதிதிராவிடர் காலனி பகுதியில் ஏரிப்புறக்கரை மீனவர் தெரு திட்டத்தின் கீழ் குழாய்கள் நீட்டிப்பு செய்து ஒரு பொதுக்குழாய் மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதி கடலோரப் பகுதியில் அமைந்துள்ள நிலத்தடி நீர் உப்பு நீராக உள்ள பகுதியாகையால் அடி பம்பு அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

44—

செங்கபடுதல்காடு ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 11475— திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், தாமரன்கோட்டை செங்கபடுதல் காடு ஆதிதிராவிடர் காலனிக்கு 1992–93-ல் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. 1991-92 ஆம் ஆண்டு ஒரு கையினறப்பான் திட்டம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் விதிமுறை மற்றும் தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப ஒரு மின்னிறைப்பான் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1993 அக்டோபர் 29

45—

புதுக்கோட்டை சளூர் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 11490— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை சளூர் ஆதிதிராவிடர்கள் எஞ்சியவர்களுக்கு தொகுப்பு வீடுகள் 1992–93–ல் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்நதெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

46—

அழகியநாயகி முள்ளிப்பள்ளம் குளத்திற்கு படித்துறை கட்டுதல்

வினா எண் 11609— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அழகிய நாயகி முள்ளிப்பள்ளம் குளத்திற்கு 1992–93–ல் படித்துறை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991–92–ம் ஆண்டு ஜஹவர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5/494 செலவில் பேராவூரணி தொகுதி, அழகிய நாயகி முள்ளிப்பள்ளம் குளத்திற்கு படித்துறை 31—7—1992 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 29]

47—

குண்டாமறைக்காட்டில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 11613— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செங்காதரபுரம் ஊராட்சி, குண்டாமறைக் காட்டில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறு 1992–93ல் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இங்கு 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

48—

வாத்தலைக்காடு ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கல்.

வினா எண் 11621— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வாத்தலைக்காடு ஊராட்சி, பூக்கொல்லை அருகில் கோட்டக் குளம் உள் கரையில் உள்ள சமுதாய கிணறை சுத்தப்படுத்தவும், குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்து பூக்கொல்லை, ரெகுநாதபுரம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கவும் 1992–93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இச்சமுதாயக் கிணறு, இந்த நிதியாண்டில் சேதுப்பாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தால் சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. ரெகுநாதபுரம் கிராமத்தில் ஒரு கையிறைப்பான் போடப்பட்டுள்ளது.

[1993 அக்டோபர் 29

49—

மகுடேஸ்வரர் ஆலயம் முன்புறம் சாலை ஓரங்களில் கடைகள் கட்டுதல்.

வினா எண் 11765— திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி பேரூராட்சிக்கு நிதி ஆதாரங்களை மேம்படுத்த மகுடேஸ்வரர் ஆலயம் முன்புறம் சாலை ஓரங்களில் கடைகள் கட்டித் தரப்பட்டு, நிதி வசதியை சரி செய்து கொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் ஆலயம் முன்பாக உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான சாலைப் புறம்போக்கு மற்றும் அரசுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலங்களில் கட்டிடம் கட்டுவதற்கு தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி புத்தகத்தில் உள்ள பதிவை ரத்து செய்யும் வரை அந்த இடத்தில் கட்டிடம் கட்ட யாருக்கும் அனுமதி இல்லை. எனவே தற்பொழுது அங்கு கடைகள் கட்ட உத்தேசமில்லை.

50—

காமராஜ் நகரில் சமுதாயக் கூடம் கட்டுதல்.

வினா எண் 11480— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, காமராஜ் நகரில் 1992–93-ல் சமுதாயக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 29]

51—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

வினா எண் 11767—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமிழ்நாட்டில் என்னென்ன திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றன ?

(ஆ) மாவட்ட வாரியான விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது :—

(i) கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டம்;

(ii) சேலம் மற்றும் ஒன்பது நகராட்சிகளுக்கு குடிநீர் மேம்பாடு திட்டம்;

(iii) 72 பேரூராட்சிகள் மற்றும் இரண்டு ஊரக பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கு திட்டம்;

(iv) 29 நகராட்சிகளில் குறைந்த செலவு துப்புரவு திட்டம்;

(v) 955 வழியோர கிராமங்களுக்கு மொத்த விநியோகம் முறையில் குடிநீர் வழங்குதல் மற்றும்

(vi) பயிற்சி கலந்தறிதல், ஆலோசனை மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

(vii) கோவை மாநகராட்சிக்கு வீட்டுக் குழாய் இணைப்பில் நீர் அளவுமானி பொருத்த ரூ. 1 கோடி சுழல் நிதி வழங்குதல்.

(ஆ) குடிநீர் வழங்குதல் திட்டம் மற்றும் குறைந்த செலவு துப்புரவுத் திட்டம் பற்றிய மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பில் காண்க.

இணைப்பு.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வரும் திட்டங்களின் மாவட்ட வாரியான விவரம்.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	திட்டத்தின் பெயர்.	பயனடையும் நகரம்/நகராட்சி/பேரூராட்சி,
(1)	(2)	(3)	(4)
		அ. குடிநீர்த் திட்டங்கள்.	
1	கோயம்புத்தூர் ..	கோவை மாநகராட்சி, 20 நகரங்கள் மற்றும் 521 வழியோர கிராமங்களுக்கான குடிநீர் அபிவிருத்தி துணைத் திட்டம்.	கோயம்புத்தூர். மாநகராட்சி
2	,,	,,	மதுக்கரை.
3	,,	,,	செட்டிபாளையம்.
4	,,	,,	எட்டிமடை.
5	,,	,,	ஒத்தகால் மண்டபம்.
6	,,	,,	திருமலையாம்பாளையம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
7	,,	,,	வெள்ளூர்.
8	,,	,,	பெரியநாயக்கன் பாளையம்.
9	,,	,,	கடலூர்.
10	,,	,,	நரசிம்மநாயக்கன் பாளையம்.
11	,,	,,	துடியலூர்.
12	,,	,,	சர்க்கார் சர்மகுளம்.
13	,,	,,	சின்னவேடன்பட்டி.
14	,,	,,	இடிக்கரை.
15	,,	,,	கர்லாபட்டி.
16	,,	,,	சரவணம்பட்டி.
17	,,	,,	வெள்ளகினர்.
18	,,	,,	கண்ணன்பாளையம்.
19	,,	,,	கருமாதம்பட்டி.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
20	கோயம்புத்தூர்	,,	இருகூர்.
21	,,	,,	பல்லடம், 521 ஊரகக் குடியிருப்புகள்.
22	,,	கனியூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கனியூர்.
23	,,	பொள்ளாச்சி	பொள்ளாச்சி.
24	,,	குடிநீர்த் துணை திட்டம்	ஜமீன் ஊத்துக்குளி மற்றும் 8 கிராமங்கள்
25	மதுரை	மதுரை மாநகராட்சி குடிநீர் அபி விருத்தி துணைத் திட்டம்.	மதுரை மாநகராட்சி.
26	,,	கொம்பை தேவாரம், பண்ணைபுரம் குடிநீர் துணைத் திட்டம்.	கொம்பை, தேவாரம், பண்ணைபுரம்.
27	,,	,,	,,
28	,,	,,	,,
29	,,	பறவை குடிநீர் துணைத் திட்டம்	பறவை.
30	,,	வீரபாண்டி குடிநீர் துணைத் திட்டம்	வீரபாண்டி.
31	சேலம்	சேலம் நகராட்சி, 11 நகரங்கள் மற்றும் 264 ஊரக குடியிருப்பு களுக்கான குடிநீர் அபிவிருத்தி துணைத் திட்டம்.	சேலம் நகராட்சி.
32	,,	,,	ஆத்தூர் நகராட்சி.
33	,,	,,	சூரமங்கலம் நகராட்சி.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
34	,,	,,	மேச்சேரி.
35	,,	,,	ஓமலூர்.
36	,,	,,	கருப்பூர்.
37	,,	,,	கண்ணன்குறிச்சி.
38	,,	,,	அயோத்தியாபட்டினம்.
39	,,	,,	வாழப்பாடி.
40	,,	,,	யேந்தாபூர்.
41	,,	,,	பெத்தநாயக்கன் பாளையம்.
42	,,	,,	நரசிங்கபுரம் 264 ஊரகக் குடிநீர்த் திட்டம்.
43	சேலம் ..	.. தேவூர் குடிநீர் துணைத் திட்டம்.	தேவூர்.
44		அரசிரமணி குடிநீர் துணைத் திட்டம்	அரசிரமணி.
45	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.	பொன்னேரி குடிநீர் துணைத் திட்டம்	பொன்னேரி
46	,,	பள்ளிப்பட்டு குடிநீர் துணைத் திட்டம்.	பள்ளிப்பட்டு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
47	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.	கும்மிடிபூண்டி குடிநீர்த் துணைத் திட்டம்.	கும்மிடிபூண்டி.
48	,,	காஞ்சிபுரம் குடிநீர்த் துணைத் திட்டம்.	காஞ்சிபுரம்.
49	வடஆற்காடு-அம்பேத்கார்	பள்ளிகொண்டா குடிநீர்த் துணைத் திட்டம்.	பள்ளிகொண்டா.
50	,,	திருவளம் குடிநீர்த் துணைத் திட்டம்.	திருவளம்.
51	,,	அம்மூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	அம்மூர்.
52	திருவண்ணாமலை-சம்புவராயர். ..	கீழ்பெண்ணாத்தூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கீழ்பெண்ணாத்தூர்.
53	,, ..	திருவண்ணாமலை குடிநீர்த் துணைத் திட்டம்.	திருவண்ணாமலை நகராட்சி.
54	வட ஆற்காடு-அம்பேத்கார்	ஒடுகத்தூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	ஒடுகத்தூர்.
55	தென் ஆற்காடு ..	பெண்ணாடம் குடிநீர்த் துணைத் திட்டம்.	பெண்ணாடம்.
56	,, ..	கிள்ளை குடிநீர் துணைத் திட்டம்.	கிள்ளை.
57	,,	வடக்கானத்தல் குடிநீர்த் துணைத் திட்டம்.	வடக்கானத்தல்.
58	,,	வளவனூர் குடிநீர்த் துணை திட்டம்.	வளவனூர்.
59	,,	திட்டக்குடி குடிநீர்த் துணைத் திட்டம்.	திட்டக்குடி.

(1)	(2)	(3)	(4)
60	பெரியார்	சென்னசமுத்திரம் குடிநீர்த் துணைத் திட்டம்.	சென்னசமுத்திரம்.
61	,,	கூகனூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கூகனூர்.
62	,,	அத்தானி குடிநீர்த் துணைத் திட்டம்.	அத்தானி.
63	நீலகிரி	கூடலூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கூடலூர்.
64	தஞ்சாவூர்	பெருமக்ளூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	பெருமக்ளூர்.
65	நாகப்பட்டினம்-காயிதே மில்லத்.	நீடாமங்கலம் குடிநீர்த் துணைத் திட்டம்.	நீடாமங்கலம்.
66	,,	சீர்காழி குடிநீர்த் துணைத் திட்டம்.	சீர்காழி.
67	திருச்சிராப்பள்ளி ..	காட்டுப்புத்தூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	காட்டுப்புத்தூர்.
68	,,	கல்லக்குடி-புள்ளம்பாடி குடிநீர்த் துணைத் திட்டம்.	கல்லக்குடி.
69	,,	,,	புள்ளம்பாடி.
70	,,	உடையார்பாளையம் குடிநீர்த் துணைத் திட்டம்.	உடையார்பாளையம்.
71	,,	கிருஷ்ணராயபுரம் குடிநீர்த் துணைத் திட்டம்.	கிருஷ்ணராயபுரம்.
72	,,	அரியலூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	அரியலூர்.

(1)	(2)	(3)	(4)
73	திருச்சிராப்பள்ளி	மணப்பாறை குடிநீர்த் துணைத் திட்டம்.	மணப்பாறை மற்றும் 59 கிராமங்கள்.
74	திண்டுக்கல்-அண்ணா ..	வேடசந்தூர் குடிநீர்த் துணை திட்டம்.	வேடசந்தூர்.
75	,,	கீரனூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கீரனூர்.
76	புதுக்கோட்டை ..	இலுப்பூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	இலுப்பூர்.
77	,,	புதுக்கோட்டை குடிநீர்த் துணைத் திட்டம்.	புதுக்கோட்டை.
78	,,	,,	கீரனூர்.
79	,,	,,	அன்னவாசல் 15 கிராமங்கள்.
80	இராமநாதபுரம் ..	கமுதி அபிராமம் குடிநீர்த் துணைத் திட்டம்.	கமுதி.
81	,,	,,	அபிராமம்.
82	பசும்பொன் தேவர் திருமகனார்	கண்டனூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கண்டனூர்.
83	,,	புதுவயல் குடிநீர்த் துணைத் திட்டம்.	புதுவயல்.
84	நெல்லை-கட்டபொம்மன்	சம்பவார் வடகரை குடிநீர்த் துணைத் திட்டம்.	சம்பவார்.
85	,,	கீழ்ப்பாவூர் குடிநீர்த் துணைத் திட்டம்.	கீழ்ப்பாவூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

86	நெல்லை-கட்டபொம்மன்	ஆழ்வார்குறிச்சி குடிநீர்த் துணைத் திட்டம்.	ஆழ்வார்குறிச்சி.
87	"	சங்கரன்கோவில் குடிநீர்த் துணைத் திட்டம்.	சங்கரன்கோவில்
88	"		ஆலங்குளம் 88 வழியோர கிராமங்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆ. குறைந்த செலவு துப்புரவு திட்டம்.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	பயனடையும் நகராட்சி பேரூராட்சி.
(1)	(2)	(3)
முதல் கட்டம் : முடிவு பெற்றவை :		
1	செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். ..	.. செங்கல்பட்டு
2	வட ஆற்காடு அம்பேத்கார் ..	.. ஆம்பூர்
3	தென்னாற்காடு ..	.. பண்ருட்டி
4	சேலம் ..	.. ஆத்தூர்
5	பெரியார் ..	.. கோபிசெட்டிபாளையம்
6	கோவை ..	.. பொள்ளாச்சி
7	நீலகிரி ..	.. கூனூர்
8	திருச்சிராப்பள்ளி ..	.. துறையூர்
9	புதுக்கோட்டை ..	.. அறந்தாங்கி
10	தஞ்சை ..	.. பட்டுக்கோட்டை
11	நாகப்பட்டினம் காயிதே மில்லத்	.. சீர்காழி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

12	திண்டுக்கல் அண்ணா	கொடைக்கானல்
13	மதுரை	தேனி அல்லிநகரம்
14	நெல்லை—கட்டபொம்மன்	தென்காசி

இரண்டாம் கட்டம் செயல்படுத்தப்பட்டு வருபவை.

1	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் ..	1, பள்ளப்பட்டு
		2. கும்மிடிபூண்டி
		3. பொன்னேரி
2	தென்னாற்காடு	4. வளவனூர்
3	திருவண்ணாமலை சம்புவராயர்	5. கீழ்ப்பெண்ணாத்தூர்
4	வட ஆற்காடு அம்பேத்கார்	6. ஒடுகத்தூர்
		7. பள்ளிகொண்டா
5	புதுக்கோட்டை ..	8. இலுப்பூர்
6	திருநெல்வேலி கட்டபொம்மன்	9. ஆழ்வார்குறிச்சி
7	திருச்சிராப்பள்ளி	10. காட்டுப்புத்தூர்
8	கோயம்புத்தூர் ..	11. கனியூர்
		12. இருகூர்
		13. சிறுமுகை
		14. கவுண்டம்பாளையம்
		15. குறிச்சி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29

52—

கன்னியாகுமரி மற்றும் திருப்பங்கூர் ஊராட்சிகளில் கூட்டுக் குடியிருப்பு கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 11843—திரு. து. மூர்த்தி, : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கன்னியாகுடி, மற்றும் திருப்பங்கூர் ஊராட்சிகளில் 1992–93ல் கூட்டுக் குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்த செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

53—

கற்கோயில் ஊராட்சி ஆதி திராவிடர்களுக்கு கூட்டுக் குடியிருப்ப கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 11844—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் வைத்தீஸ்வரன் கோயில் மற்றும் கற்கோயில் ஊராட்சிகளுக்கு 1992–93ல் புதிதாக ஆதிதிராவிடர்களுக்கு கூட்டுக் குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து, செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1993 அக்டோபர் 29]

54—

அதம்பை ஆதிதிராவிடர் தள்ளக்கி தெருவிற்கு ஒரு போர்வெல் அமைத்தல்.

வினா எண் 11937—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ) ஆதி திராவிடர் தள்ளக்கி தெருவிற்கு 1992—93ல் ஒரு போர்வெல் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இக்கிராமத்திற்கு அதம்பை தெற்கு குடிநீர்த் திட்டத்திலிருந்து 2 பொது மேடைக் குழாயும் 1988-89ல் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு யூனியனின் பராமரிப்பில் உள்ளது. வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நரியங்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

55—

வினா எண் 11994—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காட்டில் 1992—93—ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இக்கிராமத்தில் 30000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி உள்ளது. அனைத்துப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, புதிதாக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட உத்தேசமில்லை.

[1993 அக்டோபர்

56—

சீவன்குறிச்சியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12001—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சீவன் குறிச்சியில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க 1992–93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. தற்போது இரண்டு கையிறைப்பான்கள் பயனில் உள்ளன.

57—

சங்கரன் கொல்லையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12004—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, சங்கரன் கொல்லையில் 1992–93ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. சங்கரன் கொல்லையானது கஞ்சன்காட்டில் ஒரு பகுதியாகும். தற்போது கஞ்சன்காடு கிராமத்திற்கு புதிதாக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்திலிருந்து சங்கரன் கொல்லை பகுதிக்கும் பைப்லைன்

ட அமைக்க ஆவன செய்யப் ப

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

58—

கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12008—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதி திராவிடர் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி 1992–93-ல் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டில் எல்.ஐ.சி. மூலம் ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின்விசைத் திட்டம் நிறுவும் பணிகள் நடப்பில் உள்ளது. இத்திட்டம் 5/1993-ல் முடிக்கப்படும்.

59—

அதம்பை ஆதி திராவிடர்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12010—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வடக்கு), ஆதி திராவிடர்களுக்கு 1992–93ல் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இக்கிராமத்திற்கு ஒரு கையிறைப்பான் அமைத்துக் கொடுக்கப்பட்டு பயனில்உள்ளது.

60—

திருவள்ளுவர் நகருக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12013—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) சேர்ந்த திருவள்ளுவர் நகருக்கு 1992–93ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. திருவள்ளுவர் நகர் ''அதம்பை தோப்புத் தெரு'' கிராமத்தின் ஒரு பகுதி. இந்நகர மக்களுக்கு இக் கிராமத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

61—

குண்டாமரைக்காட்டில் வடக்கு பகுதியில் போர்வெல் அமைத்தல்.

வினா எண் 12023—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், குண்டாமரைக்காட்டில் வடக்குப் பகுதியில் போர்வெல் 1992–93ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இப்பகுதியில் குண்டாமரைக்காடு குடிநீர்த் திட்டம் மூலம் ஒரு குடிநீர் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

62—

குறவன்கொல்லைக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12024—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, குறவன் கொல்லைக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க 1992–93ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இங்கு ஒரு கையிறைப்பான் உள்ளது. வரும் நிதி ஆண்டுகளில், நிதிநிலையைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் மின் விசைத் திட்டம் மேற் கொள்ளலாம்.

63—

புனவாசல் பிளாங் குடியிருப்பு மேற்கு பகுதிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 12034—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் பிளாங் குடியிருப்பு மேற்குப் பகுதியில் 1992-93-ல் ஒரு ஆழ் குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

64—

குறக்குடியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12029—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடியில் 1992–93-ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இப்பகுதியில் இரண்டு கையிறைப்பான்கள் உள்ளன. தேவையினடிப்படையில் வரும் ஆண்டுகளில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

65—

அதம்பை ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12045—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) ஆதிதிராவிடர்கள் மீதமுள்ளவர்களுக்கு 1992–93-ல் காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய் அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

66—

குளக்குடியில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 12051—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, குளக்குடியில் 1992-93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குளக்குடி ஊராட்சியில் 1992-93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

67—

பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12311—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கடலோர மீனவருக்கு மட்டுமே மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம் பொருந்துமாதலால் இத்திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்திற்கு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

98—

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புதல்

வினா எண் 13172—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்த எல்லா இலங்கை அகதிகளும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்களா?

(ஆ) மீதம் உள்ளோர் இருப்பின் எப்போது அனுப்பப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு வரை முகாம்களில் அனுமதிக்கப்பட்ட சுமார் 1,15,680 இலங்கை அகதிகளில், 29,102 அகதிகள் அவர்களின் விருப்பத்தின்படி 1992 ஆம் ஆண்டு கப்பல்/விமானம் வழியாக இலங்கைக்கு திரும்ப அனுப்பப்பட்டார்கள். மீதம் உள்ளோர் அவர்கள் விருப்பம் தெரிவித்தால் அவ்வப்போது திரும்ப அனுப்பப்படுவார்கள். தற்போது விருப்பம் தெரிவித்த அகதிகளை கப்பல் மூலம் திரும்ப அனுப்ப மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

99—

காலகம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் மாணவர் நல விடுதி கட்டுதல்.

வினா எண் 15576—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாணவியர் பிற்பட்டோர் நல விடுதி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்ட அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

100—

பரமக்குடி தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செக்குகள்.

வினா எண் 17154—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செக்குகள் எத்தனை?

(ஆ) இதில் செயல்படாமல் நின்ற செக்குகள் எத்தனை?

(இ) காரணங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) 42 மின்விசை செக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 17 மின்விசை செக்குகள் இயங்காமல் உள்ளன.

(இ) மூலப் பொருளான எள் கிடைக்கும் காலத்தில் மொத்தமாக கொள்முதல் செய்து, இருப்பு வைக்க வசதி இல்லாததால், அவ்வப்போது எள் கொள்முதல் செய்து தொழில் நடத்தி வருகின்றனர். எள்ளின் விலை அதிகரித்து இருப்பதாலும், சொற்ப இலாபம் கிடைப்பதாலும், மின்விசை செக்குகளை இயக்காமல் உள்ளனர். இருப்பினும், இயங்காத செக்குகளை தொடர்ந்து இயக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

101—

சின்ன சேலத்திற்கு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 19423—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் அலுவலகத்தை சின்ன சேலத்திற்கு மாற்றிவிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கதர் மற்றும் கிராமத் தொழில் மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த வருவாய் கோட்டத்தின் தலைமையிடத்தில் மட்டுமே அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம் கதர் மற்றும் கிராமத் தொழில் அலுவலகம் விழுப்புரத்தின் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருவதால் மேற்படி மாவட்டத்தின் கதர் கிராமத் தொழில் அலுவலகத்தை சின்ன சேலத்திற்கு மாற்றிவிடும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

இருபத்தி மூன்றாம் பட்டியல்.

1—

ஏழுநூத்திபாளையம் கிராம துணை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுத்துதல்.

வினா எண் 19229— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஏழுநூத்தி பாளையம் கிராம துணை ஆரம்ப சுகாதார நிலையம் உரிய முறையில் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், எழுநூத்திபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இல்லை. அருகில் உள்ள கணபதிபாளையம் ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்ட இலமத்தூரில் ஒரு துணை சுகாதார நிலையம் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இத்துணை சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதார செவிலியர் இத்துணை சுகாதார நிலைய எல்லையில் தனது பணிகளை செய்து வருகின்றார். இந்நிலையம் சரிவர இயங்கி வருகின்றது.

2—

கருங்கரட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ வசதி.

வினா எண் 19485— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொளாநல்லி கிராமம், கருங்கரடில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான அனைத்து மருத்துவ வசதியையும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,05,760. இவ்வூராட்சி ஒன்றியத்தில் கொளாநல்லி, சிவகிரி, தாமரைப்பாளையம், சென்னசமுத்திரம், தண்டாம்பாளையம் மற்றும் கொண்பாளைபுதூர் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், கருங்கரடில் அமைப்பதற்கு சாத்தியமில்லை.

3—

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கை.

வினா எண் 19952—ஏ—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கைகளை அவைமுன் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கையை சட்டமன்றப் பேரவை முன் வைப்பதற்கான விதிகள் ஏதும் 1987 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அப்பல்கலைக் கழகத்தின் சட்டத்தில் இல்லை. ஆதலால் டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின், ஆண்டறிக்கை அவை முன் வைக்கப்படுவதற்கில்லை.

4—

அரசு மருத்துவமனையின் மருத்துவர், செவிலியர் எண்ணிக்கை.

வினா எண் 20082—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 29

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள், எத்தனை செவிலியர்கள் பணிபுரிகிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் (இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி உள்ளிட்டது) பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் எண்ணிக்கை துறை வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

	மருத்துவக் கல்வித் துறை.	மருத்துவம் (மற்றும்) ஊரக நலப் பணித்துறை.
(1)	(2)	(3)
1. மருத்துவர்கள்	3,266	2,462
2. செவிலியர்	3,604	4,322

	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.			
	சித்தா.	ஆயுர் வேதம்.	யுனானி.	ஓமியோ பதி.
(1)	(4)	(5)	(6)	(7)
1. மருத்துவர்கள் ..	571	17	25	47
2. செவிலியர் ..	69	11	2	4

5—

குடும்பக்கட்டுப்பாடு அதிகம் செய்துகொண்ட மாவட்டம்.

வினா எண் 21367—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் குடும்பக்கட்டுப்பாடு அதிகமாக செய்து கொண்டவர் உள்ள மாவட்டம் எது?

1993 அக்டோபர் 29]

(ஆ) அதில் எந்த தாலுகா முதன்மையாக உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மக்கள் குடும்பக் கட்டுப்பாடு அதிகமாக செய்து கொண்டவர்கள் உள்ள மாவட்டம் திண்டுக்கல்—அண்ணா மாவட்டமாகும். தமிழ்நாட்டில் திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் 66.5 விழுக்காடு தகுதி வாய்ந்த தம்பதியினர் பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு முறைகளை கடைபிடித்து வருகின்றார்கள்.

(ஆ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல் தாலுக்கா முதன்மையாக உள்ளது. பழனி தாலுகா இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. மேலும், பழனி தாலுக்காவில் உள்ள ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் முதல் இடத்தை வகிக்கின்றது.

6—

நடத்துனர், ஓட்டுனர் பணி நிரந்தரம்.

வினா எண் 15632—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் 59 நாளும், அதற்கு மேலும் பணி செய்த தற்காலிக நடத்துனர், ஓட்டுனர்களை பணி நிரந்தரம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

செயற் குறிப்பு ஏதும் இல்லை. அரசு போக்குவரத்துக் கழகங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு தினச் சம்பள தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப்படுகின்றனர். அவ்வாறு பணியில் அமர்த்தப்படுபவர்கள் 240 பணி நாட்களை திருப்திகரமாக முடித்த பின் பணிமுறைப படுத்தப்படுகின்றனர்.

[1993 அக்டோபர் 29

7—

சீர்காழியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்து.

வினா எண் 15771— திரு. எம். பூராசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை. சீர்காழியிலிருந்து சிதம்பரம், கடலூர், பாண்டிச்சேரி, திண்டிவனம் மார்க்கமாக சென்னை செல்லும் தடத்தின் நீளம் 260 கி.மீ. சீர்காழி என்ற இடமானது மயிலாடுதுறைக்கும் சிதம்பரத்திற்கும் இடையே 20 கி.மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து மயிலாடுதுறைக்கும் மற்றும் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கும் மற்றைய போக்குவரத்துக் கழகங்களால் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சீர்காழியிலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்ள விரும்பும் பயணிகள் சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறையிலிருந்து இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். சீர்காழியிலிருந்து சென்னைக்கு பேருந்துகள் இயக்குவது இயக்க ரீதியில் சாத்தியமில்லை.

8—

காட்டுமன்னார் கோயிலிலிருந்து அணைக்கரை வரை பேருந்து விடுதல்.

வினா எண் 15873— திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயிலிலிருந்து சிறுகாட்டூர், கஞ்சங்கொல்லை வழியாக அணைக்கரை செல்ல தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து விடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்தை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கடந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக இச்சாலை பேருந்தின் பாதுகாப்பான இயக்குதலுக்கு ஏற்றதாக இல்லை. பழுதுபட்ட சாலைப் பகுதிகள் செப்பனிடப்பட்ட பின்னர் மீண்டும் கஞ்சங்கொல்லை வழியாக பேருந்து வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

ஆலங்குடி, கருக்காகுறிச்சி வழியாக பட்டுக்கோட்டைக்கு பேருந்து வசதி.

வினா எண் 16267—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங் குடியில் இருந்து கருக்காகுறிச்சி வழியாக பட்டுக்கோட்டைக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

ஆலங்குடியிலிருந்து கருக்காகுறிச்சி வழியாக பட்டுக் கோட்டை செல்லும் வழித்தடத்தின் தூரம் 43.3 கி.மீ. ஆகும். இதில் கருக்காகுறிச்சி விலக்கிலிருந்து திருச்சிற்றம்பலம் வரை சுமார் 10.2 கி.மீ. பேருந்து செல்லாத பகுதி மேற்படி பேருந்து செல்லாத சாலையில் இரண்டு குறுகலான பாலங்கள் பேருந்து செல்ல இயலாத நிலையில் உள்ளன. எனவே தற்போது பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1993 அக்டோபர் 29

10—

உளுந்தூர் அரவை மில் வரை பேருந்து இயக்குதல்.

வினா எண் 16373—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தலைக்குளம் (எண் 9) பேருந்தை உளுந்தூர் அரவை மில் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக டி.26 மற்றும் டி.21 நகரப் பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 12 நடைகளில், உளுந்தூர் அரவை மில்லிற்கும் தலைக்குளத்திற்கும் நேரடி நகரப் பேருந்து வசதிகள் உள்ளதாலும், இப்பகுதி பயணியர் போக்குவரத்து எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருப்பதாலும், சிதம்பரத்திலிருந்து தலைக்குளத்திற்கு இயக்கப்பட்டுவரும் டி.9 நகரப் பேருந்தை உளுந்தூர் அரவை மில் வரை நீட்டித்திட வேண்டிய அவசியமில்லை.

11—

உளுந்தூர் வழியாக விழுப்புரம் வரை புதிய பேருந்து.

வினா எண் 16374—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம், உளுந்தூர் வழியாக விழுப்புரம் வரை புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

1993 அக்டோபர் 29]

சிதம்பரம்-விழுப்புரம் (வழி) உளுந்தூர் தடத்தில் பேருந்து வசதி பெறாத பகுதிகள் ஏதும் இல்லை. எனவே, சிதம்பரம் - விழுப்புரம் (வழி), உளுந்தூர் தடத்தில் தனியாக ஒரு பேருந்தினை இயக்கிடத் தேவையில்லை.

12—

உப்பிலியாபுரத்தில் பணிமனை அமைத்தல்.

வினா எண் 19133—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) உப்பிலியாபுரத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க திட்டம் இந்த நிதி ஆண்டின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

13—

வெள்ளப்பாளையம் நான்கு ரோடு பேருந்து நிறுத்தம்.

வினா எண் 19270—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமத்தில் வேலப்பம்பாளையம் நான்கு ரோடு நிறுத்தத்தில் ஜீவா பேருந்து நிறுத்தப்பட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பு கிராமம், வேலப்பம்பாளையம் நான்கு ரோடு பேருந்து நிறுத்தத்தில், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் ஜீவா போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து ஒன்றும் நகரப் பேருந்துகள் நான்கும் மேற்படி இடத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் வண்ணம் இயக்கம் செய்யப்படுகிறது.

14—

பூதப்பாண்டி, கொட்டாரம் பகுதியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனைப் பிரிவுகள் தொடங்குதல்.

வினா எண் 17532—டாக்டர் அ. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி, கொட்டாரம் ஆகிய பகுதிகளில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனைப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஏற்கெனவே கிளை விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. எனவே, பூதப்பாண்டி மற்றும் கொட்டாரம் பகுதிகளில் வாழும் மக்கள் தங்களுக்குத் தேவையான கைத்தறித் துணிகளை அருகாமையிலுள்ள கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் கிளை விற்பனை நிலையங்களில் வாங்கிப் பயன் அடையலாம். எனவே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பூதப்பாண்டி மற்றும் கொட்டாரம் ஆகிய இடங்களில் கிளை விற்பனை நிலையங்களை நிறுவும் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

15—

பொங்கல் திருவிழாவன்று குமரி ஏழை மீனவர்களுக்கு வேட்டி சேலை வழங்குதல்.

வினா எண் 19619—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பொங்கல் திருவிழாவன்று ஏழை மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் குமரி மாவட்ட ஏழை மீனவர்களுக்கும் வேட்டி சேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, பொங்கல் திருநாளை முன்னிட்டு 60 லட்சம் ஆண்கள் மற்றும் 60 லட்சம் பெண்களுக்கு இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை முறையாக கணக்கிட்டு அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்ட ஏழை மீனவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

16—

தருமபுரி மாவட்டத்தில் வீட்டு வசதித்துறையின் கீழ் வீடு கட்டுதல்

வினா எண் 16102—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1992-93ஆம் ஆண்டில் வீட்டு வசதித் துறையின் வாயிலாக கட்டப்படும் வீடுகள் எத்தனை ?

(ஆ) மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு வீடுகள் கட்டப்படுகின்றன ?

விடை—

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :</u>

(அ) 1,150 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு கூடுதலாக மொத்தம் 1,228 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) விவரங்கள் : நடப்பு நிதியாண்டில் (1992-93) குறைந்த வருவாயினருக்காக 569 வீடுகளும் நடுத்தர மக்களுக்காக 420 வீடுகளும், உயர் வருவாயினருக்காக 161 வீடுகளும், ஆக மொத்தம் 1,150 குடியிருப்புகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டது. ஆனால் முடிவில் 1,228 வீடுகள் கட்ட திட்டமிட்டதை விட கூடுதல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட்ட வீடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

வரிசை எண்ணும் இடத்தின் பெயரும்.	எல்.ஐ.ஜி.	எம்.ஐ.ஜி.	எச்.ஐ.ஜி.	மொத்தம்.
1. காவேரிப்பட்டினம் ..	95	159	80	334
2. ஒசூர் நிலை-பத்து ..	394	189	48	631
3. ஒசூர் நிலை-எட்டு ..	..	47	39	86
4. பாலக்கோடு ..	65	79	33	177
மொத்தம் ..	554	474	200	1,228

17—

<u>மாவட்டம் தோறும் செயற்பொறியாளர் நியமித்தல்</u>

வினா எண் 16189— <u>திரு. ஆர். சிங்காரம்</u> : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஒரு நிர்வாக அலுவலகம் அமைத்து அதற்கு ஒரு செயற்பொறியாளரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :</u>

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஒரு நிர்வாக அலுவலகம் அமைத்து அதற்கு செயற்பொறியாளரை நியமிக்க இயலாது. எந்தெந்த

1993 அக்டோபர் 29]

மாவட்டத்தில் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அத்தியாவசியத் தேவை இருக்கிறதோ, எந்தெந்த மாவட்டத்தில் வீட்டு வசதி திட்டங்கள் அதிகமான அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ, அந்தந்த மாவட்டத்தில் தான் நிர்வாக அலுவலகம் அமைக்கப்பட்டு, செயற்பொறியாளர் நியமிக்கப்படுவார். தற்போதைய நிலவரப்படி வீட்டு வசதித் திட்டங்கள் அதிகமாக உள்ள மாவட்டங்கள் யாவற்றிலும் வீட்டு வசதி நிர்வாக அலுவலகம் உள்ளது. தற்போது 29 கோட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்வாக அலுவலகம் அமைப்பதற்கான தேவை இல்லை என்று கருதப்படுகிறது,

18—

நிலக்கடலைக்கு கம்பளிப்புழுவால் ஏற்படும் பாதிப்பை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 19649—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கடலைக்கு கம்பளிப் புழுவால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

நிலக்கடலையை தாக்கும் சிகப்புகம்பளிப் புழுவினை தடை செய்ய 1991-92 ஆம் ஆண்டு சமுதாய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் இதற்கென விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 300 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளில் கோடைக்கால உழவு செய்வது கம்பளிப் புழுக்களை சேகரிப்பது, சிறு பொறிகள் வழங்குவது மற்றும் பயிர் பாதுகாப்பு ரசாயனங்கள் (P. P. Chemical) வழங்குவது ஆகியவை அடங்கும். ஒருங்கிணைந்த எண்ணெய்வித்து வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சம் செலவு செய்து 4,000 ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. அதில் ரூ. 12 இலட்சம் இக்கம்பளி பூச்சியினை தடை செய்யும் பொருட்டு இவற்றால் அதிகம் தாக்கப்பட்ட சேலம், பெரியார், பசும்பொன், தர்மபுரி மாவட்டங்களில் குறிப்பாக சிறிய/மிகச்சிறிய விவசாயிகளின் நிலங்களுக்காக செலவிடப்பட்டது.

2. 1992–93 ஆம் ஆண்டில் செங்கை எம்.ஜி.ஆர்., தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோவை, பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள 4,589 ஹெக்டேர் பரப்பில் இக்கம்பளிப் புழுவை கட்டுப்படுத்தும் பொருட்டு ரூ 6.7 இலட்சம், விவசாயிகளுக்கு செலவழிக்கப்பட்டது நடப்பு ஆண்டில் (1993–94) இத்திட்டத்தினை தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

கோடை சாகுபடிக்கு விதைகள் வழங்குதல்.

வினா எண் 20326— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை — பேராவூரணி பகுதியில் கோடை சாகுபடியாக கடலை, எள், உளுந்து அதிக அளவில் சாகுபடி செய்வதால் 1993-94 ஆம் ஆண்டு தரமான கடலை, எள், உளுந்து விதைகளை வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

1993–94 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியில் கோடை சாகுபடி பருவத்தில் கடலை, எள், உளுந்து விநியோகம் செய்ய உத்தேசித்துள்ளது பற்றிய விபரம் :

வரிசை எண்.	பயிர்.	இலக்கு விநியோகம்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
		பட்டுக்கோட்டை.	
1.	கடலை	31 டன்	கோடை பருவத்திற்கு தற்போது விதைக்க கடலை விதை பண்ணையிலிருந்து விதைகள் நவம்பர், டிசம்பர் 1993 மாதங்களில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும்.

1993 அக்டோபர் 29]

(1)	(2)	(3)	(4)
2.	எள்	2 டன்	ஜூலை 1993—ல் கொள்முதல் செய்யப்பட்டு ஜனவரி-பிப்ரவரி 1994ல் விநியோகம் செய்யப்படும்.
3.	உளுந்து	4 டன்	ஜூலை—ஆகஸ்ட் 1993-ல் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்தில் விநியோகம் செய்யப்படும்.
		பேராவூரணி	
1.	கடலை	31 டன்	கோடை பருவத்தில் விதைக்க கடலை, விதைப் பண்ணையிலிருந்து விதைகள் நவம்பர்—டிசம்பர் 1993-ம் மாதங்களில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படும்.
2.	எள்	2.55 டன்	ஜூலை 1993—ல் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்திற்கு ஜனவரி - பிப்ரவரி 1994ல் விநியோகம் செய்யப்படும்.
3.	உளுந்து	6 டன்	ஜூலை — ஆகஸ்ட் 1993-ம் மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டு கோடை பருவத்தில் விநியோகம் செய்யப்படும்.

20—

சிப்காட் வளாகங்களை விரிவாக்கம் செய்தல்.

வினா எண் 7730—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எங்கெங்கு சிப்காட் வளாகங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றில் எந்தெந்த வளாகங்களை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

[1993 அக்டோபர் 29

விடை—

மாண்புமிகு திரு. ம.சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஒசூர், இராணிப்பேட்டை, கும்மிடிப்பூண்டி கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் சிப்காட் வளாகங்கள் உள்ளன.

(ஆ) விரிவாக்கத்திற்காக கும்மிடிபூண்டியில் 600 ஏக்கர் நிலமும் கடலூரில் 220 ஏக்கர் நிலமும் ஒசூரில் (பகுதி 2) 190 ஏக்கர் நிலமும் கூடுதலாக கையகப்படுத்த சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

21—

வேதாரண்யம், தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்.

வினா எண். 8530—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொருளாதாரத்திலும், தொழில் வளர்ச்சியிலும் மிகவும் பின்தங்கியுள்ள வேதாரண்யம் தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அரசு அறிவிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்;

தொகுதி அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிகக்கும் முறை பின்பற்றப்படவில்லை. வட்ட அளவில்தான் மிகவும் பின்தங்கிய பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே வேதாரண்யம் தொகுதியை மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கும் சாத்தியக்கூறு இல்லை.

22—

மதுராந்தகம் தொகுதியில் எரிசாராய ஆலை தொடங்குதல்.

வினா எண். 8551—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பதொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

மதுராந்தகம் தொகுதி படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உருவாக்கப்படும் மொலாசசைப் பயன்படுத்தி, எரிசாராய ஆலை ஒன்று மதுராந்தகம் தொகுதியில் புதியதாக திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உருவாக்கப்படும் மொலாசசைப் பயன்படுத்தி எரிசாராய ஆலை ஒன்று மதுராந்தகம் தொகுதியில் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடமில்லை.

23—

நயினார்கோவில் அரசு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

வினா எண். 14956—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியத்தில் உள்ள அரசு நடத்தும் தொழிற்சாலைகள் எத்தனை ?

(ஆ) அதனால் வேலைவாய்ப்பு பெற்றவர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியப் பகுதியில் அரசு நடத்தும் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை.

(ஆ) எனினும் இங்கு 23 தனியார் சிறு தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 65 நபர்கள் வேலை வாய்ப்பு வசதி பெற்றுள்ளனர்.

24—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தொழில் முதலீட்டு ஒதுக்கீடு.

வினா எண் 15187—டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு குறியீடு 1992–93ல் எவ்வளவு ?

(ஆ) இதில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991–92ல் ஒதுக்கீடு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கடன் அனுமதி குறியீடு, 1992–93ம் ஆண்டிற்கு ரூபாய் 250.00 கோடியாகும்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991–92 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு ரூ. 1.28 கோடியும், 1992–93ம் ஆண்டிற்கு ரூ. 2.00 கோடியும் ஆகும்.

25—

தொழில் முதலீட்டுக் கழக கடன் தொகை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

வினா எண். 15462—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இன்னும் வசூலிக்க வேண்டிய கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் தவணை தவறிய கடன் தொகை எவ்வளவு

(இ) எத்தனை நிறுவனங்கள் இந்த ஆண்டில் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன ?

(ஈ) துரிதமாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறைஅமைச்சர்:

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 31—3—93 அன்று வரை வசூலிக்க வேண்டிய கடன் தொகை ரூ. 76,691.00 இலட்சங்கள் ஆகும்.

1993 அக்டோபர் 29]

(ஆ) அதில் தவணை தவறிய கடன் தொகை 31—3—93 அன்று வரை ரூ. 17,867.00 இலட்சங்கள் ஆகும்.

(இ) 1992–93 ஆண்டு காலத்தில் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள சில தொழில் நிறுவனங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை 588 ஆகும்.

(ஈ) ஆம். நிலுவையில் உள்ள கடன் தொகைகளை வசூலிப்பதற்கு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

26—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தொழில் முதலீடு வழங்குதல்

வினா எண். 15697—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் **வி**னாக்களுக்கு **வி**டையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991–92ம் ஆண்டும் 1992–93ம் ஆண்டும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (டி.ஐ.ஐ.சி.) மூலம் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த தொழிலுக்கு கடன்கள் வழங்கப்பட்டன?

(இ) இதனால் பயன் பெற்ற ஆதிதிராவிடர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1991–92 மற்றும் 1992–93ம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தொகை விவரம் :

ஆண்டு.	எண்ணிக்கை.	தொகை (ரூ. இலட்சத்தில்)
1991–92	93	202
1992–93	94	209
(28—92—1993 முடிய)		

(ஆ)

1991-92

1. உணவுப் பொருள்
2. துணிகள் தயாரிப்பு
3. மர வேலை
4. காகிதம்
5. அச்சுத் தொழில்
6. ஓட்டல்
7. போக்குவரத்து
8. தொழிற்பேட்டைகள்
9. இதர தொழில்கள்.

1992-93

1. உணவுப் பொருள்.
2. துணிகள் தயாரிப்பு.
3. அச்சுத் தொழில்.
4. காகிதம்.
5. பதிவு பெற்ற மருத்துவர்கள்.
6. போக்குவரத்து.
7. கற் சுரங்கம்.
8. அறைகலன்.
9. ஓட்டல்.
10. இதர தொழில்கள்.

(இ) இதனால் பயன்பெற்ற ஆதிதிராவிடர் 1991-92ல் 5 பேரும் 1992-93ல் 6 பேருமாகும்.

27—

இராமனூர் கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் அமைத்தல்.

வினா எண். 20640—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், இராமனூர் கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

தேவையைப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

1993 அக்டோபர் 29]

28—

பார்வை இன்மைத் தடுப்புத் திட்டத்தின்கீழ் Vit. 'A' solution கொடுக்கும் திட்டம்.

வினா எண் 21796— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வை இன்மைத் தடுப்பு தேசியத் திட்டத்தின்கீழ் 3 வயது நிறைந்த ஊட்டச்சத்து மற்றும் சத்துணவு மையங்களில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் vit. 'A' solution கொடுத்து பயனாளிகள் பட்டியலில் கொண்டு வரும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் Vifamin 'A' தரப்படுகிறது.

(ஆ) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் எல்லா மாவட்டங்களும் படிப்படியாக கொண்டு வரப்படுகிறது.

29—

சித்தக்காடு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 15584— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம், சித்தக்காடு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி தளவாடச் சாமான்கள், ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

30—

அச்சன்குட்டன் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்தல்.

வினா எண் 15589— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, அச்சன் குட்டன் கிராமத்தில் 1992–93-ல் கிளை நூலகம் ஒன்றை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

31—

இடையாத்தி மேற்கு கோனார் தெருவில் நூலகம் அமைத்தல்.

வினா எண் 16141— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி மேற்கு கோனார் தெருவிலும் மற்றும் செங்கமங்கலத்திலும் 1993–94-ல் நூல் நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இல்லை.

32—

செங்கமங்கலத்தில் நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண் 16150— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம்—பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலத்தில் 1992–93-ல் ஒரு நூல் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இல்லை.

33—

பரமக்குடித் தொகுதியில் கட்டிமுடிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை.

வினா எண் 16512—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 1991–92 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பெற்ற பள்ளிக் கட்டிடங்கள் எத்தனை ?

(ஆ) அதன் மதிப்புத் தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) பரமக்குடி தொகுதியில் 1991–92 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் எதுவும் கட்டி முடிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34—

பூம்புகாரில் நூல் நிலையம் அமைத்தல்.

வினா எண் 16859—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பூம்புகாரில் ஒரு நூல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்.

ஏதுமில்லை.

35—

மிராளூரில் வழங்குமுறை நூலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 17380—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் மிராளூரில் மனமகிழ் மன்ற கட்டிடத்தில் இயங்கி வரும் வழங்குமுறை நூலகத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

36—

கடுக்கரை பகுதிநேர நூலகத்தை கிளை நூலகமாக மாற்றுதல்.

வினா எண் 17478—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி கடுக்கரை பகுதியில் இருக்கும் பகுதி நேர நூலகத்தை கிளை நூலகமாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

37—

புதூர் நூலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 19770—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 24[

(அ) விளாத்திகுளம் தொகுதி, புதூர், விளத்திகுளம் பேரூராட்சியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) வ.உ.சி.மாவட்ட விளாத்திகுளத்தில் நூலக ஆணைக் குழுவின் கிளை நூலகம் ஒன்று வாடகை அற்ற இலவச கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது.

(ஆ) விளாத்திகுளம் பேரூராட்சியிடமிருந்து காலிமனை ஒன்று தீர்மான வடிவில் பெறப்பட்டு பத்திரப் பதிவு செய்தோ, வருவாய்த்துறையின் உரிமை மாற்றமோ பெறப்படவில்லை. தீர்மான வடிவில் மட்டும் பெறப்பட்ட காலிமனையில் 620 ச.அடி பரப்பளவில் ரூ. 1 இலட்ச மதிப்பீட்டில் நூலகக் கட்டடம் கட்டுவதற்கு 10/91ல் நிர்வாக அனுமதி அறிவிக்கப்பட்டு வருவாய்த துறையின் உரிமைமாற்றம் அல்லது மாவட்ட ஆட்சியரின் நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன் கட்டடப்பணி துவக்கப்படும்.

38—

குத்தாலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி அமைத்தல் :

வினா எண் 19830—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, அரசு உயர்நிலைப் பள்ளியில் கழிப்பிட வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

பயிர்காப்பீட்டு திட்டத்திற்கு தொகை வசூலித்தல்

வினா எண் 16670—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டம் எந்தெந்த பகுதிகளில் எந்தெந்த பயிர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்த வகையில் காப்பீடு செய்யப்படுகிறது?

(இ) எவ்வளவு தொகை வசூல் செய்யப்படுகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) தமிழகத்தில் விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டம் பகுதி அடிப்படையில், வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டு செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு ஈட்டுறுதி செய்யப்படுகிறது.

(ஆ) மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டபடி ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி முடிய வழங்கப்படும் கடன்கள் காரிப் பருவத்தின் கீழும், அக்டோபர் 1-ஆம் தேதி முதல் மார்ச் 31-ஆம் தேதி முடிய வழங்கப்படும் கடன்கள் ராபி பருவத்தின் கீழும் ஈட்டுறுதி செய்யப்படுகின்றன. ஒரு வட்டாரத்திற்கான உறுதி அளிக்கப்பட்ட விளைச்சல் (ஈட்டுறுதி செய்யப்படும் பயிர்களுக்கு) பயிர்வாரியாக பொது காப்பீட்டு கழகத்தால் முந்தைய ஆண்டுகளில் விளைச்சல் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. இவ்வாறு கணிக்கப்படும் உறுதியளிக்கப்பட்ட விளைச்சலின் அளவைவிட புள்ளியியல் துறையால் ஒரு வட்டாரத்தில் ஒரு கிராமத்திற்கு இரண்டு வீதம் எட்டு கிராமங்களில் மேற்கொள்ளப்படும் 16 பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்படும். சராசரி விளைச்சலின் அளவு குறையும்போது அப்பகுதியில் ஈட்டுறுதி செய்த விவசாயிகளுக்கு ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது இத்திட்டம் கூட்டுறவு வணிக மற்றும் மண்டல கிராமிய வங்கிகளில் கடன்பெறும் விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

1993 அக்டோபர் 29]

இந்த வங்கிகளினால் மேற்குறிப்பிட்ட பயிர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ஒரு விவசாயிக்கு ரூ. 10,000-க்கு மிகாமல் ஈட்டுறுதி செய்யப்படுகிறது.

(இ) இத்திட்டத்தில் பிரிமியக் கட்டணமாக நெல் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் இரு சதவீதமும், எண்ணெய் வித்துக்களுக்கு ஈட்டுறுதி செய்த தொகையில் ஒரு சதவீதமும் வசூலிக்கப்படுகிறது.

40—

பணப்பயிர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டம்.

வினா எண். 17042—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயிகள் பயிர் செய்யும் பணப்பயிர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ள விரிவான பயிர் ஈட்டுறுதி திட்டத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு ஈட்டுறுதி செய்யப்படுகிறது. வாழைப் பயிருக்கு ஈட்டுறுதித் திட்டத்தினை யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் கோயம்புத்தூர், திருச்சி, சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயலாக்கி வருகிறது.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்துடன் புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தினை உருவாக்க பொது காப்பீட்டுக் கழகத்தை மத்திய அரசு கேட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டத்தை தெரிந்தெடுத்து அனைத்து விவசாயிகளுக்கும், அனைத்து இடையூறுகளுக்கும், அனைத்து பயிர்களுக்கும் அதற்குரிய பிரிமிய கட்டணம் (actuarial) வசூலித்து செயல்படுத்தப்படும்.

தற்போது தமிழ்நாட்டில் புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை செயல்படுத்த திருச்சி மாவட்டம் தேர்வு செய்யப் பட்டு அதற்கான விவரங்கள் பொது காப்பீட்டுக் கழகத்திற்கு அனுப்புவதற்காக சேகரிக்கப்பட்டு வருகின்றன,

41—

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விவசாயக்கடன் ரத்து செய்தல்.

வினா எண் 17231—டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பெற்ற விவசாயக் கடன்களை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் :

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் முதல் தடவை பயிர் பாதிக்கப்பட்டு, விளைச்சலின் அளவு குறித்த அணாவாரி சான்றிதழ் வழங்கப்பட்டு, நிலவரியும் ரத்து செய்யப்பட்டால், பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகியகாலக் கடன்கள் மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தும்படியான நடுத்தர கால மாற்றுக் கடன்களாக (M. T. C.) மாற்றப் பட்டு விவசாயிகளுக்கு அடுத்த பயிர்க் கடன் உடன் வழங்கப் படுகிறது. இயற்கையின் சீற்றத்தால் இரண்டாவது முறையும் பயிர் பாதிப்பு ஏற்பட்டால், மாற்றுக் கடன் தவணையும் புதிய குறுகிய காலக் கடனையும் ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத் தும் நடுத்தரகால மாற்றுவசதிக் கடனாக மாற்றப்படுகிறது.

சென்ற ஆண்டு நவம்பரில் புயல் வெள்ளம் இருந்தபோதிலும் கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நவம்பர் 1992-ல் வீசிய புயல் காற்றால், 71 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்த 226

1993 அக்டோபர் 29]

உறுப்பினர்களுக்கு ரூ. 25.55 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) அளவுக்கு மாற்றுக் கடன் வசதி தேவைப்படும் என கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கி தெரிவித்தது. பிறகு மேலே கூறிய 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 10 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அணாவாரி சான்றிதழ் பெறும் அளவுக்கு பயிர் பாதிப்பு இல்லை என்று தெரிவித்தது. மீதியுள்ள ஒரு (திட்டுவிளை) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் 5 உறுப்பினர்களின் 47,910 ரூபாய் குறுகிய காலக் கடன் மட்டுமே நடுத்தர காலக் கடனாக மாற்ற தகுதி பெற்றவர்களுக்குரிய முன்மொழிவு வந்துள்ளது. தேசிய வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த குறுகிய காலக் கடன் நடுத்தர காலக் கடனாக மாற்றப்படும். ஆகவே, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு வழியுள்ளதே தவிர கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்ய விதிகளில் இடமில்லை.

42—

நகைக்கடன் நபருக்கு ரூ.50 ஆயிரம் வழங்குதல்.

வினா எண் 19203—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் கிராமத்தில் அஞ்சூரில் கூட்டுறவுச் சங்கம் மூலம் மக்களுக்கு நகைக்கடன் நபருக்கு ரூ. 50 ஆயிரமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வங்கிகள் மூலமாக நகை அடமானத்தின்பேரில் அதிகபட்சமாக, ஒரு நபருக்கு ரூ. 25,000 கடன் வழங்கப்படுகிறது. ஒரு சவரனுக்கு அதிகபட்சமாக கடன் ரூ. 2,200 ஆகும். மேற்படி வழிமுறை எல்லாக் கூட்டுறவு வங்கிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் மொடக்குறிச்சி சட்டமன்றப் பேரவைத் தொகுதி, கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அஞ்சூரில் கூட்டுறவுச் சங்கம் மூலம் நகைக் கடனாக நபர் ஒன்றுக்கு ரூ. 50,000 வழங்க இயலாது.

43—

வாட்டாத்திக்கோட்டை ஆதிதிராவிடர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 13398—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கானும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த தொக்கன் தெரு ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். சொக்கன் தெருவானது வாட்டாத்திக்கோட்டை பஞ்சாயத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு கொல்லக்காடு குடிநீர்த்திட்டத்திலிருந்து ஒரு பொதுமேடைக் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. அது பற்றாக்குறையாக உள்ளதால் 1992-93-ம் ஆண்டில் ஒரு புதிய மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது.

44—

பழைய முதல் சேரியில் ஆதிதிராவிடர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 13399—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல் சேரியில் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. பழைய முதல் சேரியில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அரிஜன காலனிக்கும் குழாய்கள் பதிக்கப்பட்டு சுமார் 30 அரிஜனங்கள் வாழும்

காலனிக்குப் பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானது. எனவே, இக்குடியிருப்புக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

45—

கோட்டைக்காடு ஆதிதிராவிட மக்களுக்கு மேல்நிலைத்தொட்டி கட்டுதல்.

வினா எண் 13404—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவுக்கு 1992-93-ல் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. மேலும் எல்.ஐ.சி. மூலம் ஒரு மின் விசைத் திட்டம் கட்டும் பணிகள் நடப்பில் உள்ளது.

46—

சோழகளார் வயல் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல்.

வினா எண் 13405—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோழகளார் வயலில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஊராட்சி சோழகளார்வயல் கிராமத்தில் ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது.

47—

பனஞ்சேரியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 13499—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன் காடு ஊராட்சி-பனஞ்சேரியில் 1992-93-ல் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. பனஞ்சேரி கிராமமானது வலப்பிரமன்காடு ஊராட்சியில் பேராவூரணி ஒன்றியத்தை சேர்ந்தது ஆகும். இக்கிராமத்தின் மக்கட் தொகை 1990-ல் வாரியக் கணக்குப் படி 410 ஆகும். பனஞ்சேரி கிராமத்திற்கு ஒரு கையிறைப் பான் திட்டம் பயனில் உள்ளது.

48—

ஆண்டாகோட்டையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 13411—திரு. ஆர். சிங்கராம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஆண்டா கோட்டை வடக்கில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

1993 அக்டோபர் 29]

49—

இடையாத்தி (கிழக்கு) ஆதி திராவிடர்களுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் 13414—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் **வினாவுக்கு** **விடை**யளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கிழக்கு) ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

50—

பள்ளத்தூர் வடக்குத் தெருவில் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13415—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் **வினாவுக்கு** **விடை**யளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் வடக்குத் தெருவில் 1992-93ல் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

51—

கருப்பட்டித் தெருவில் மேல் நிலைத் தொட்டி மற்றும் ஆழ் குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 13418—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி, கருப்பட்டி தெருவிற்கு 1992-93-ல் ஆழ் குழாய்க் கிணறு போட்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. கருப்பட்டி தெரு, பாதரங்கோட்டை வடக்கை சேர்ந்த ஒரு பகுதி ஆகும். இங்கு 1981-82-ல் ஒரு ஆழ் துளைக் கிணறு அமைக்கப்பட்டு அது தற்போது பழுதடைந்து விட்டதால் ஒரு ஆழ்துளைக் கிணறு வரும் நிதியாண்டில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

கோரவயல்காடு கிராமத்தில் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்தல்:

வினா எண் 13425—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, கோரவயல்காடு கிராமத்தில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. கோரவயல்காடு கிராமமானது ஒட்டங்காடு பஞ்சாயத்தில் பேராவூரணி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இங்கு 1991-92-ம் நிதியாண்டில் ஒரு மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்

1993 அக்டோபர் 29]

தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தற்போழுதுதான் பகிர்மானக் குழாய்கள் வரப்பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விரைவில் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு விடும். எனவே, மேலும் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

53—

வா. கொல்லைக்காடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுது பார்த்தல்.

வினா எண் 13439—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வா. கொல்லக்காடு பழுதுபட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை 1992–93-ல் பழுது பார்த்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். கொல்லைக்காடு கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு இதற்காக போடப்பட்ட போர் வெல் ஊற்று பற்றாக்குறையில் திட்டம் இயங்காமல் இருந்தது. 1992-93ல் இயங்காத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் அடிப்படையில் ஒரு புதிய போர்வெல் போடப்பட்டு திட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

54—

இடையாத்தி விவசாயிகளுக்கு சமுதாயக் களங்கள் அமைத்தல்.

வினா எண் 13778—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, இடையாத்தி ஊராட்சி விவசாய மக்களுக்கு நெல் அறுவடை காலங்களில் நான்கு சமுதாயக் களங்கள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது இல்லை.

55—

மட்டம்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடு கட்டுதல்

வினா எண் 13789—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு யளிப்பாரா —

(அ) சங்ககிரி தேவண்ணக்கவுண்டனூர் பஞ்சாயத்து, மட்டம்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

56—

MAINTENANCE OF MADRAS CORPORATION PLAYGROUNDS

Question No, 13828—Thiru M. Sundara Doss: Will the Hon'ble the Miniter for Local Administration be pleased to state—

(a) Total number of playgrounds belonging to the Madras Corporation as on date—division—wise; and

(b) the steps taken to maintain them?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சியால் 79 விளையாட்டுத் திடல்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 150 இலட்சம் செலவில் விளையாட்டுத் திடல்கள் பராமரிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் மதிற்சுவர் கட்டுதல், ஒப்பனை அறை அமைத்தல், மின் விளக்குடன் கூடிய நவீன கூடைப்பந்து களம், பார்வையாளர் மாடம், பளு தூக்கும் பயிற்சி மேடை மற்றும் திடல்கள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

CORPORATION PLAY GROUNDS FOR GIRLS.

57—

Question No. 13929—Thiru M. Sundara Doss: Will the Hon'ble the Minister for Local Administration be pleased to state—

(a) Whether the Madras Corporation has been maintaining any separate playground for woman in Madras other than Corporation Girls School Playground and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சி தனியாக பெண்களுக்கான எந்த ஒரு விளையாட்டுத் திடலையும் பராமரிக்கவில்லை. ஆனால் பொதுவாக எல்லா விளையாட்டுத்திடல்களிலும் ஆடவர் தவிர பெண்கள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்காகவே விளையாட்டுக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றை அனைவரும் பயன்படுத்த வசதிகள் உள்ளன.

(ஆ) ஆடவர்கள் விளையாட கால்பந்து, கைப் பந்து, கூடைப் பந்து, போன்றவைகளும், மகருளிர்கு பூப்பந்து, கூடைப்பந்து, டெனிகாயிட் மற்றும் கயிறு தாண்டுதல்)ஸ்கிப்பிங்)

போன்றவைகளும் மற்றும் குழந்தைகளுக்கு ஊஞ்சல் ஜங்கில் ஜிம், சீசா, ஏணி மற்றும் சறுக்குப்பலகை போன்றவை பொருத்தப்பட்டுள்ளன.

58—

கழுக்காணி முட்டம் கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைக்கும் திட்டம்

வினா எண் 16760—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி கழுக்காணி முட்டம் கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

138—

ஆதிதிராவிடர் கூட்டு குடியிருப்பு கட்டும் திட்டம்

வினா எண். 16778—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி 44, வள்ளாலகரம் ஊராட்சியில் இந்த நிதியாண்டில் ஆதிதிராவிட கூட்டு குடியிருப்பு கட்டி கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

139—

மயிலாடுதுறையில் ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 16799—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதியில் 62-ம் நெடுந்திடல் பகுதியில் ஆதிதிராவிட கூட்டு குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1993 அக்டோபர் 29]

140—

பரமக்குடியில் கட்டப்பட்ட கழிப்பிடங்களின் எண்ணிக்கை

வினா எண் 16825—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் 1989-90-ஆம் ஆண்டில் இருந்து நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடங்கள் எத்தனை?

(ஆ) இத்திட்டத்திற்கான மானியம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ); பரமக்குடியில் 1989-90ஆம் ஆண்டில் இருந்து நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படவில்லை. இத்திட்டத்தின்கீழ் சூரமங்கலத்தில் ரூபாய் 3,840.00 செலவில் ஒரு கழிப்பிடமும், அருப்புக் கோட்டையில் ரூபாய் 1,23,964.35 செலவில் இரு கழிப்பிடங்களும் பெரியகுளத்தில் ரூபாய் 65,000 செலவில் ஒரு கழிப்பிடமும் ஆக மொத்தம் ரூபாய் 1,92,804.35 செலவில் நான்கு கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

141—

பரமக்குடியில் கழிவு உரங்களில் வரும் வருவாய்

வினா எண் 16832—டாக்டர் எஸ். சுந்ததரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்றை அமைச்சர் கீழ்க்ககாணும் வினாக்களுக்கு களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் 1990-91, 1991-92-ஆம் ஆண்டுகளில் கழிவுகளால் ஏற்படும் கம்போஸ்ட்டினால் (Compost) நகராட்சிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) கம்போஸ்ட் சேகரிக்க நகரின் வெளிப்புறத்தில் நிலம் கையகப்படுத்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி, எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சில் 1990-91-ஆம் ஆண்டில் 430 டன்களும், 1991-92 ஆம் ஆண்டில் 1331 டன்களும் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. மேற்படி ஆண்டுகளில் இப்பகுதியில் வறட்சியின் காரணமாக வேளாண்மைப் பணிகள் வழக்கம்போல் நடக்காமையால் கம்போஸ்ட் உரம் வாங்க வேளாண்குடி மக்கள் முன்வரவில்லை. ஏலம் மூலம் விற்பனை செய்ய தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

142—

நெடுஞ்சேரி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்கும் திட்டம்

வினா எண் 17080—டாக்டர் க. கோபால்:—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி—உபயவேதாந்தபுரம் பஞ்சாயத்து நெடுஞ்சேரி கிராமத்திற்கு ஒரு சமுதாயக்கூடம் அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1993 அக்டோபர் 29]

143—

அண்டூரில் நீர்மேலேற்று இயந்திர அறை வசதி செய்தல்

வினா எண் 17375—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவட்டார் தொகுதியில் அய்யக்கோடு ஊராட்சி அண்டூர் குடிநீர் திட்டத்திற்கு நீர்தேக்க தொட்டிக்கு நீர் மேலேற்று இயந்திர அறை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவட்டார் தொகுதியில், அய்யக்கோடு ஊராட்சிக்குட்பட்ட அண்டூர் குடிநீர் இயந்திர அறை கட்டும் பணி தவிர அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இக்குடிநீர் திட்டத்தில் நீர் மேலேற்றும் இயந்திர அறை அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. வேலை முடிவடையும் தருவாயில் பம்பு ரூம் (Pump Room) கட்டப்பட்டுள்ள தளம் தனக்கு உரிமைப்பட்டது என பக்கத்து நிலச் சொந்தக்காரர் சொந்தம் கொண்டாடி பத்மநாபபுரம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. மறுபடியும் அவர் சென்னை நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து தற்காலிக தடையுத்தரவு கோர்ட்டிலிருந்து பெற்றுள்ளார். வழக்கு முடிந்தவுடன் அண்டூர் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

144—

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம்

வினா எண் 17482—டாக்டர் மு. அம்ம முத்துபிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு புதிதாக வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

145—

நாகர்கோவிலில் நகராட்சி நூலகத்தை பொது நூலகமாக மாற்றும் திட்டம்

வினா எண் 17487—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான நகர் பூங்கா நூலகத்தை (Park Library) பொது நூலகத் துறையின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் நகராட்சி பூங்காவில் உள்ள நூலகம் முந்தைய கொச்சி அரசினரால் நாகர்கோவில் நகராட்சிக்கு வழங்கப்பட்டதாகும். இது கடந்த 50 ஆண்டுகளாக நல்ல முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நூலகத்தில் 6,312 நூல்கள் உள்ளன. அவை நூலக உறுப்பினர்களுக்கு படிக்க எடுத்துச் செல்ல வழங்கப்படுகின்றன. இது தவிர, தினசரி பத்திரிகைகள் மற்றும் அனைத்து வாராந்திர, மாதாந்திர சஞ்சிகைகளும் இந்நூலகத்திற்கு வாங்கப்படுகின்றன. இதற்காக நகராட்சி ஒரு வருடத்திற்கு ரூபாய் 41,000 செலவு செய்கிறது. நகராட்சி நூலகம் தவிர இந்நகரில் பொது நூலகத் துறையினரால் ஒரு நூலகம் நடத்தப்

பட்டு வருகிறது. எனவே நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பூங்கா நூலகத்தை பொது நூலகத் துறையின் கீழ் கொண்டு வர திட்டம் இல்லை.

146—

பூம்புகார் தொகுதியில் ஆதிதிராவிடர் மயானத்திற்கு சாலை வசதி ஏற்படுத்தல்

வினா எண் 16867—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஆதிதிராவிட மயானங்கள் சிலவற்றிற்கு சாலை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா நிலங்களை கையகப்படுத்தி சாலை வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பூம்புகார் தொகுதியைச் சேர்ந்த கீழ்க்குறித்த கிராமங்களில் ஆதிதிராவிடர் மயானங்களுக்குப் பாதை வசதி தேவைப்படுகிறது. இது தொடர்பாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை விவரம் பின்வருமாறு:—

1. 81, கீழையூர் கிராமம்	..	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டது. தீர்ப்பாணை எண். 5/92-93, நாள் 17.12.1992.
2 79, எ. திருவெங்காடு கிராமம்	..	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டது. தீர்ப்பாணை எண் 3/92-93, நாள் 10.12.1992.

3	83 வானகிரி ...	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
4	82, மேலையூர்	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
5,	91, திருச்சம்பள்ளி ...	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
6.	70, நத்தம் ...	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
7.	வேப்பஞ்சேரி ...	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
8.	33, மாணிக்கப்பங்கு ...	மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. தீர்ப்பாணை எண் 1-92-93, நாள் 10-12-92.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

147—

குடியுரிமைப் பாதுகாப்பு சட்டப்படி பதிவாகியுள்ள வழக்குகளின் விவரம்.

வினா எண் 20131—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் குடியுரிமை பாதுகாப்பு சட்டப்படி எத்தனை வழக்குகள் பதிவாகி உள்ளன ?

(ஆ) எத்தனை பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர் ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் (1988–92) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி 4,155 வழக்குகள் பதிவாகி உள்ளன.

(ஆ) 195 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

148—

தமிழ்நாட்டில் உள்ள மலையாளி, லம்பாடி ஆகிய இனத்தினரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 21449—திரு. வெ. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மலையாளி, லம்பாடி ஆகிய இனத்தினரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்க மைய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்ததின் மீது மைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

லம்பாடி மற்றும் சத்தியமங்கலத்திலுள்ள மலையாளி இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக மைய அரசுக்கு தமிழக அரசு செய்த பரிந்துரை மீது மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

149—

வால்பாறை மலைப்பகுதிக்கும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமிடுதல்.

வினா எண் 313—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரிய மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறை மலைப் பகுதிக்கும் கொண்டுவர வாய்ப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வால்பாறை பகுதியைச் சுற்றுலா மைய மாக ஆக்க அரசு முயற்சி செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

150—

பெரிய தொட்டிப் பாலத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

வினா எண் 432—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட அருவிக் கரையிலுள்ள பெரிய தொட்டிப்பாலத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

மாவட்ட ற்சுறுலாத்தலத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டாறு தொகுதிக்கு உட்பட்ட அருவிக் கரையிலுள்ள பெரிய தொட்டிப் பாலம் மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

151—

திருச்செந்தூரரை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

வினா எண் 1322—திரு. ஆ. செல்லத்துரை : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூருக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதால் திருச்செந்தூரரைச் சுற்றுலா மையம் ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

திருச்செந்தூர் ஏற்கனவே தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக விளங்குவதால் இவ்வினாவிற்கு இடமில்லை.

152—

இராமேஸ்வரத்தில் ஒலி. ஒளிக் காட்சி அமைத்தல்

வினா எண் 2231—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசுக்கு பரிந்துரைகள் எதுவும் வரவில்லை.

(ஆ) பரிந்துரைகள் எதுவும் பெறப்படாததால் இவ்விவரம் பற்றிய கேள்விக்கு பதில் எழவில்லை.

153—

பூம்புகாரை அழகு படுத்தும் திட்டம்

வினா எண் 3303—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா மையமாக பூம்புகாரை விரிவுபடுத்தும் திட்டமும், அழகுபடுத்தும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) சுற்றுலா மையமான பூம்புகாரை விரிவுபடுத்தவும், அழகுபடுத்தவும் புதிய திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

154—

திருமூர்த்தி நகரில் சுற்றுலாக் கழகம் மூலம் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 4653—திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகே திருமூர்த்தி நகரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதி கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு ஆகும் திட்டச்செலவு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) தற்போது இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

155—

கல்லணையில் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 4969—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

கல்லணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி அங்கு தங்கும் விடுதியும் உணவகமும் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

இல்லை.

156—

கயத்தாறு, திருமலை நாயக்கர் மகால் மற்றும் சரஸ்வதி மஹாலில், ஒலி, ஒளிக் காட்சி அமைத்தல்

வினா எண் 5594—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கயத்தாறு, மதுரை திருமலை நாயக்கர் மகால், தஞ்சை சரஸ்வதி மகால் போன்ற இடங்களில் அவற்றின் வரலாற்றுச் சிறப்பினை விளக்கும் வகையில், ஒலி, ஒளிக் காட்சி நடத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வரலாற்றுச் சிறப்பினை விளக்கும் வகையில் ஒலி, ஒளிக் காட்சி, தமிழக அரசு, சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் கயத்தாறு, தஞ்சை சரஸ்வதி மகால் போன்ற இடங்களில் ஒலி, ஒளிக் காட்சி நடத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1993 அக்டோபர் 29

157—

குரங்கு நீர் வீழ்ச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

வினா எண் 11863— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள குரங்கு நீர்வீழ்ச்சி (Monkey Falls)-யை காணவரும் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக எவ்வளவு ?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) வால்பாறையிலுள்ள குரங்கு நீர்வீழ்ச்சி (Monkey Falls) யைக் காண சுமார் 43,789 சுற்றுலாப் பயணிகள் ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக வருகை புரிகின்றனர்.

(ஆ) இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,11,500 வருமானம் கிடைக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருபத்தி நான்காம் பட்டியல்

1—

தமிழகத்தில் தனி நபர் வருமானம்.

வினா எண் 16667—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது தனி நபர் வருமானம் எவ்வளவு ?

(ஆ) தனி நபர் வருமானத்தை உயர்த்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) தமிழகத்தின் தனி நபர் ஆண்டு வருமானம் 1990-91 ஆம் ஆண்டு வரை கணக்கிடப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டுக்கு தனி நபரின் வருமானம் நடப்பு விலையில் (at current prices) ரூ. 4,428 எனவும், 1980-81-ஆம் ஆண்டு விலையை அடிப்படையாகக் கொண்ட நிலையான விலையில் (at constant prices) ரூ. 1,965 எனவும் கணக்கிடப் பட்டுள்ளது.

(ஆ) தமிழக மக்களின் தனி நபர் வருமானத்தை உயர்த்தி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டி குறிப்பாக வேலை வாய்ப்பு களை அதிகப்படுத்தும் இனங்களான விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், நீர்ப்பாசனம், தொழில்கள், மின் உற்பத்தி ஆகிய இனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றி வருகிறது.

2—

ஓமவயல் பாலச்சேரிக் காட்டில் அமுத அங்காடி.

வினா எண் 7331— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் ஓமவயல் பாலச்சேரிகாட்டில் ஒரு நிரந்தர கிராம அமுத அங்காடி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம் ஓமவயல் பாலச்சேரிகாட்டில் கங்காதரபுரம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் கரம்பக்காடு கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடையில் இருந்து 346 குடும்ப அட்டைகளை பிரித்து நிரந்தர பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க 13-7-1993-ல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது.

3—

எலச்சிபாளையம் — உற்சனையில் நியாய விலைக் கடை

வினா எண் 16446—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எலச்சிபாளையம் ஒன்றியம், உற்சனையில் ஒரு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எலச்சிபாளையம் ஒன்றியம் உற்சனையில், உற்சனை மேட்டுப்பாளையம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் 281 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 19–7–1993 முதல் செயல்பட்டு வருகிறது.

4—

பகைவென்றி கிராமத்தில் பகுதி நேரக் கடை.

வினா எண் 17158—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் வல்லம் கிராம நியாய விலைக் கடையின் மூலம் பகைவென்றி கிராமத்திற்கு வாரத்திற்கு இரு முறை பகுதி நேரக் கடைகள் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பகைவென்றிக் கிராமத்தில் 320 குடும்ப அட்டைதாரர்கள் தற்போது 3 கிலோமீட்டர் தூரத்திற்கப்பாலுள்ள வல்லம் தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கியினால் நடத்தப்படும்

1993 அக்டோபர் 29]

நியாய விலைக் கடையில் பொருள் பெற்று வருகின்றனர். இவர்களின் நன்மையினைக் கருத்திற்கொண்டு பகைவென்றிக் கிராமத்தில் 320 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட்டுறவுச்சங்க பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் வல்லம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால், வல்லம் கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு நியாய விலைக் கடையை பிரித்து மேற்படி தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கியால், பகைவென்றி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்படும்.

5—

நாச்சியார்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையக் கிளை

வினா எண் 659—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையக்கிளை அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

இல்லை.

6—

ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவமனைகள்

வினா எண் 1616—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

7—

மாவட்ட மருத்துவமனைகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளி.

வினா எண் 1235—டாக்டர் மு. சின்னியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னையில் இரண்டு மருத்துவக் கல்லூரிகளிலும் மற்றும் சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய ஐந்து மருத்துவக் கல்லூரிகளிலும் திருச்சி மாவட்ட தலைமையிட மருத்துவமனையிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் நடைபெறுகின்றன. மேலும் நாகப்பட்டிணம், தூத்துக்குடி, தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க 8—3—1993 நாளிட்ட அரசாணை எண் 293-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

8—

பித்த வெடிப்பு நோய்க்கு மருந்து.

வினா எண் 3277—திரு, மா. சுந்தரதாஸ் : Will the Hon'ble Health Minister be pleased to State—

(a) Whether the Tamil Nadu Dadha Pharmaceuticals Drug Manufacturing Unit is manufacturing any drug for the cuts in the leg toes like 'Pitha Vedi'?

(b) The details thereof ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் லிமிடெட், சென்னை, காலில் ஏற்படும் பித்த வெடி வெடிப்பு களுக்கு எந்த மருந்தையும் தயாரிப்பதில்லை. இருந்தபோதிலும் மேற்படி நிறுவனம் ஒயிட் பீல்டு ஆயின்ட்மெண்ட் என்ற மருந்து தயார் செய்கிறார்கள். அம்மருந்தை பித்த வெடிப்பு போன்ற வற்றிற்கு உபயோகப்படுத்தலாம்.

9—

நேமம் கிராமம் ஆண்டிரசன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம்

வினா எண் 5190—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, நேமம் கிராமம் ஆண்டிரசன் பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) நேமம் கிராமம், ஆண்டிரசன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட 3.70 ஏக்கர் புறம் போக்கு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு மருத்துவத் துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவத் துறைக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப இனி வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

[1993 அக்டோபர் 29

10—

தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள்.

வினா எண் 5496—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எத்தனை ? மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றில் கல்லூரி எனத்துவங்கிய பின்னரும் இன்னமும் சொந்தக் கட்டிடம் மற்றும் மருத்துவமனை இன்றி செயல்படுபவை உள்ளனவா ?

(இ) அந்த வசதிகளை ஏற்படுத்த காலக்கெடு ஏதேனும் அரசு விதித்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) நான்கு.

தனியார் மருத்துவக்கல்லூரியின் பெயர்.	மாணவர் எண்ணிக்கை.
(1)	(2)
1. கிருத்துவ மருத்துவக்கல்லூரி, வேலூர். ..	60
2. பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் நிலையம், கோயம்புத்தூர்.	100
3. ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, அண்ணாமலைநகர்.	131
4. இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி, போரூர் ..	100

(ஆ) இல்லை.

(இ) இவ்வினா எழஇடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

11—

பொது ஒதுக்கீட்டில் (Open Competition) முற்பட்டவர், பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோரின் சதவீதம்.

வினா எண் 6076ஏ—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவக் கல்லூரிகளில் Open Competition -ல் இடம் பெற்ற மாணவர்களில், Forward Community யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம் Backward Community யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை சதவீதம்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1991–92 மற்றும் 1992–93-ம் ஆண்டுகளில் Open Competition-ல் இடம் பெற்ற மாணவர்களில் Forward Community Backward Community மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் பின்வருமாறு :—

	1991–92	1992–93
Forward Community	11.49%	5.96%
Backward Community	16.72%	22.78%
Scheduled Cast	0.21%	..

12—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயர் மாற்றம்.

வினா எண் 1324—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயரை எம். ஜி. ஆர். போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெயரை மாற்றி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1993 அக்டோபர் 29

13—

மறைமலைநகர் இரயில்வே நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயர்.

வினா எண். 7555—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைமலைநகர் இரயில்வே ஸ்டேஷனுக்கு பெருந்தலைவர் காமராஜ் பெயர் வைக்க மைய அரசுக்கு பரிந்துரை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மறைமலை நகர் இரயில்வே நிலையத்தை ''மறைமலை நகர்—காமராசர் ரயில் நிலையம்'' என மாற்றம் செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து 31—1—1993 ஆம் நாள் கடிதம் எழுதியுள்ளது.

14—

கொள்ளிடத்திலிருந்து அளக்குடிக்கு புதிய மினி பஸ்.

வினா எண் 8453—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலிருந்து பின்படுகை வழியாக அளக்குடிக்கு மினி பஸ் புதியதாய் செயல்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் இருந்து பின்படுகை வழியாக அளக்குடிக்கு சோழன் போக்குவரத்துக் கழக மினி பஸ் புதியதாய் இயக்கும் செயற் குறிப்பு இல்லை.

1993 அக்டோபர் 29]

15—

தென்காசியிலிருந்து திருச்செந்தூருக்கு பேருந்து.

வினா எண் 8507—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென் காசியிலிருந்து திருச்செந்தூருக்கு கீழ்பாவூர் வழியாக பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

கீழப்பாவூர் என்ற ஊர் தென்காசி திருநெல்வேலி பிரதான சாலையில் அமைந்துள்ள பாவூர் சத்திரத்திலிருந்து பிரிந்து சுரண்டை செல்லும் சாலையில் 2.8 கி.மீ. தூரத்தில் அமைந்து உள்ளது. ஆகவே, தென்காசியிலிருந்து கீழப்பாவூர் வழியாக திருச்செந்தூருக்கு பேருந்து இயக்குவது என்பது சுற்று வழித் தடமாகும். தவிர, பாவூர் சத்திரம் வழியாக கீழப்பாவூருக்கு தினசரி 15 பேருந்துகள் மூலம் 120-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்துகளை பயன் படுத்தி பிரதான சாலையில் உள்ள பாவூர் சத்திரம் வந்துவிட் டால் தென்காசி அல்லது திருச்செந்தூர் செல்வதற்கு ஏராள மான பேருந்து வசதிகள் உள்ளதால் சுற்று வழித் தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

செங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு பேருந்து.

வினா எண் 8508—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், செங் கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு கீழப்பாவூர் வழியாக பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு கீழப்பாவூர் வழியாக பேருந்து விடும் செயற் குறிப்பு தற்போது இல்லை.

17—

சங்கரன் கோவிலிலிருந்து ஆலங்குளத்திற்கு புதிய பேருந்து.

வினா எண் 8708—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவிலிலிருந்து வீராணம் வழியாக ஆலங்குளத்திற்கு புதிய பேருந்து ஒன்று விடுவதற்கு அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

வீராணம், ஆலங்குளம் முழு தடத்தில் 2 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்துகள் 8 சுற்றுக்களும், 4 தனியார் புறநகர் பேருந்துகள் 17 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இப் பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் ஆய்வு செய்யப்பட்டதில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியமில்லை. மேற்குறிப்பிட்ட 6 பேருந்துகள் நீங்கலாக சங்கரன்கோவில், ஊத்துமலை, ஆலங்குளம், வீராணம், சோலைச்சேரி ஆகிய இவ் வழித் தடங்களில் தனியாக 5 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

18—

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை.

வினா எண் 9234—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான மொத்த பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவற்றில் புதிய பேருந்துகள் எத்தனை?

(இ) 1989–90–ம் ஆண்டின் வருமானம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்துகள் எண்ணிக்கை 225.

(ஆ) அவற்றில் 24 பேருந்துகள் புதியனவாகும்.

(இ) 1989–90 ஆம் ஆண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் வருமானம் ரூ. 3,824.12 இலட்சங்கள் ஆகும்.

19—

பேராவூரணி சோழன் பணிமனையில் பழுதடைந்துள்ள நகரப் பேருந்துகள்.

வினா எண் 8974—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி சோழன் டெப்போவில் இயங்கிக் கொண்டிருக்கும் 13 நகரப் பேருந்துகளும் பழுதுபட்ட நிலையில் உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளை மாற்றியமைகக அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) பேராவூரணி கிளையில் இயங்கும் நகரப் பேருந்துகள் நான்கு வருடங்களுக்கு மேலாக தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது பெரும் பழுதுகள் வண்டிகளில் ஏற்பட்டால் அவை நீக்கப்பட்டு தடத்தில் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கழகத்தின் நிதி நிலைக்கு ஏற்றவாறு வரும் நிதி ஆண்டுகளிலிருந்து படிப்படியாகப் புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் படுக்கை வசதி

வினா எண் 9439—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்துகளில் படுக்கை வசதிகள் கொண்ட இரவு நேர விரைவு பேருந்து விடப்படுமா?

(ஆ) எப்போது இருந்து விடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டின் எந்த வழித் தடத்திலும் படுக்கை வசதிகள் கொண்ட இரவு நேர விரைவுப் பேருந்து விடும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

21—

கிராமங்களில் ''சுய வேலை'' அடிப்படையின்கீழ் மாட்டுப் பண்ணைகள்.

வினா எண் 14416—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியைப் பெருக்க கிராமங்களிலுள்ள 8—வது வகுப்பிற்கு மேல் 10—வது வகுப்பு வரை படித்தவர்கள் சுய வேலை வாய்ப்பு முறையில் மாட்டுப் பண்ணை வைக்க அரசு கடன் குறைந்த வட்டியில் மான்யத்துடன் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜெனார்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

பால் உற்பத்தியைப் பெருக்கக் கிராமங்களிலுள்ள 8—வது வகுப்பிற்கு மேல் 10—வது வகுப்பு வரை படித்தவர்கள் சுயவேலை வாய்ப்பு முறையில் மாட்டுப் பண்ணை வைக்க அரசு கடன் குறைந்த வட்டியில் மான்யத்துடன் வழங்க அரசிடம் செயற் குறிப்பேதும் இல்லை. மேற்படி நபர்கள் தேசீய மயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று மாட்டுப் பண்ணை வைக்கலாம்.

22—

பன்றி வளர்ப்புப் பண்ணைகள்.

வினா எண் 14619—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பன்றி வளர்ப்பில் அதிக இலாபம் இருப்பதால் அரசே பன்றி வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

தமிழகத்தில் சென்னை, புதுக்கோட்டை மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் கால்நடைப் பராமரிப்புத் துறை கட்டுப் பாட்டின் கீழ் பன்றி வளர்ப்புப் பண்ணைகள் செயல் பட்டு வருகின்றன.

மேற்கண்ட பண்ணைகள் வணிக ரீதியில் செயல்படுவது கிடையாது. போர்ஸ், சௌஸ், கிப்ட்ஸ் ஆகிய இன பன்றிகள், விவசாயிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட இனவிருத்திக்காக விற்கப் படுகின்றன. அரசு பன்றி வளர்ப்புப் பிரிவில், யார்க்சயர் என்கிற பெரிய வெள்ளை இனப்பன்றிகள் இனவிருத்தி செய்யப்படுகிறது.

அரசுப் பண்ணைகளில் பனறிகளை பேணி வளர்ப்பதன் மூலம், விவசாயிகளுக்கு உதவுவதே அரசின் நோக்கமாகும். வணிக ரீதியாக அரசுப் பண்ணைகளில் பன்றி வளர்க்கும் திட்டம் எதுவும் அரசிடமில்லை.

23—

தஞ்சை மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் சங்கங்கள்.

வினா எண் 14684—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை ஆடு வளர்ப்போர் சங்கங்கள் உள்ளன?

(ஆ) கடந்த 1991–92 ஆம் ஆண்டு எத்தனை சங்கங்களுக்கு கடன் வசதி கொடுக்கப்பட்டது.

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 131 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) கடந்த 1991–92 ஆம் ஆண்டு மேற்படி மாவட்டத்தில் 12 கூட்டுறவு சங்கங்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் வசதி அளித்தது.

24—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் உற்பதியாளர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண் 15698—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிருக்காக அமைக்கப்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அரசிடம் கடன் பெற்று மாடுகள் வாங்கியோர் தனியாரிடம் பால் விற்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிருக்காக 16 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) தனியாரிடம பால் விற்பனை செய்வதாகக் குறிப்பிட்டு, எந்தவித புகாரும் இதுகாறும் பெறப்படவில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

25—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் நிறுவ அரசு சலுகைகள்.

வினா எண் 21—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் பெரும் அளவில் இல்லாத குறைபாடு நீங்க புதிதாக தொழிற்சாலைகள் துவங்க முனைவோருக்கு உடனடி உரிமம் மின்கட்டண சலுகையுடன் மின் இணைப்பு அரசு மானியத்துடன் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி ஆகியவற்றை அளிக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள அனைத்து சலுகைகளும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் புதிதாக தொழில் துவங்குவோருக்கு கிடைக்க பெறும். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை மற்றும் அகத்தீஸ்வரம் வட்டங்கள் தொழிலில் பிற்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்த வட்டங்களில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு சில சிறப்பு சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன.

26—

வந்தவாசியில் தொழிற்சாலைகள் நிறுவுதல்.

வினா எண் 145—திரு. செ. கு. தமிழரசன் : "மாண்புமிகு தொழிலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில், புதிதாக தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) இதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. எனினும் புதிதாக தொழில்கள் தொடங்க தனி நபரோ அல்லது கூட்டு நபர்களோ ஆர்வமுடன் முன் வந்தால் அரசு அறிவித்துள்ள அனைத்து சலுகைகளும் வழங்கி மாவட்ட தொழில் மையம் அனைத்து உதவிகளையும் செய்யும்.

(ஆ) எழவில்லை.

27—

மோகனூர் சர்க்கரை ஆலையின்கீழ் பொறியியல் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 333—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலைப் பணத்தை மூலதனமாகக் கொண்டு பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மோகனூர் சர்க்கரை ஆலை மூலம் ஏற்கனவே ஒரு பாலிடெக்னிக் நிறுவப்பட்டுள்ளதால் பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

28—

திருப்போரூர் தொகுதியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 414—திரு. ம. தனபால் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

29—

அவினாசியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை.

வினா எண் 1232—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

30—

கன்னியாகுமரி மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கியது என அறிவித்தல்.

வினா எண் 1408—திரு. இரா. அப்புநடேசன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

இல்லை.

31—

மஞ்சக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு சத்துணவுக் கூடம்.

வினா எண் 16361—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், மஞ்சக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்

(ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டித்தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

32—

புவனகிரி—எம். ஜி. ஆர். திட்டு மீனவர் குழந்தைகளுக்கு சத்துணவு.

வினா எண் 16370—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, எம்.ஜி.ஆர். திட்டில் வாழும் மீனவரின் 100 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தேவையை உடனடியாக ஆய்வு செய்து அரசு ஆவன செய்யும்.

33—

ஆண்டிமடம்—இடையக்குறிச்சி சிலம்பூர் முதுகுளம் சாலையை சீரமைத்தல்.

வினா எண் 2946—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், இடையக் குறிச்சி சிலம்பூர் முதுகுளம் காட்டில் 1 கிலோ மீட்டர் தூரம் வேலை நடைபெறாமல் உள்ள சாலையை சீரமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை சீரமைக்க திருச்சி வன அலுவலரால 31–3–1993 வரை ஓராண்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அலுவலக நடைமுறை காரணமாக அனுமதி வழங்கப்பட்ட காலத்தில் வேலை துவக்கப்படவில்லை. தற்போது 31—3—1994 வரை மேலும் ஓராண்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

34—

தமிழ் ஆய்வில் உள்ளோருக்கு உதவித் தொகை.

வினா எண் 893—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆய்வினை நெறிப்படுத்தி குறைப்பதுடன், உதவித் தொகை இன்றி ஆய்வு செய்யும் அனைவருக்கும் பல்கலைக் கழக மானயக்குழு வழங்கும் உதவித் தொகையில் பாதியளவேனும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

35—

அஞ்சல்வழிக் கல்விக்கென்று தனி பல்கலைக் கழகம்.

வினா எண் 1414—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அஞ்சல் வழிக் கல்விக்கு தனியாக பல்கலைக் கழகம் அமைக்கப்படுமா ?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை அஞ்சல்வழிக் கல்வி நிலையங்கள் உள்ளன ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) ஏழு பல்கலைக் கழகங்கள் மூலம் தற்போது அஞ்சல் வழிக் கல்வி நடைபெற்று வருகிறது.

36—

தமிழக பல்கலைக் கழகங்களில் தேர்வுகள், முடிவுகளை வெளியிடுதலில் சீரமைப்பு.

வினா எண் 1951— திருமதி சே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேர்வுகளை நடத்துதல், தேர்வு முடிவுகளை வெளியிடுதல் போன்றவற்றில் பல்வேறு பல்கலைக் கழகங்களும் வெவ்வேறு கால அட்டவணையைப் பின்பற்றுவதால் மாணவர்கள் சிரமத்திற்கு உள்ளாவதைத் தடுக்க தமிழகத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ஒரே கால அட்டவணை பின்பற்றப் படுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இது குறித்துப் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மாநாட்டில் 21–12–1990 அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மே 15-க்குள் தேர்வுகளை முடிக்க வேண்டுமென்றும், ஜுன் 30-க்குள் முடிவுகளை வெளியிட வேண்டுமென்றும், ஜுலை 30-க்குள் மதிப்பெண் சான்றிதழ்களை அனுப்ப வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தில் உள்ள கால அட்டவணையை தவறாது பின்பற்ற வேண்டுமென்று அனைத்துப் பல்கலைக் கழக துணை வேந்தர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இந்த கால அட்டவணையை அநேகமாக எல்லாப் பல்கலைக் கழகங்களும் பின்பற்றுகின்றன. ஒரு சில பல்கலைக் கழகங்கள் இதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளது என தெரிவித்துள்ளன.

37—

அண்ணா மாவட்டத்தில அன்னை தெரசா மகளிர் பல்கலைக் சழகம்.

வினா எண் 2480—திரு. ச. சந்திரராஜன் மற்றும் திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை மீண்டும் அண்ணா மாவட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை கொடைக்கானலுக்கு மாற்றுவதற்கான ஆணைகள் 5-2-1993 அன்று வெளியிடப்பட்டுவிட்டன.

38—

கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி ஆகியவற்றில் பல்கலைக் கழக வேலைவாய்ப்பு/வழிகாட்டல் மையங்கள்.

வினா எண் 4387—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் உள்ளது போல, கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி போன்ற அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக் கழக தகவல் வேலை வாய்ப்பு/வழிகாட்டல் மையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இலலை.

1993 அக்டோபர் 29]

39—

ஆயக்காரன்புலத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தனியார் நிலம்.

வினா எண் 5750- திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க தனியார் ஒருவர் நிலம் வழங்குவதை ஏற்று, அங்கு அப்பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இவ்வூரில் பெண்களுக்கெனத் தனியாக உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லை. ஏற்செனவே, இருக்கும் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலும், நேரடியாக மேல்நிலைப் பள்ளி அமைக்க இயலாது.

40—

தோகைமலை உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 6142—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) 1991-92–ஆம் ஆண்டில் கருத்துரு ஆராயப்பட்டு இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

41—

போளூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஆங்கில பாடவழி.

வினா எண் 6204—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஆங்கில பாடவழி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இப்பள்ளியில் ஆங்கில வழி பாடம் ஏற்படுத்த தற்போது போதுமான இடவசதியும் தளவாட வசதியும் இல்லை. நிதி நிலைமைக்கேற்ப போதுமான இடவசதியும் தளவாட வசதியும் ஏற்படுத்திக் கொண்டு அதன்பின் மாணவிகளுக்கு தனியாக ஆங்கில மொழி பிரிவு வகுப்பு ஆரம்பிக்க பரிசீலிக்கப்படும்.

42—

கல்வியை மேம்படுத்த நிபுணர் குழு.

வினா எண் 7759—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வியை மேம்படுத்தவும், பல்வேறு குறைபாடுகளை நீக்கவும் நிபுணர் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) தனியார் பள்ளிகளின் தரம் சிறப்பானதாக அமைவது போல் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் தரமும் அமைய அரசு ஆய்வு செய்யமுன் வருமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்

(அ) மற்றும (ஆ) : கல்வித் தரத்தை மேம்படுத்தவும், தற்போதைய பல்வேறு குறைபாடுகளை நீக்குவது குறித்தும் அரசிற்கு பரிந்துரை செய்வது குறித்து ஓர் நிபுணர் குழு அமைப்பது அரசின் பரிசீலனையிலுள்ளது.

43—

பழைய ஆயக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண் 13856—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுககு விடையளிப்பாரா—

பழனி வட்டம், பழைய ஆயக்குடி டி.டி. 600 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பழைய ஆயக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1978–79–ல் அலுவலக வசதியுடன் கிடங்கு கட்டப்பட்டு இக்கட்டிடத்தில் உர மூட்டைகளும் கோதுமை மூட்டைகளும் தற்போது வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இட வசதியின்மை காரணமாக அலுவலகம் மட்டும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி வங்கிக்கு காலி மனை இல்லாததாலும், போதிய நிதி வசதி இல்லாததாலும். சங்கம் நட்டத்தில் இயங்கி வருவதாலும் தற்போது தனியாக அலுவலகத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்ட வாய்ப்பு

44—

சேது கூட்டுறவு அங்காடிப் பணியாளர்கள்

வினா எண் 15757—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேது கூட்டுறவு துறையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் ஆதிதிராவிடர் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) 18 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் (சேது கூட்டுறவு அங்காடி) பணியாற்றும் மொத்த பணியாளர்கள் 376.

(ஆ) இதில் ஆதிதிராவிடர் பணியாளர்கள் .. 43

(இ) இல்லை; 11 சதவீதம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

45—

பரமக்குடி துணைப் பதிவாளர் அலுவலக காலியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 15913—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி துணைப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள காலி இடங்களை நிரப்ப அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மண்டலத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பரமக்குடி கூட்டுறவுத் துணைப்பதிவாளர் அலுவலகத்திற்கு தேவையான 20 பதவிகளில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 507 நிலை எண்ணும், 27—12—1991 நாளிட்ட அரசாணையில் ஒரு துணைப் பதிவாளர் பதவியும் ஒரு ஜீப்பு ஓட்டுநர் பதவியும் ஒப்பளிக்கப்பட்டு, ஏனைய பதினெட்டுப் பதவிகள் பிற அலுவலகங்களிலிருந்து அவ்வலுவலகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் அரசு ஆணையிட்டது. அதன்படி 13 பதவிகள் பிற அலுவலகங்களிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இப்பதவிகளில் பணியாற்றும் பணியாளர்களின் பணியை சிறிது காலம் சீராய்ந்த பின்னர் தேவையெனில் எஞ்சிய பதவிகளை நிரப்புவது குறித்து முடிவெடுக்கப்படும்.

46—

நகராட்சிகளில் திரையரங்கு உரிமையாளர்கள் சொத்துவரி செலுத்துதலை முறைப்படுத்துதல்

வினா எண் 801—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளுக்கு திரையரங்கு அதிபர்கள் உரிய காலத்தில் சொத்துவரி செலுத்துவதை முறைப்படுத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைசசா:

நகராட்சிகளுக்குட்பட்ட திரையரங்கு உரிமையாளர்கள் நகராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியை உரிய காலத்தில் செலுத்த, திரையரங்குகளுக்கு உரிமம் புதுப்பிக்கும்

அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் உள்ளதால், திரையரங்கு உரிமையாளர்கள் உரிமம் புதுப்பிக்க விண்ணப்பிக்கும்போது தொடர்புடைய திரையரங்குகளுக்கு தாம் செலுத்த வேண்டிய சொத்துவரி முழுவதையும் சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு செலுத்தி விட்டதற்கான சான்றிதழை நகராட்சி ஆணையர்கள்/நிர்வாக அதிகாரிகளிடமிருந்து பெற்று அவர்கள் விண்ணப்பத்துடன் இணைத்து தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வலியுறுத்த வேண்டும் என்றும் அவ்வாறு சான்றிதழுடன் விண்ணப்பித்தால் மட்டுமே உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், குறிப்பிட்ட தேதிக்குள் சொத்துவரி செலுத்தாத திரையரங்குகளுக்கு சுகாதார வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் நிறுத்தப்படும் என்று அறிவிப்பு கொடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை தொடருமாறு நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுரை வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

47—

வால்பாறை நகரிய நியமன உறுப்பினர்களின் பதவிக்காலம்.

வினா எண் 818—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகரியத்தில் நியமன உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பதவி காலம் முடிந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், புதிய நியமன உறுப்பினர்கள் எப்போது அமர்த்தப்படுவார்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரியக்குழு தற்போது திருத்தியமைக்கப்பட்டு புதிதாக நியமன உறுப்பினர்கள் நியமனம் செய்ய 31—3—1993 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

48—

அந்தியூர் தொகுதி அத்தாணி ஓடை மேட்டு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 5099—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி அத்தாணி ஓடை மேட்டில் வாழும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் 1991—92-ல் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

49—

அந்தியூர்—வெங்கட்ரெட்டியூர் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்.

வினா எண் 1344—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் கண்ணப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த வெங்கட்ரெட்டியூரில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு 1991-92-ல் வீடு கட்டித்தர அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சா :

(அ) மற்றும் (ஆ) : ஐவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

50—

சென்னை மாநகராட்சியில் துப்புரவுப் பணியில் உள்ள வாகனங்கள்.

வினா எண் 1597—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் குப்பை துப்புரவுக்காக செயல்படும் வாகனங்கள் எத்தனை ?

(ஆ) இவற்றுள் லாரிகள், மாட்டு வண்டிகள் கை தள்ளு வண்டிகள் எத்தனை உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) வாகனங்கள் ..	1,177
(ஆ) லாரிகள்	237
மற்றவகை இயந்திர வண்டிகள்	183
மாட்டு வண்டிகள்	731
கை தள்ளு வண்டிகள்	26

1993 அக்டோபர் 29]

51—

திருவோணம்—பாதரங்கோட்டை (வ) மேலக் கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 1845—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) மேலக்கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அர சால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத் தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந் தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

52—

திருவோணம்—அதம்பை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 1971— திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வ) ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அர சால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத் தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந் தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

53—

நகராட்சி, மாநகராட்சிகளில் வீட்டு வரியை முறைப்படுத்துதல்.

வினா எண் 2243—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டுவரியை நிர்ணயம் செய்ய நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு குழு ஒன்று நிறுவப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வீட்டுவரியை நிர்ணயம் செய்ய குழு அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

54—

சென்னை—பிராட்வே பேருந்து நிலையம் சீர்படுத்துதல்.

வினா எண் 2625—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் உள்ள பிராட்வே பேருந்து நிலையம் சீர்கெட்டு இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதை சீர்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை பிராட்வே புறநகர் பேருந்து நிலையச் சீர்கேடு அடைந்துள்ளதை அரசு அறிந்துள்ளது. போதிய இடவசதி இன்மையால் சீரமைக்க இயலவில்லை. இப்பேருந்து நிலையத்தைப் பிரித்து, மாதவரம், கோயம்பேடு. ஆலந்தூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்க கருதப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 29]

55—

பேராவூரணி—மணவயல் காந்தி நகர் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 2354—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பாலத்தளி ஊராட்சி மணவயல் காந்திநகர் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

56—

பரமக்குடி நகராட்சியில் கைப்பம்புகளின் எண்ணிக்கை.

வினா எண் 2395—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் உள்ள கைப்பம்புகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் உபயோகத்தில் இல்லாமல் இருக்கும் கைப்பம்புகளை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் உள்ள கைப்பம்புகளின் எண்ணிக்கை 58.

(ஆ) இவற்றில் உபயோகிக்க முடியாமல் பழுதான பம்புகளை அவ்வப்போது நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து சீர் செய்யப்பட்டு வருகிறது.

57—

ஆலங்குளம்—மதவக்குறிச்சி ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்.

வினா எண் 2591—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், மதவக்குறிச்சி கிராமத்தில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு 25 வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா;

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

58—

சேதுபாவா சத்திரம்—காந்திநகர் ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 3093—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் காந்திநகர் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

59—

சங்கரன் கோயில் வணிக வளாகம்

வினா எண் 4066—திரு. தி. சாத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் நகரில் சங்கரன்கோயில் ரோட்டில் ஒரு வணிக வளாகம் (Shopping Complex) கட்டுவதற்கு திட்டம் ஆய்வு செய்யப்பட்டு உள்ளதை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்டும் பணி தொடங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இராஜபாளையம் நகரில் சங்கரன்கோயில் ரோட்டில் வணிக வளாகம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

60—

பரங்கிப்பேட்டை-சேந்திரக்கிள்ளை காலனிக்கு குடிநீர் வசதி.

வினா எண் 4160—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சேந்திரக்கிள்ளை காலனிக்கு குடிதண்ணீர் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இங்கு நீராதாரம் உருவாக்கும் பணி இவ்வாண்டிலும் ஏனைய பணிகள் வரும் நிதியாண்டிலும் (1993-94) முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் இரண்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 28 பொதுக் குழாய் மேடைகளும் அமைத்து நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் தண்ணீர் வழங்கப்படும்.

61—

பரங்கிப்பேட்டை, சேந்திரக்கிள்ளை காலனியில் தொகுப்பு வீடுகள்

வினா எண் 4135—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சேந்திரக்கிள்ளை காலனியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1993 அக்டோபர் 29]

62—

சென்னை, சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் சுரங்க பாதை

வினா எண் 4383—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடு இரயில்வே கேட் ஜன நெருக்கடி அதிகம் உள்ளதால் சுரங்கப் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஜோன்ஸ் ரோட்டில் இரயில்வே சுரங்கப்பாதை கட்டுவதற்கு புராஜெக்ட் மேனேஜ்மெண்ட் குருப் அவர்களால் வரைபடம் நிர்ணயம் செய்து, நிதி ஆதாரம் மற்றும் சென்னை மாநகராட்சியால் நில ஆர்ஜிதப் பணிகள் முடிவுற்ற பின்னர் இரயில்வே துறையினரின் ஒப்புதலுடன் சுரங்கப்பாதை கட்டும் பணி தொடங்கப்படும்.

63—

சென்னை, நுங்கம்பாக்கம் மகாத்மா காந்தி சாலை பெயர் மாற்றம்

வினா எண் 4944—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுங்கம்பாக்கம் ரோட்டுக்கு உத்தமர் காந்தி ரோடு என்று பெயர் வைக்கப்பட்டதை மகாத்மா காந்தி ரோடு என மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சென்னை, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலைக்கு மகாத்மா காந்தி சாலை எனப் பெயர் 2—7—1993 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

64—

அவினாசி—வள்ளியம்பாளையம் பெண்கள் பயன்படுத்த கழிவறைகள் கட்டுதல்

வினா எண் 6041—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி வட்டம், வள்ளியம்பாளையத்திலுள்ள பெண்களுக்குப் பயன்படுகிறவகையில் கழிவறை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்பெறும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கோவை மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், செம்பியநல்லூர் ஊராட்சி வள்ளியம்பாளையத்தில் 1986-87-ம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பொது கழிப்பிடம் கட்டப்பட்டு சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது.

65—

கந்தர்வகோட்டை—பட்டுக்கோட்டை சாலையை பழுதுபார்த்தல்

வினா எண் 6359— திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் சிவந்தான்பட்டி கிராமத்திற்குச் செல்லும் சாலை பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி, எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1993 அக்டோபர் 29]

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக் கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் சிவந்தான்பட்டி கிராமத்திற்கு ச்செல்லும் சாலை நல்ல நிலையிலுள்ளது. இதை தார் சாலையாக மேம்பாடு செய்ய திட்டம் ஏதும் இல்லை.

66—

சேதுபாவாசத்திரம், எரலிவயல் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்

வினா எண் 6487—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அழகிய நாயகிபுரம் ஊராட்சி, எரலிவயல் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

67—

சென்னை, நியூ ஆவடி சாலையின் வடக்குப் புறத்தில் மாநகராட்சிக் குப்பை, கழிவுகள் கொட்டப்படுதல்

வினா எண் 6515—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நியூ ஆவடி சாலையில் கீழ்ப்பாக்கம் வாட்டர் டேங்க் பகுதியிலிருந்து வில்லிவாக்கம் சந்திப்பு (கொன்னூர் நெடுஞ்சாலை) வரை சாலையில் வடக்குப்புறம் மாநகராட்சி

கன்சர்வன்சியின் குப்பை மற்றும் கழிவுகள் கொட்டப்பட்டு வருவது அரசு அறியுமா?

(ஆ) இதன் காரணமாக அதனையொட்டியுள்ள ரெட்ஹில்ஸ் ஏரியிலிருந்து கீழ்ப்பாக்கம் வாட்டர்டேங்க் நிலையத்திற்கு கொண்டு வரப்படும் குடிநீர் குழாயில் பாதிப்புகள் ஏற்படுவதும் அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 1991-ஆம் ஆண்டு மழை காலத்தின் போது துப்புரவு செய்யப்பட்ட குப்பைகள் முறையின்றி கொட்டப்பட்டதை சென்னை மாநகராட்சி அறிந்து இதனை தடுத்து நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) ஏற்கனவே குப்பை மற்றும் கழிவுகள் கொட்டப்படுவது தடுக்கப்பட்டுவிட்டதால், வாட்டர்டேங்க் நிலையத்திற்கு குடிநீர் கொண்டுவரும் குழாயில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

(இ) குப்பை கொட்டுவது முழுமையாக தடுக்கப்பட்டு விட்டதால் இக்கேள்வி எழவில்லை.

68—

சென்னை—கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய்கள் மீதுள்ள பாலங்களை விரிவுபடுத்துதல்

வினா எண் 6516—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எந்தெந்த சாலைகளில் கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் குறுக்கிடும் இடங்களில் ஏற்கனவே உள்ள பாலங்களை விரிவுபடுத்திக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) இவற்றில் இதுவரை விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலங்கள் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சென்னை நகரில் கூவம் கால்வாய் குறுக்கிடும் இடங்களில் ஏற்கனவே உள்ள பாலங்களை விரிவுபடுத்திக் கட்ட திட்டமிடப்பட்ட பாலங்கள் விவரம்:

1. நுங்கம்பாக்கம் பாந்தியன் சாலை மற்றும் எத்திராஜ் சாலை சந்திப்பில் உள்ள ஆண்டர்சன் பாலம் (இது முடிவுற்றது)

2. கன்னிமாரா ஒட்டல் அருகில் உள்ள பின்னி பாலம்,

3. ''சித்ரா'' திரையரங்கிற்கு அருகில் உள்ள ஹாரிஸ் பாலம்.

4. சிந்தாதிரிப்பேட்டை அருணாசலம் சாலை மற்றும் பாந்தியன் சாலை சந்திப்பில் உள்ள ஆண்ட்ரூஸ் பாலம்.

சென்னை நகரில் பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கிடும் இடங்களில் விரிவு படுத்தப்படவுள்ள பாலங்கள்.

1. மயிலை தண்ணீர் துறை மார்க்கெட் அருகில் உள்ள முண்டக்கன்னி அம்மன் பாலம் (முடிவுற்றது).

2. சீமாட்டி வெலிங்டன் கல்லூரி அருகில் உள்ள டாக்டர் பெசன்ட் சாலைப் பாலம்.

3. கச்சேரி சாலை தபால் நிலையம் அருகில் உள்ள கச்சேரி சாலை பாலம்,

4. மைலாப்பூர் லஸ் அருகில் உள்ள இராமகிருஷ்ண மடம் சாலை பாலம்.

(ஆ) (1) நுங்கம்பாக்கம் பாந்தியன் சாலை மற்றும் எத்திராஜ் சாலை சந்திப்பில் உள்ள ஆண்டர்சன் பாலம்.

2. மயிலை தண்ணீர் துறை மார்க்கெட அருகில் உள்ள முண்டக்கன்னி அம்மன் பாலம்,

69—

சேதுபாவா சத்திரம் – கூத்தாடி வயல் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 6568—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், கூத்தாடிதவயல் ஆதி திராவிடர்களுக்கு 30 காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70—

வினா எண் 6564—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சைவுர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதி திராவிடர்களுக்கு மேலும் 10 வீடுகள் கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மையஅரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

71—

சேதுபாவா சத்திரம்—ஆண்டிவயல் காரிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்,

வினா எண் 6737—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், ஆண்டிவயல் காரிபுரம் ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல் படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

72—

புவனகிரி — காமராஜ் நகரில் தொகுப்பு வீடுகள்

வினா எண் 6826—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள காமராஜ் நகருக்கு தொகுப்பு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்

படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

73—

சேதுபாவாசத்திரம் —மருதங்காவயல் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 6975—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்காவயல் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணி களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

74—

சேதுபாவா சத்திரம்—நாடியம் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண். 7055—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஆதிதிராவிடர்களுக்கு மேலும் 20 தொகுப்பு வீடுகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

பேராவூரணி – களத்தூர் மாவடுகுறிச்சி சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 7306—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கில் இருந்து மாவடுகுறிச்சி வரை செல்லும் சாலையை செப்பனிட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கிழக்கில் இருந்து மாவடுகுறிச்சி வரை செல்லும் சாலை அருகில் நெடுஞ்சாலை துறை பிரதான சாலை சேல்வதால் மேற்படி சாலை முக்கியத்துவம் அற்றதாகிவிட்டது, ஆதலால் மேற்படி சாலையை மராமத்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

76—

பேராவூரணி—தென்னங்குடி ஆவணம் சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7039—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், போராவூரணி ஒன்றியம், தென்னங்குடி சாலையிலிருந்து சீவன்குறிச்சி, பழைய நகரம் வழியாக ஆவணம் வரை செல்லும் சி. எம். பி. ஆற்றுக்கரை சாலையை

மராமத்து செய்து தார்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், தென்னங்குடி — ஆவணம் சாலை வழி சீவன்குறிச்சி-பழைய நகரம் பழைய பேராவூரணியை வந்தடையும் சாலையை மராமத்து செய்ய போதிய நிதி வசதி இல்லாததால் அவ் வேலையை எடுத்துச் செய்ய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

77—

சேதுபாவாசத்திரம்—நாராண்டி ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7336—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாராண்டி ஆதிதிராவிடர்களுக்கு மேலும் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருு குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78—

சேதுபாவாசத்திரம்—நடுவிக்குறிச்சி தெற்கு ஆதிதிராவிடர் களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7155—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு 20 காலனி வீடுகள் கட்டி கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணி களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

79—

பேராவூரணி—புணவாசல் இராமகிருஷ்ணாபுரம் சாலையை கப்பி சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7170—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் புணவாசல் ஊராட்சி வாடிக்காட்டில் இருந்து இராமகிருஷ்ணா புரம் வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பி சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், புணவாசல் வாடிக்காட்டிலிருந்து இராமகிருஷ்ணாபுரம் வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பி சாலையாக மாற்றித்தர செயற்குறிப்பு ஏதும் இல்லை.

80—

புவனகிரி—தட்டான் ஓடை ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 7624—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக் விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் தட்டான் ஓடை ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

81—

கந்தர்வக் கோட்டை—புனக்குளம்—அச்சுதாபுரம் மற்றும் கொத்தகப்பட்டி—நம்புரான்பட்டி சாலைகளில் பாலங்கள் கட்டுதல்.

வினா எண் 7772—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி கந்தர்வக்கோட்டை ஒன்றியம்—புனக்குளம்—அச்சுதாபுரம் சாலையிலும், கொத்தகப்பட்டி—நம்புரான்பட்டி சாலையிலும் பெரிய பாலங்களைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை தொகுதி கந்தர்வக்கோட்டை ஒன்றியம் புனக்குளம் — அச்சுதாபுரம் சாலையிலும், கொத்தகப்பட்டி—நம்புரான்பட்டி சாலையிலும் பெரிய பாலங்களைக் கட்ட தாம்போகி கட்ட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

1993 அக்டோபர் 29]

82—

புவனகிரி—காரைக்காட்டு சாவடி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 7800—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி, காரைக்காட்டு ாவடி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

83—

பரங்கிப்பேட்டை—சில்லாங்குப்பம் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 8007—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சில்லாங்குப்பம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

84—

பரங்கிப்பேட்டை—மஞ்சக்குழியில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 8173—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மஞ்சக்குழியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

85—

ஆத்தூர் நகராட்சி சாலைகளைப் பராமரித்தல்

வினா எண் 8445—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆத்தூர் நகராட்சியில் பைத்தூர் சாலை, கோட்டை சாலை, கடை வீதி, பாரஸ்ட் சாலை, விதைப்பண்ணை சாலை மற்றும் அனைத்து சாலைகளும் பழுதடைந்துள்ளதால்

வெள்ள நிவாரண நிதி போன்ற சிறப்பு நிதி மூலம் உடனடியாக பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆத்தூர் நகராட்சிக்கு சாலைகளை பராமரிப்பதற்காக 'நகராட்சி நகர்புற வளர்ச்சி நிதியிலிருந்து' ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

86—

ஆலங்குளம் — மாறாந்தை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 8660—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம் மாறாந்தை கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயற்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

87—

கோயம்புத்தூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் ஒதுக்குதல்.

வினா எண் 8773—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி துப்புரவு தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டப்பட்டு டணி மூப்பு அடிப்படையில் கொடுக்காமல் தவறாக கொடுக்கப்பட்டுள்ளதை அரசு

ஆய்ந்து பணிமூப்பு அடிப்படையில் வீடுகள் ஒதுக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இந்நாள் வரையிலும் கோவை மாநகராட்சியில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு டணி மூப்பு அடிப்படையில் மட்டுமே செய்யப்பட்டு வருகின்றது. தற்போது கோயமுத்தூர் மாநகராட்சி வி.எச். பாதையில் புதிதாக 288 குடியிருப்புகள் கொண்ட அடுக்கு மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யும் தருவாயில் உள்ளது. மீத முள்ள பணியாளர்களுக்கு, குடியிருப்புகள் பணிமூப்பு அடிப் படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

88—

குன்றண்டார் கோயில் — கொப்பம்பட்டி மங்களூர் சாலை மற்றும் பாப்புடையன்பட்டி — நரங்கியம்பட்டி சாலை களில் ஜல்லி பரத்துதல்

வினா எண் 10057—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

குன்றண்டார்கோயில் ஒன்றியத்தில் உள்ள கொப்பம்பட்டி மங்களூர் சாலை, பாப்புடையன்பட்டி — நரங்கியப்பட்டி சாலைகளுக்கு ஜல்லி பரத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குன்றண்டார்கோயில் ஒன்றியத்தில் உள்ள கொப்பம்பட்டி — மங்களூர் சாலை, பாப்புடையன்பட்டி — நரங்கியம்பட்டி சாலைகளுக்கு ஜல்லி பரத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

1993 அக்டோபர் 29]

89—

செங்குறிச்சி— எஸ். கருப்பம்பட்டி மேல்நிலை நீர்த்தொட்டியில் போதுமான நீர்

வினா எண் 10364— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், செங்குறிச்சி பஞ்சாயத்திற்குட்பட்ட எஸ். குருப்பம்பட்டி மேல்நிலை தொட்டி இருந்தும் போதுமான நீர்வரத்து இல்லாத நிலைபற்றி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அங்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மோட்டார் பம்ப் செட் அமைத்து மேல் நிலைத் தொட்டிக்கு நீரேற்றும் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

90—

கோவை— செல்வபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்

வினா எண் 10472— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை செல்வபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு புதியக் கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கோவை செல்வபுரம் ஆண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு 4 புதிய வகுப்பறைகள் கட்ட ரூ. 4 இலட்சத்திற்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 5 புதிய வகுப்பறைகள் கட்ட ரூ. 5

இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி பெற்று கட்ட திட்டம் உள்ளது.

(ஆ) 1993-94ஆம் ஆண்டில் கட்டப்படும்.

91—

ஆண்டிமடம் — ஸ்ரீராமன் சாங்கியம், நாகம் பந்தல், திருக்களப்பூர் கோவிலில் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்

வினா எண் 10602—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஸ்ரீராமன் சாங்கியம், நாகம் பந்தல், திருக்களப்பூர் கோவில் வாழ்க்கை போன்ற கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

92—

ஆண்டிமடம் — இடையக்குறிச்சி, குவாக்கம்கொடுக்கர், விளந்தை, காட்டாத்தூரில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்

வினா எண் 10604—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் இடைய குறிச்சி, குவாக்கம்கொடுக்கர், விளந்தை, காட்டாத்தூர் போன்ற கிராமங்

களில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தொகுப்பு வீடுகள் எப்போது கட்டப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ்மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணி களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

93—

போரூர் — கேசவபுரம் படவேடு கிராமங்களுக்கு நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 10919— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போரூர் ஒன்றியம், கேசவபுரம் படவேடு கிராமங்களுக்கு இரண்டு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கேசவபுரம் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்படும். படவேடு குடியிருப்பிற்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் இல்லை.

(ஆ) கேசவபுரம் குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டில் (1993–94) நிதி நிலையைப் பொறுத்து திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். படவேடு குடியிருப்பில் ஆழ் துளைக் கிணறு

ஒன்றை ஆதாரமாகக் கொண்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

94—

போளூர் — அல்லிநகரில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 10920— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேரூராட்சி அல்லிநகர் பகுதியில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதற்கான உத்தேச மதிப்பீடு தயாரிக்கும் பணி முடியும் தருவாயிலுள்ளது. அதற்கு வாரியம் மற்றும் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டப் பணிகள் துவங்கப்படும்.

95—

பரமக்குடி — டி. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 11320— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் டி. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன் பெறும் ஊர்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள டி கருங்குளம் குடியிருப்பு திருவாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்ந்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 6.85 இலட்சங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன; இக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன் பெறும் கிராமங்கள் விவரம் பின்வருமாறு :—

1. திருவாடி
2. தேவேந்திர நல்லூர்
3. பாண்டிக்கண்மாய்
4. டி. இலந்தைக்குளம்
5. டி. கருங்குளம்.

96—

பொள்ளாச்சி — பாலக்காடு சாலையைப் புதுப்பித்தல்.

வினா எண் 11135—திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், பொள்ளாச்சி பாலக்காடு சாலையிலிருந்து ஜலத்தூர் செல்லாண்டி, கௌண்டன் புதூர் வழியாக இராமப்பட்டினம் சாலையை இணைக்கும் பழுதடைந்த தார் சாலையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், பொள்ளாச்சி பாலக்காடு சாலையிலிருந்து ஜலத்தூர் செல்லாண்டி, கௌண்டன் புதூர் வழியாக ராமப்பட்டினம் சாலையை இணைக்கும் 2 கி.மீ.

சாலையில் 1.40 கி.மீ. சாலையைப் புதுப்பிக்க 1.54 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 0.60 கி.மீ. சாலை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1993-94-ல் புதுப்பிக்கப்படும்.

97—

பரமக்குடியில் குடிநீர்க் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை

வினா எண் 11366—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் குடிநீர் ஆழ்குழாய்க் கிணறுகள் எத்தனை செயல்படுகின்றன ?

(ஆ) இவற்றுள் பயன்படாத ஆழ் குழாய்க் கிணறுகள் எத்தனை ?

விடை —

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப் பெற்றவுடன், அக்கிணறுகளில் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு செயலுக்குக் கொண்டு வரப்படுகின்றன. பரமக்குடி தாலுக்காவில் 306 கையிறைப்பான்கள் செயல்படுகின்றன.

(ஆ) 5 கையிறைப்பான்கள் தற்போது பயன்படாமல் உள்ளன.

98—

சத்தியமங்கலம் — அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு புதிய அறங்காவலர் குழு.

வினா எண் 822— திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு புதிய அறங்காவலர் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோவிலுக்கு 6 பரம்பரை அறங்காவலர்களுடன் 5 பரம்பரை அல்லாத அறங்காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

99—

திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி.

வினா எண் 3265— திருமதி வி.ஜி. மணிமேகலை : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூரில் உள்ள சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்படல் வேண்டுமா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருவாரூரில் உள்ள சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்த அரசால் ரூ. 9 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரால் நிரந்தர மின் வசதியுடன் 7–10–1992-ல் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

100—

செங்கற்பட்டு கண்ணாபேட்டை அருள்மிகு சிதம்பர சுவாமிகள் திருமடத்தின் வளர்ச்சிப் பணிகள் குன்றுதல்.

வினா எண் 4487— திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டம், கண்ணாபேட்டையில் இருக்கும் அருள்மிகு சிதம்பர சுவாமிகளின் திருமடத்தை திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலின் அரசு நிர்

வாகத்தோடு இணைத்ததிலிருந்து திருமடத்தின் வளர்ச்சி குன்றியுள்ளது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) திருமடத்தின் வளர்ச்சி குன்றவில்லை. திருமடத்திற்குப் போதுமான வருமானம் இல்லை. இருப்பினும், திருக்கோயிலின் வருமானத்திலிருந்தும் செலவழிக்கப்பட்டு, திருமடத்தில், எல்லா திருவிழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு திருமடம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

101—

புவனகிரி சொக்கன்கொல்லை மாரியம்மன் கோயில் புதுப்பித்தல்.

வினா எண் 8366—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் சொக்கன்கொல்லையில் மாரியம்மன் கோவில் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இந்த திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு, சிறிய திருக்கோவில்கள் பட்டியலில் பதியப்பட்டுள்ளது. கிராமப் பொது மக்களின் நன்கொடை மூலமாக இத்திருக்கோயில் பழுது பார்க்கப்பட்டு, கடந்த 6-5-1992-ல் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றுள்ளது.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமைக்க இடம் ஒதுக்கி, நன்கொடை வழங்கியமைக்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியச் செய்தியை என் சார்பில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் சிறப்புக்குரிய உறுப்பினராகத் திகழ்ந்தவரும், இந்த தேச விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவருமான, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய ஜெயந்தி விழா நாளைய தினம், வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, அவர் இந்த தேச விடுதலைக்காகச் செய்திட்ட எண்ணற்ற தியாகங்களை மனதிலே கொண்டு அந்தத் தெய்வீகத் திருமகனுக்கு சென்னை நகரத்தில் சிலை அமைத்திட வேண்டுமென்கிற கோரிக்கையை ஏற்று, அண்ணா சாலையில் பிரதானமான நந்தனம் சந்திப்பில் இடமும் வழங்கி, அந்தச் சிலை வைப்பதற்கு உரியவர்களிடத்தில் பிளவு இருந்த காரணத்தால் அரசாங்கத்தின் சார்பில் ஒரு குழுவையே நியமித்து, அந்தக் குழுவுக்கு என்னைத் தலைவராக இருக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையை அமைக்கிற பணிக்காக, நாளைய தினம் தேவர் திருமகனுடைய ஜெயந்தி விழா வருவதை முன்னிட்டு, அந்தச் சிலை அமைப்புக்கு என்று முதன் முதலாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை மனமுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். பசும்பொன்— தேவர் அவர்களுடைய பிறந்தநாளும், மறைந்த நாளும் ஒரே நாள் என்கிற சிறப்புக்குரிய அந்தப் பெருமகனின் ஜெயந்தி விழா நாளைய தினம் நடைபெறுவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்தப் பெரு நிதிக்காக, முதன் முதலில் வழங்கியிருக்கிற இந்த நிதிக்காக, அந்தக் குழுவின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)